Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 மாசி 12 வெள்ளிக்கிழமை (24.02.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :89

★ அடுத்த கட்டப் பேச்சு ஏப்ரல் 19 - 21
★ படையினருக்கு எதிரான தாக்குதல் நிறுத்தம்
★ சிறுவர் நலன் பேணல்
★ பல மணிநேர இழுபறியின் பின் கூட்டறிக்கை
★ தனித்தனியே செய்தியாளர் மாநாடு

# அரச படையினர் தவிர்ந்த எவரும் ஆயுத நடவடிக்கையில் ஈடுபடார்!

## ஜெனீவாப் பேச்சுகளில் அரசு உறுதியளிப்பு

- ஜெனீவாவில் இருந்து ந.வித்தியாதரன் -

ஜெனீவா,பெப்ரவரி24

போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையைச் செம்மையாக நடைமுறைப்படுத்துவதற்கான உறுதிப்பாட்டை அரசு - புலிகள் இரு தரப்பினரும் மீண்டும் ஒரு தடவை ஜெனீவாவில் உறுதிப்படுத்தியுள்ளனர். பயமுறுத்தல்கள், வன்முறைகள், கடத்தல்கள், கொலைகள் என்பன நடக்காமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதற்கும் இரு தரப்பினரும் கூட்டாக இணங்கியுள்ளனர்.

பொலிஸ், பாதுகாப்புப் படையினருக்கு எதிராக வன்முறைகளை நடக்காது இருப்பதைப் புலிகளும், படையினரைத் தவிர வேறு எந்தத் தரப்பினரும் ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபடாதிருப்பதை உறுதிப்படுத்த அரசும் ஜெனீவாப் பேச்சுகளில் பரஸ்பரம் உறுதிமொழிகளை வழங்கியுள்ளன. இதனடிப்படையில் அடுத்த சுற்றுப் பேச்சுகள் ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை நடைபெறும். (18 ஆம் பக்கம் பார்க்

## நான்கு முக்கிய விடயங்கள் பேச்சில் ஆராயப்பட்டன



### செய்தியாளர் சந்திப்பில் தமிழ்ச்செல்வன்

ஜெனீவா,பெப்.24

★ வடக்கு - கிழக்கில் இருந்து ஆயுதக் குழுக்கள் அகற்றப்பட வேண்டும்.

★ உயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்து படையினர் வெளியேறி மக்கள் மீண்டும் குடியமரக்கூடிய சூழல் உருவாக்கப்பட வேண்டும். இராணுவ நெருக்குவாரக் கெடுபிடிகள் இல்லாமல் செய்யவேண்டும்.

★ கடலில் சுதந்திரமாக மக்கள் தொழிலில் ஈடுபடக்கூடிய சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

★ எமது போராளிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல் பணியாற்ற வேண்டும். அதற்கு ஆயுதக் குழுக்கள் முடக்கப்பட்டு உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும்.

இந்த நான்கு விடயங்களும் எங்களால் முன்வைக்கப்பட்டன.

ஆயுதக்குழுக்கள் விவகாரத்தில் நீண்ட நேரம் - இருநாள்களும் (18 ஆம் பக்கம் பார்க்க)

## பாலசிங்கம் தம்பதியரின் நூல்கள் அரச பிரதிநிதிகளுக்கு அன்பளிப்பு!

ஜெனீவா,பெப்.24

ஜெனீவாப் பேச்சுகளில் கலந்துகொண்ட அரச தரப்புக் குழுவினருக்கு பாலசிங்கம் தம்பதியர் எழுதிய தமிழர் பிரச்சினையை விளக்கும் நூல்கள் நேற்று அன்பளிப்புச் செய்யப்பட்டன.

தமிழீழப் போராட்ட வரலாற்றை வெளிப்படுத்தும் வகையில் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூல் மற்றும் அடேல் பாலசிங்கம் அம்மையார் எழுதிய 'சுதந்திர வேட்கை' என்ற நூல் ஆகியவற்றை அரச தரப்புப் பிரதிநிதிகளுக்கு வழங்கினர்.

"தமிழர்களின் பிரச்சினைகள் பற்றி தெரியாதிருக்கும் நீங்கள் இந்த நூல்களைப் படித்து (18 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பகுதியை நோக்கி படையினர் எறிகணைத் தாக்கு

கிளிநொச்சி,பெப்.24

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியான யாழ்ப்பாணம், இத்தாவில், சதாநகர் மக்கள் குடியிருப்பு மீது நேற்று வியாழக்கிழமை ஆட்லறி எறிகணைத் தாக்குதலை படையினர் நடத்தினர் என்று புலிகள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

அதிகாலை 4.50 மணிக்கு இந்த எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

புலிகளின் முகமாலை முன்னரங்கப் பகுதியின் பின்புறமாக 200 மீற்றர் தூரத்தில் இந்த எறிகணை வீழ்ந்து வெடித்துள்ளது.

இந்த எறிகணைத் தாக்குதலில் எவருக்கும் பாதிப்பு எற்படவில்லை. இத்தாவில், சதாநகர் கிராமம் கடந்த காலப் போரினால் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றப் பட்ட கிராமமாகும்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே.....

**கல்விச்சுடர்**

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் இன்று பிரசுரமாகின்றது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன்கருதி வெளியாகும் மாதிரி வினாத்தாள்கள் திங்கள் முதல் வெளியாகும்.

## பொலீஸ் மா அதிபர் மீது எரிந்து வீழ்ந்தார் பாலா!



ஜெனீவா, பெப். 24

இரண்டாவது நாளாக ஜெனீவாவில் நேற்று நடைபெற்ற பேச்சின் போது பொலீஸ் மா அதிபர் சந்திரா பெர்ணான்டோ மீது எரிந்து வீழ்ந்தார் புலிகளின் பேச்சுக் குழுத் தலைவர் அன்ரன் பாலசிங்கம்.

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த மாவீரர் கேணல் கௌசல்யன் கொலையுடன் சம்பந்தப்பட்ட நபர்களை இலங்கைப் பொலீஸார் இதுவரை கண்டறியவில்லை என்றும் -

அதற்கான நடவடிக்கைகளை அவர்கள் எடுக்கவில்லை என்றும் - தெரிவித்தார் அன்ரன் பாலசிங்கம்.

அதற்குப் பதிலளித்த பொலீஸ் மா அதிபர், இலங்கையில் இதுபோன்ற பல விசாரணைகள் குற்றவாளிகளைக் கண்டறியாமலேயே நீண்டகாலமாகக் கிடக்கின்றன என்றார். உதாரணத்திற்கு யாழ்ப்பாண முன்னாள் மேயர் துரையப்பா சுட்டுக்கொல்லப்பட்ட வழக்கில்கூட குற்றவாளிகள் இதுவரை கண்டறியப்படவில்லை என்று அவர் தெரிவித்தார்.

அவரது பொறுப்பற்ற தனமான இந்தப் பதிலால் சீற்றமடைந்த பாலசிங்கம், அவர் மீது சீறிப் பாய்ந்தார். சரியான விவரங்கள் தெரியாமல் பேச்சு மேசைக்கு (18 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு திடீர் காய்ச்சல்

## ஐம்பது பேர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதி கல்லூரி இன்றுமுதல் தற்காலிகமாக மூடப்படுகிறது

- உதயன் அலுவலகச் செய்தியாளர்கள் -

யாழ்ப்பாணம்,பெப்.24

காய்ச்சல் மற்றும் வாந்தி உபாதைகளால் பாதிக்கப்பட்ட மானிப்பாய் மகளிர் கல்லூரியின் 50 மாணவிகள் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

இதனால் மானிப்பாய் பகுதியில் பதற்றமானதும் அதே பரபரப்பானதுமான சூழ்நிலை நிலவியது -

அதேவேளை, காய்ச்சல் மேலும் பரவுவதைத் தடுக்கும் நோக்குடன் கல்லூரியை இன்றுமுதல் தற்காலிகமாக மூடுவது என முடிவுசெய்யப்பட்டுள்ளது.

காய்ச்சல், தலையிடி, வாந்தி போன்ற உபாதைகளால் பாதிக்கப்பட்ட மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவிகள் அம்புலன்ஸ் மூலம் கூட்டிவரப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

திடீரென ஏற்பட்ட இந்த நிலைமை குறித்து கல்லூரி அதிபர் திருமதி ஜெயவீரசிங்கத்திடம் கேட்டபோது அவர் கூறியதாவது:-

எமது கல்லூரியில் கடந்த வெள்ளிக்கிழமை வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இடம்பெற்றது அதன்பின்னர் கடந்த சில தினங்களாக பல மாணவிகள் காய்ச்சல், தலையிடி, வாந்தி ஆகிய நோய்களினால் பீடிக்கப்பட்டிருந்தனர்.

மேற்படி நோயால் பலர் வயது வேறுபாடின்றி தரம் ஒன்று முதல் உயர்தர வகுப்பு வரையான மாணவிகளை பீடித்துள்ளன. நேற்றுக் காலை வழமைபோல் நடைபெற்ற இறைபிரார்த்தனையின்போது ஒருசில மாணவிகள் மயக்கமடைந்தனர். அதனைவிட வகுப்பில் அநேகமான மாணவிகள் சோர்வடைந்து காணப்பட்டனர். இந்த ஒருவகைக் காய்ச்சல் குணம் குறி காணப்பட்டதால் அவர்களை மருத்துவ பரிசோதனை செய்வதற்கென மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியிடம் தொடர்புகொண்டோம்.

பொது சுகாதார வைத்திய அதிகாரிகள், பரிசோதகர்கள் பலர் கல்லூரிக்கு வருகை தந்தனர் அவர்கள் பாதிக்கப்பட்ட 36 மாணவிகளை அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர்.

ஏனைய 40 மாணவிகள் கல்லூரி மண்டபத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தனர். வைத்திசாலைக்குக் கொண்டுசென்ற மாணவிகள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் அது ஒருவித வைரஸ் காய்ச்சல் என்றும் கூறப்பட்டது.

இதன் பின்னர் கல்லூரியில் தடுத்துவைக்கப்பட்டிருந்த மாணவிகள் வீடுசெல்ல அனுமதிக்கப்பட்டனர். வைத்தியசாலையில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட மாணவிகள் சிகிச்சை பெற்றுவருகின்றனர் என்றார்.

**பீதிகொள்ளத் தேவையில்லை**

மாணவிகள் நோய்வாய்ப்பட்டது தொடர்பாக மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.எல்.ஜெபராஜாவிடம் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:-

இது ஒரு வைரஸ்தொற்றினால் ஏற்பட்டிருக்கும் காய்ச்சல் என்று மருத்துவ அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இது குறித்து எந்த வித பீதியும் கொள்ளத்தேவையில் என்று அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் கருத்துத்தெரிவிக்கையில்:-

இந்தக் காய்ச்சல் தொடர்பாக எவரும் பீதி கொள்ளத் தேவையில்லை. இது ஒரு சாதாரண காய்ச் சலே. இது தொடர்பான தடுப்பு நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் மேற் கொண்டுள்ளனர். இது குறித்து சுகாதார அமைச்சுக்கு அறிவித் துள்ளோம் என்றார்.

(அ-13-7-12-15-139)

## பறவைக் காய்ச்சலுக்கான அறிகுறி எதுவும் இல்லை

### டாக்டர் சொலமன் தகவல்

யாழ்ப்பாணம்,பெப்.24

மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவிகள் சாதாரண வைரஸ் காய்ச்சலாலேயே பீடிக்கப்பட்டுள்ளனர். அவர்களைப் பறவைக் காய்ச்சல் பீடித்ததற்கான அறிகுறி எதுவும் இல்லை - என்று யாழ். தாய், சேய்நல அதிகாரி டாக்டர் சி.எஸ்.சொலமன் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக கருத்து வெளியிடுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவிகளை பரிசோதனை செய்தோம்.

அவர்கள் ஒருவகை வைரஸ் காய்ச்சலுக்கே இலக்காகியுள்ளனர். உடலுக்கு ஒவ்வாமையான பொருள்களை உட்கொண்டிருந்தாலும் இத்தகைய காய்ச்சலால் பீடிக்கப்படலாம்.

நஞ்சுப் பதார்த்தம் உள்ள உணவை உட்கொள்வதன் மூலம் ஏற்படும் காய்ச்சலாக இது இருக்காது.

பறவைக் காய்சலுக்கான அறிகுறி மற்றும் புறநிலைகள் காணப்படவில்லை.

ஒரு வகையான வைரஸ் காய்ச்சல் என்ற முடிவுக்கே வந்துள்ளோம் மாணவிகளின் இரத்த மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் பரிசோதனை அறிக்கை இன்று கிடைக்கும் - என்றார் அவர். (3)

## நெடுந்தீவில் இளைஞர்தினவிழா

நல்லூர்,பெப்.24

நெடுந்தீவு புனித டொன் பொஸ்கோ இளைஞர் மன்றத்தின் இளைஞர் தினவிழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு சென். அன்ரனிஸ் நிலாஜோதி முத்தமிழ் கலை அரங்கில் நடைபெறும்.

மன்றத் தலைவர் ஆ.டேவிற்சன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராக மன்றத்தின் ஸ்தாபகரும் நெடுந்தீவின் முன்னாள் பங்குத் தந்தையுமான அருட்திரு. எஸ்.செபநேசரட்ணம் அடிகளாரும் கௌரவ விருந்தினர்களாக நெடுந்தீவு மகாவித்தியாலய அதிபர் திருமதி சாரதா கிருஷ்ணதாஸ், சைவப் பிரகாச வித்தியாலய அதிபர் எஸ். சத்தியவரதன், நெடுந்தீவு கே.க.மகளிர் கல்லூரி பிரதி அதிபர் திருமதி ஜே.தர்சியஸ் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக நெடுந் தீவு இந்து மத குரு.பிரம்மஸ்ரீ கா.புவனேந்திரசர்மா, நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபைக் குரு வண.ஜோன் செல்வம், நெடுந்தீவு திருக்குடும்ப கன்னியர் மடத்தைச் சேர்ந்த அருட்சகோதரி பெர்னாண்டோ எட்றியான் ஆகியோரும் மன்ற உறுப்பினர் அருட்திரு ஜீ.அருள்நேசன், ஞா.அமல்ஜெலான், ஜே.எம்.றொபின்சன் ஆகியோரும் கலந்துகொள்வர். கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (3-111)

### மனித உரிமை மீறல்கள் குறித்து ஆராய

## பிரதேச செயலர் பிரிவுகள் தோறும் மனிதாபிமான சமாதானக் குழுக்கள்

### செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம்,பெப்.24

மனித உரிமை மீறல் சம்பவங்களை உடனுக்குடன் தெரியப்படுத்தவும் அவற்றைக் கட்டுப்படுத்தவும் உரிய நடவடிக்கை எடுப்பதற்காகவும் ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் மனிதாபிமானத்துக்கான சமாதானக் குழுக்களை அமைக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் யாழ். செயலகத்தில் மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தலைமையில் இடம்பெற்ற அனைத்துப் பிரதேச செயலர்களுக்குமான மனித உரிமைகளின் கடந்தகால, எதிர்காலச் செயற்பாடுகள் பற்றிய கலந்துரையாடலிலேயே இந்தமுடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் ஏற்பாடுசெய்யப்பட்ட இக்கலந்துரையாடலில், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பதிகாரி றோகித பிரியதர்சன, சட்ட ஆலோசகர் மு.றெமீடியஸ், விசாரணை அதிகாரி சுவேந்திரராஜா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கடந்தகாலங்களில் நடைபெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக இக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

பிரதேச செயலர்களைக் கருத்தில்கொள்ளாது படையினரால் மேற்கொள்ளப்படும் அசௌகரியங்கள் தொடர்பாகப் பிரதேச செயலர்கள் தெளிவாக எடுத்து விளக்கினர்.

இதனையடுத்தே, பிரதேச செயலக ரீதியாக மனிதாபிமானத்துக்கான சமாதானக் குழுக்களை அமைப்பது என முடிவு செய்யப்பட்டது.

சமூக சேவையில் ஈடுபடும் அரச உத்தியோகத்தர்கள் தவிர்ந்த கௌரவம் மிக்கவர்களைக் கொண்டு, பிரதேச செயலர்களால் இந்தச் சமாதானக் குழு அமைக்கப்படவுள்ளது.

இக்குழு மாதாந்தம் பிரதேச செயலகங்களில் பிரதேச செயலர் முன்னிலையில் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலக உத்தியோகத்தர்களைச் சந்தித்து, பிரதேச செயலகப் பிரிவில் இடம்பெறும் சகல மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் ஆராயப்படும். பின்னர் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்விடயம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி கருத்துத் தெரிவிக்கையில்:-

பிரதேச செயலர்களுக்குரிய பதவிக்கான அந்தஸ்தினை வழங்கக்கூடிய வகையில் படையினருக்கு அறிவுறுத்தக்கூடிய நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்.

இக்கலந்துரையாடலில் மனித உரிமை ஆணைக்குழுவிற்குரிய அதிகாரங்கள், பணிகள் தொடர்பாகவும் அதன் தற்போதைய கடந்தகாலச் செயற்பாடுகள் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது. (3-12-7)

## திருமலை செய்தியாளர்களுக்கு கொலை அச்சுறுத்தல் கடிதங்கள்

திருகோணமலை,பெப்.24

'தினக்குரல்' மற்றும் 'சுடர் ஒளி' பத்திரிகைகளின் திருகோணமலை செய்தியாளர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்து அடையாளம் தெரியாத நபர்களால் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இது தொடர்பாக வடக்கு-கிழக்கு ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜேவிக்கிரமவை திருகோணமலை ஊடகவியலாளர் சங்கத்தினர் சந்தித்து முறைப்பாடு செய்துள்ளனர்.

மரண அச்சுறுத்தலுக்கு இலக்காகியிருக்கும் ஊடகவியலாளர்கள் பற்றி ஊடக அமைச்சருக்கும் பொறுப்பு வாய்ந்த பிரிவினருக்கும் தெரிவித்துப் போதிய பாதுகாப்பிற்கும் ஏற்பாடு செய்வதாக தன்னைச் சந்தித்த ஊடகவியலாளர் சங்க உறுப்பினர்களிடம் வடக்கு-கிழக்கு ஆளுநர் உறுதியளித்துள்ளார்.

திருமலை ஸ்ரீலங்கா காவல்துறையினரிடமும் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவிடமும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

"புலிகளுக்கு உதவிய திருகோணமலையில் சமாதானத்தை சீர்குலைக்க நடவடிக்கை எடுக்கும் ஊடகவியலாளர்கள் மூவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் ஏற்கனவே கொல்லப்பட்டு விட்டார் ஏனைய இருவர் பற்றியும் தீர்மானங்களை எடுக்கவுள்ளோம் . இப்படி ஊடகவியலாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'சுடர் ஒளி' பத்திரிகையின் ஊடகவியலாளர் எஸ்.சுகிர்தராஜன் கடந்த 24 ஆம் நாள் திருகோணமலையில் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார். அவ[illegible] படுகொலை செய்தவர்கள் யார் என்[illegible] படவில்லை. (3)

## கிரிக்கெட் ஆட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.24

யாழ்.இந்துக் கல்லூரிக்கும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கும் இடையேயான - 19 வயதிற்கு உட்பட்டோருக்கான சிநேகபூர்வ கிரிக்கெட் ஆட்டம் இன்றும் நாளையும் யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (3-190)

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை ஏப்ரல் 28இல் ஆரம்பம்

### பரீட்சை ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு,பெப்.24

எதிர்வரும் ஏப்ரல் 21ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சை ஒரு வாரம் கழித்தே, அதாவது 28ஆம் திகதியே ஆரம்பமாகவுள்ளது என பரீட்சை ஆணையாளர் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு இடம்பெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் விஞ்ஞான பாட வினாத்தாள்களை மீள்திருத்தத்திற்கு உட்படுத்தி முடிவுகளை வெளியிட எடுத்த தாமதம் காரணமாகவே இப்பரீட்சை ஒருவாரத்திற்குபின் தள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை -

இந்த ஆண்டு நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு மீள் பரீட்சார்த்திகள் விண்ணப்பிப்பதற்கு வசதியாக இம்மாதம் 15 ஆம் திகதி வரை ஏற்கனவே அறிவிக்கப்பட்ட முடிவு திகதியை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை நீடித்துள்ளதாகவும் பரீட்சை ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (3-12)

## மட்டக்களப்பில் 'மைக்' நிறுவனம் கண்ணி அகற்றும் பணியை நிறுத்தியது

மட்டக்களப்பு மாவட்டத்தின் மிதிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டுவந்த 'மைக்' அமைப்பு மறு அறிவித்தல் வரை தனது பணிகளை இடை நிறுத்தியுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 'மைக்' நிறுவன அலுவலகத்துக்குச் சென்ற இனந்தெரியாத ஆயுதக் குழு உறுப்பினர்கள் அச்சுறுத்தலை விடுத்துள்ளனர்.

இதனையடுத்தே 'மைக்' நிறுவனம் இந்த முடிவை எடுத்துள்ளது.

இந்த அமைப்பில் பணியாற்றும் உள்ளூரைச் சேர்ந்த 145 பேரின் சேவைகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ள அதேவேளை, பிரித்தானியப் பிரஜைகளான தொழில்நுட்ப முகாமையாளர்கள் பாதுகாப்பாக கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இவ்விடயம் தொடர்பாக அரசுக்கும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் 'மைக்' அமைப்பினர் அறிவித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (3-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில் கான்ஸ்டபிள் பலி

தங்காலை - கிரிந்த வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பொலீஸ் கான்ஸ்டபிள் மீது தனியார் பஸ்ஸொன்று மோதியதால் இவ்விபத்து இடம்பெற்றது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

ராகம பொலீஸ் நிலையத்தில் கடமையாற்றும் இந்தப் பொலீஸ் கான்ஸ்டபிள் விடுமுறையில் வீட்டுக்கு வந்திருந்தார். இவர் வீட்டிற்குப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக நேற்றுக் காலை பெலியத்தை நகருக்குச் சென்றுகொண்டிருந்தபோது இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்துக்காரணமாக தனியார் பஸ்ஸின் சாரதி பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். தங்காலை பொலீஸார் இதுதொடர்பான விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (க-3)

# துணைப்படைகளின் ஆயுதங்களைக் களைந்தால் புலிகளின் ஆயுதங்களும் களையப்பட வேண்டும்

## திட்டவட்டமாகத் தெரிவிக்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, பெப்.24

இராணுவத் துணைப்படைகளின் (ஒட்டுக்குழுக்கள்) ஆயுதங்கள் களையப்பட வேண்டுமானால் விடுதலைப் புலிகள் வசம் உள்ள ஆயுதங்களும் களையப்பட வேண்டும் என்று திட்டவட்டமாகக் கூறுகின்றது ஜே.வி.பி.

வடக்கு - கிழக்கிலும் கொழும்பிலும் கருணாகுழு, ஈ.பி.டி.பி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர்குழு), ஜிகாத் ஆகிய ஐந்து இராணுவத் துணைக்குழுக்கள் செயற்படுகின்றன என்றும், அந்தத் துணைப்படைகளை நிராயுதபாணிகளாக்கி வன்முறை நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்றும் ஜெனீவாப் பேச்சுக்கான ஆரம்ப உரையின்போது விடுதலைப் புலிகளின் பேச்சுக்குழுத் தலைவரும் மதியுரைஞருமான அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருந்தார்.

புலிகளின் இந்தக் கோரிக்கையை அடியோடு புறந்தள்ளினார் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத். "புலிகள் கோருவதுபோல் ஒன்றும் துணைப்படைகளைக் களைந்து விடமுடியாது" - என்றார்.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் கூறியதாவது,

துணைப்படைகளை இல்லாமலாக்குமாறோ, அவர்களின் ஆயுதங்களைக் களையுமாறோ விடுதலைப் புலிகளால் கேட்கமுடியாது. அப்படியானால் புலிகளின் ஆயுதங்களும் களையப்படவேண்டும். அவர்களும் ஒரு இராணுவக்குழுவினர் அல்லவா?

கருணா குழுவை ஆயுதக்குழுவென்று கூறும் புலிகள் இயக்கத்திலிருந்தே அக்குழு உருவானது. எனவே, கருணா குழுவின் ஆயுதங்கள் களையப்படுமானால் புலிகளின் ஆயுதங்களும் களையப்பட வேண்டும். ஈ.பி.டி.பி மற்றும் இதர துணைப்படைகளின் ஆயுதங்களைக் களைய வேண்டுமென்றும் அவற்றை ஒதுக்க வேண்டுமெனவும் புலிகள் கூறுவதையும் ஏற்றுக்கொள்ள முடியாது. அது நடைமுறைச்சாத்தியமற்ற விடயம். நடக்காத ஒரு விடயம்.

- இவ்வாறு மேலும் கூறினார் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத். (க-3)

## ஊழியர் காலக்கெடு இன்று முடிவு

# மின் உற்பத்தி நிலையங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது!

## கொமாண்டோக்களும் காவலுக்கு

கொழும்பு,பெப்.24

சம்பள அதிகரிப்பைக் கோரி இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் அரசிற்கு விடுத்திருக்கும் காலக்கெடு இன்றுடன் நிறைவடையவுள்ள நிலையில், நாசகாரச் செயல்கள் இடம்பெறலாமென்ற அச்சத்தில் நாட்டின் அனைத்து மின்னுற்பத்தி நிலையங்களினதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விக்டோரியா, ரந்தெனிகல, லக்ஷபான உட்பட முக்கிய மின்னுற்பத்தி நிலையங்களுக்கு நேற்று முதல் விசேட கொமாண்டோக்களின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

சம்பள உயர்வுகோரி இலங்கை மின்சார சபை தொழிற்சங்கங்கள் அரசிற்கு விதித்திருக்கும் காலக்கெடு இன்றுடன் நிறைவடைகிறது. ஊழியர்களின் கோரிக்கைகள் நிறைவேறாத நிலையில், நாசகாரச் செயல்கள் எதுவும் நடைபெறுவதைத் தடுக்கும் வகையில் இவ்வாறு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் உயரதிகாரி ஒருவர் கூறினார்.

இதேவேளை, தமது கோரிக்கைகளுக்கு இன்றைய தினம் அரசு உரிய தீர்வை தராத பட்சத்தில் அடுத்த வெள்ளிக்கிழமை முதல் காலவரையறையற்ற வேலைநிறுத்தத்தில் ஊழியர்கள் ஈடுபடப்போகிறார்கள் எனஇலங்கை மின்சாரசபைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜயலால் நேற்று மாலை 'உதயனு'க்கு தெரிவித்தார்.

# ஆபாசப்படம் பார்த்த இளைஞர்குழு இருபாலைப் பகுதியில் சிக்கியது

## படப் பிரதிகள் தீயிட்டு அழிக்கப்பட்டன



யாழ்ப்பாணம்,பெப்.24

இருபாலைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து மீட்கப்பட்ட ஆபாசப் படப் பிரதிகள் நேற்றுப் பிற்பகல் கல்வியங்காடு சந்திக்குச் சமீபமாக வைத்து கலாசாரம் பேணும் குழுவினரால் எரியூட்டப்பட்டன.

நேற்றுமுன்தினம் இருபாலை, ஆனந்தபுரம் பகுதியிலுள்ள வீடு ஒன்றில் இளைஞர் குழு ஒன்று ஆபாசப் படத்தினைப் பார்த்துக்கொண்டிருந்த போது மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

இவர்கள் பார்ப்பதற்காகப் பயன்படுத்திய சீ.டி.பிளேயர், ரீ.வி., டெக் என்பன பறிமுதல் செய்யப்பட்டன என்றும் -

இச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட சிலர் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட ஆபாசப் பட சீ.டிகளும் படப் பிரதிகளும் நேற்றுப் பகல் 2 மணிக்கு கல்வியங்காடு சந்திக்கு சமீபமாக வைத்து பொதுமக்கள் முன்னிலையில் தீயிட்டு எரிக்கப்பட்டன. (3-7-13)

# சொல்லாமல் வெளிநாடு சென்ற அமைச்சர்கள் விவரம் திரட்டப்படுகிறது

## ஜனாதிபதியின் பணிப்பின் பேரில்

கொழும்பு, பெப்.24

எதுவித முன்னறிவித்தலுமின்றி வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள அரசின் அமைச்சர்மார், பிரதி அமைச்சர்மார் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறித்து உடனடியாக விசாரணையொன்றை நடத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று தனது செயலாளரைப் பணித்திருக்கிறார் எனத் தெரியவருகிறது.

அமைதிப் பேச்சுகளில் கலந்துகொள்வதற்காக ஜெனீவா சென்றுள்ள அமைச்சர்மார்களைத் தவிர மேலும் பல அமைச்சர்களும் பிரதியமைச்சர்களும் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர் எனவும் -

இதனால் அரசின் முக்கியமான பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியாதுள்ளதாகவும் - ஜனாதிபதிக்கு நேற்று பல்வேறு தரப்பினரிடமிருந்து வந்த முறைப்பாட்டையடுத்தே இந்த விசாரணைக்கு உத்தரவிடப்பட்டதாகவும் தெரியவருகிறது.

எதிர்காலங்களில் ஆளுங்கட்சிப் பிரமுகர்கள் வெளிநாடு செல்வதாயின் அதற்கு ஜனாதிபதியின் அனுமதி பெறப்படவேண்டும் என்ற ரீதியில் இனி நடைமுறையொன்று பின்பற்றப்படக்கூடுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (க-3)

# கலாட்டா செய்தவருக்கு விளக்கமறியல் உத்தரவு

யாழ்.நகரப்பகுதியில் உள்ள வீடு ஒன்றில் அத்துமீறி நுழைந்து கலாட்டாவில் ஈடுபட்ட ஒருவரை யாழ்.நீதிமன்றம் விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டுள்ளது.

கடந்த 19 ஆம் திகதி யாழ்.நாவலர் வீதியிலுள்ள வீடு ஒன்றில் புகுந்த சிலர் வீட்டில் இருந்தவர்களை தகாத வார்த்தைகளால் பேசியும் வாளால் வெட்டியும் 65 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களையும் சேதப்படுத்தினர்-என்று பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

கலாட்டாவில் ஈடுபட்டவர்களில் ஒருவர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு தாக்கப்பட்ட பின்னர் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் அவர் யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது இருவாரங்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை,கலாட்டாவில் ஈடுபட்டவரை தாக்கியவர்களில் இருவரையும் யாழ். நீதிமன்றம் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது. (3-7)

## இருவேறு விபத்துகளில் இருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம்,பெப்.24

இருவேறிடங்களில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்துகளில் இருவர் படுகாயமடைந்தனர்.

நவாலி, இடிகுண்டுப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள், லொறி விபத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச்சென்ற நவாலி புலவர் வீதியைச் சேர்ந்தவரும் சண்டிலிப்பாய் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருமான செல்வராசா சதீஸ் (வயது-30) என்பவரும் - மல்லாகத்தில் இடம்பெற்ற வான், சைக்கிள் விபத்தில் சைக்கிளில் சென்றவரான மல்லாகம் குளமங்காலைச் சேர்ந்த அருளானந்தம் சிங்கராசா(வயது-61) என்பவரும் - படுகாயமடைந்தவர்களாவர்.

படுகாயமடைந்த இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (3-15)

# கற்கோவளம் கொலை வழக்கில் எதிரிக்கு 5 ஆண்டு கடூழியச் சிறை

யாழ்ப்பாணம்,பெப்.24

கற்கோவளம், புனிதநகர் என்னும் இடத்தில் கடந்த 2001 ஆம் ஆண்டு நடந்த கொலை தொடர்பான வழக்கில் எதிரிக்கு 5 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்த யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி, இறந்தவரின் மனைவிக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்க வேண்டும் என உத்தரவிட்டார்

கடந்த 2001 ஆம் ஆண்டு சித்திரை மாதம் கற்கோவளம் புனித நகர் என்னும் இடத்தில் அல்பிரட் இராஜேந்திரன் என்பவரைக் கொலை செய்ததாக அதே இடத்தைச் சேர்ந்த பெருமாள் ஆனந்தன் என்பவருக்கு எதிராக சட்டமா அதிபரினால் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி சொ.தியாகேந்திரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குற்றம் சுமத்தப்பட்ட நபர் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டார். எதிரிக்கு 5 வருடக் கடூழியச் சிறைத் தண்டனையை விதித்த நீதிபதி இறந்தவரின் மனைவியாகிய திருமதி கலாவதி இராஜேந்திரனுக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா நஷ்டஈடாகவும் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

நஷ்டஈடு வழங்கத் தவறும் பட்சத்தில் மேலும் ஒன்றரை வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் மேல் நீதிமன்ற நீதிபதியால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இந்த வழக்கில் அரச தரப்பில் அரச சட்டவாதி எஸ்.சூசைதாசனும் எதிரி தரப்பில் சட்டத்தரணி எஸ்.சிவனேசனும் ஆஜரானார்கள். (3-204)

# கையடக்கத் தொலைபேசி நிலையத்தில் திருட்டு

## நகரப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம்,பெப்.24

கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்று நேற்றுமுன்தினம் இரவு உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ளது.

நகரப் பகுதியில் கே.கே.எஸ். வீதியில் உள்ள கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையமே நேற்றுமுன்தினம் இரவு உடைக்கப்பட்டுள்ளது.

தொலைபேசி விற்பனை நிலையத்தின் முன் கதவினை உடைத்து அங்கிருந்த பெறுமதியான கைத்தொலைபேசிகள், சிம் காட், கிட் காட் என்பவற்றைத் திருடர்கள் சுருட்டிக் கொண்டு சென்றுவிட்டனர்.

சுமார் 2 லட்சம் பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன என கடை உரிமையாளர் யாழ்.பொலீஸ் நிலையத்தில் முறைப்பாட்டினைச் செய்துள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை யாழ். பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். (3-13)

## கணவன் வெட்டியதால் மனைவி காயம்!

குடும்பத் தகராறின்போது கணவன் வெட்டியதால் மனைவி காலில் படுகாயமடைந்தார். ஏழாலை தெற்கில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் முருகதாஸ் நந்தினி (வயது-24) என்ற இளம் குடும்பப் பெண்ணே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (3-15)

# வேலணை வங்களாவடிச் சந்தியில் புதிய சந்தை அமைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.24

வேலணை நகரப் பகுதியில் புதிய சந்தை ஒன்று அமைக்கப்படவுள்ளது.

நீண்ட காலமாக வேலணைப் பகுதி மீனவர்களுக்கு சந்தை வசதியில்லாமை குறித்துப் பொது அமை[illegible] பட்டது.

இதனையடுத்தே வேலணை பிரதான வீதியில் வங்களாவடிச் சந்தியில் சந்தை அமைக்கும் திட்டத்தை பிரதேச சபை மேற்கொண்டுள்ளது.

வேலணை பிரதான வீதியில் ஏற்கனவே மீன் மற்றும் மரக்கறிச் சந்தை அமைக்கப்பட்ட [illegible] டும் சந்தை அமைக் [illegible] (த-185)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VACANCIES

## UNIVERSITY OF JAFFNA, SRILANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts.

### FACULTY OF MEDICINE

Senior Professor / Professor in Anatomy / Community Medicine / Pathology / Forensic Medicine / Medicine / Pharmacology / Obstetrics & Gynaecology / Paediatrics / Surgery.

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in Anatomy / Biochemistry / Physiology / Community Medicine / Pathology / Microbiology / Patrasitology / Medicine / Forensic Medicine / Pharmacology / Psychiatry / Paediatrics / Obstetrics & Gynaecology / Surgery / Medical Education.

Chair in Oncology / Orthopedic Surgery

Clinical Psychologist

*Note:*

1. Applications are expected from candidates with *MBBS* Degree for the posts at Faculty of Medicine.
2. Applications from candidates with *BDS* and *BVSc* degree can also be considered for the posts in *Biochemistry* and *Medical Education.*

### VAVUNIYA CAMPUS

FACULTY OF BIOLOGICAL SCIENCE

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in Environmental Science.

FACULTY OF APPLIED SCIENCE

Senior Professor / Professor in Information and Communication Technology

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in Information and Communication Technology

Demonstrator / Tutor (on contract) in Informations and Communication Technology

PHYSICAL EDUCATION UNIT

Instructor in Grade III (Age not more than 45 years)

| Post | Salary Scale |
|---|---|
| Senior Professor | Rs.41890 - 3x605 - 43705/= p.m. |
| Professor | Rs.37050 - 8x605 - 41890/= p.m. |
| Senior Lecturer Gr.I | Rs.32650 - 8x525 - 36850/=p.m. |
| Senior Lecturer Gr.II. | Rs.28225 - 5x525 - 30850/=p.m. |
| Lecturer (Probationary) | Rs.18300 - 1x420: 9x460 - 22860/=p.m. |
| Instructor Gr.III | Rs.13950 - 6x260 - 15510/=p.m. |
| Demonstrator / Tutor | Rs.14350/=p.m. |

*Note:* In addition to the above salary, the allowances approved by the University Grants Commission will also be paid.

*Statutory benefits:*

I. Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above.
II. Membership in University Provident Fund and Pension Scheme in the University system.
III. Gratuity payments
IV. Employees' Trust Fund benefits
V. Free Medical Services.

*Closing date:*

| | |
|---|---|
| Post of Senior Professor / Professor | - 31.05.2006 |
| Other posts | - 27.04.2006 |

An application for the post of Senior Professor should be accompainied by the folowing in accordance with the University Grants Commission circular No. 838, dated 26.01.2004.

a) The Curriculum Vitae
b) A Self assessment of his / her contribution to the following fioldo after he / she became a Professer.
Teaching and acadamic development
Research and creative work
Dissemination of knowledge and University and National Development, based on the marking scheme.

An application for the post of Professor should be accompanied by the following in accordance with the University Grants Commission circular No.869 dated 30.11.2005.

a) The Curriculam Vitae
b) A self assessment of his / her whole career specifying the contribution to:
Teaching and academic development
Research and creative work
Dissemination of knowledge and University and National Development, based on the marketing acheme
c) Three copies of the publications, research papers and other relevant documents.
d) Title of five outstanding research papers / publications

The documents for the Post of Senior Professor / Professor shall be sent to the *Vice - Chancellor* with a covering letter.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar / Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.20/= per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order / Postal Order drawn in favour of the *Bursar, University of Jaffna* together with a self - addressed stamped envelope 23x10 c.m. in size.

Those who wish to apply for *more than one* post should apply in *separate forms.* Applications from the University System / Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Applications received after the closing date will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR,**
UNIVERSITY OF JAFFNA,
SRI LANKA.
22.02.2006.

## பேச்சு வெற்றி பெற வேண்டி ஆயிரம் பெண்கள் பாற்குடப் பவனி

காத்தான்குடி,பெப்.24

ஜெனீவாப் பேச்சு வெற்றிபெற்று, நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டுமென வேண்டி மட்டக்களப்பில் 1,000 பெண்கள் பாற்குடமேந்திப் பாதயாத்திரை மேற்கொண்டனர்.

குருக்கள்மடம் பிரதான வீதியில் ஆரம்பமான பாற்குடப் பவனியில் பெருமளவிலான பெண்கள் கலந்து கொண்டமை விசேட அம்சமாகும். நேற்று முன்தினம் காலை 7 மணிக்கு ஆரம்பமான பாற்குடப் பவனி காலை 10 மணிவரை இடம்பெற்றது.

பாதயாத்திரை முடிவில் குருக்கள் மடம் ஐயனார் ஆலயத்தில் 10 ஆயிரம் சங்குகள் வைத்து சங்காபிஷேகமும் நடத்தப்பட்டது. பெருமளவிலான பக்தர்கள் அதில் கலந்துகொண்டனர்.

10 சங்குகளின் ஒலிகள் ஒன்றாக ஒலிக்க சமாதான வழிபாடுகள் இடம்பெற்றன.

பாதயாத் திரையில்கலந்துகொண்ட பெண் கள் மஞ்சள் நிற ஆடை அணிந்திருந்தனர்.

(எ-க)


## தேவை

விற்பனையாளர்கள் தேவை. O/L படித்த, எமது நிறுவனத்திற்கு அருகில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. ஆண், பெண் இருபாலாரும் நேரில் வரவும்.

**118, றொலெக்ஸ் பேக்மாக்**
**கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(47180) (21.11.15


## 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

நல்லூர் லயன்ஸ் கழக உறுப்பினர்
**லயன் சி.சத்தியசீலன்**
அவர்களின்அன்புத் தாய்
**திருமதி சரஸ்வதி சின்னராசா**

We Serve

*அவர்களின் மறைவினால் துயருற்றிக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

**நல்லூர் லயன்ஸ் கழக உறுப்பினர்கள்.**

(சி-48083)(21.11.15)

## மரண அறிவித்தல்



### திருமதி மீனலோசனி சண்முகராசா

(வசந்தா)

கோப்பாய் தெற்கு, கற்பகப்பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகக் கொண்ட திருமதி மீனலோசனி சண்முகராசா நேற்று (23-02-2006) வியாழக்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி தியாகராசா ஆசிரிய தம்பதியரின் கனிஸ்ட புதல்வியும் காலஞ்சென்ற திரு.திருமதி.பொன்னையா தம்பதியரின் அன்பு மருமகளும் சண்முகராசா (முன்னாள் கணக்குப்பதிவாளர் இ.போ.ச.) அவர் களின் அன்பு மனைவியும் பிரதீபா, திவாகரன் ஆகியோரின் பாசமிகு தாயும் பொன்னம்பலநாதன், ஜெயகுமாரன், தியாக சொரூபினி, செல்வீகாராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் வசந்தகௌரி, தங்கேஸ்வரி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறவுள்ளது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*159/3, நல்லலக்சுமி அவெனியூ.*
*நல்லூர்.* (47176) (26.11.15.21)

தகவல்
தி.பொன்னம்பலநாதன்,
தி.ஜெயகுமாரன். *(சகோதரர்கள்)*

## மரண அறிவித்தல்



## வல்லிபுரம் செல்லையா

(முன்னாள் அசோக ஸ்ரோர்ஸ் உரிமையாளர் - திருகோணமலை,
ஓய்வுபெற்ற லிகிதர் கச்சேரி - திருகோணமலை)

ஏழாலை மத்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் செல்லையா அவர்கள் நேற்று (23.02.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் வள்ளியம்மையின் அன்பு மகனும், மயிலணி வடக்கு கந்தையா - சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற ருக்மணியின் அன்புக் கணவரும் சிவலோகநாதன் (பிரான்ஸ்), சிவலோகநாயகி, திருலோகநாயகி (சுவிஸ்), அமரர் அருள்வதி (ஆசிரியை) ஆகியோரின் தந்தையும் ராதிகா (பிரான்ஸ்), ஜெயலிங்கம் (உரிமையாளர், பிரியா ஸ்ரோர்ஸ், சுன்னாகம்), ஜெயந்தன் (சுவிஸ்), கருணானந்தன் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களாகிய செல்லப்பா, பசுவதி, சின்னத்தம்பி, சின்னத்துரை, தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் விவேக் (பிரான்ஸ்), பிரியதர்சினி (பிரான்ஸ்), பிரியா, கிரியா, துஷானி, ருக்ஷிதா (சுவிஸ்), ஆகாஸ் (சுவிஸ்), ரிதுஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

'அசோக் வாசம்'
ஏழாலை மத்தி,
ஏழாலை.
(47184)

தகவல்
**ஜெயலிங்கம்** (மருமகன்)
*(பிரியா ஸ்ரோர்ஸ், சுன்னாகம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# அரசுக்கு நேர்ந்த அவலம்

ஜெனீவாப் பேச்சுகளில் முதல் நாள் ஆரம்ப நிகழ்வில் தான் வைத்த வலையில் தானே விழும் அவலம் இலங்கை அரசுத் தரப்புக்கு நேர்ந்திருக்கின்றது.

அரசுப் பிரதிநிதிகளோடு விடுதலைப் புலிகள் சரிக்குச் சரி சமதையாக - சம அந்தஸ்தில் - அமர்ந்திருந்து பேசுவதும், வாதிடுவதும் சிங்கள, பௌத்த பேரினவாத் சக்திகளின் முன்னால் தனக்கு பேரிழுக்குத் தரும் விடயமென்றுகருதிய அரசுத்தரப்பு, அந்தப் பேச்சுகள் பற்றிய உள்வீட்டு விடயங்கள் அம்பலமாகாமல் அமுக்கி வாசிக்கச் செய்வதன் மூலம் விவரங்களை மூடிமறைத்து சமாளிக்கத் திட்டமிட்டது. அதற்காக செய்தியாளர்களுக்கு முழுக் கதவடைப்பு நடவடிக்கை வனையப்பட்டது. முன்னைய அமைதிப் பேச்சுகள் போலல்லாமல் இந்த அமைதிப்பேச்சுகள் பற்றிய விடயங்களை பேச்சு முடிவடையும் வரை ஊடகவியலாளர்களுக்கு வெளியிடுவதில்லை என்ற தீர்மானம் இந்த அடிப்படையில்தான் எடுக்கப்பட்டது.

ஆனால், இந்தத் தீர்மானத்தை முதலில் மீறியதே இலங்கை அரசுத்தரப்புத்தான். பேச்சுகளில் கலந்துகொள்ள ஜெனீவா வந்திருந்த இருதரப்புப் பிரதிநிதிகள் குழுவும் ஊடகவியலாளர்கள் நெருங்க முடியாதவாறு பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நகரிலிருந்து சுமார் பதினைந்து கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள சாட்டோ டி பொய்ஸி அரண்மனையில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். ஆனால் அரசுத் தரப்பு பிரதிநிதிகள் குழுவில் ஒருவரான அமைச்சர் ரோஹித போகொல்லாகம மட்டும், பேச்சு நடைபெறும் புதன்கிழமை தினத்துக்கு முதல்நாள் மாலை அந்த அரண்மனையிலிருந்து பிய்த்துக் கொண்டு ஜெனீவா நகருக்கு வந்தார். திடீரென ஊடகவியலாளரைக் கூட்டி ஒரு செய்தியாளர் மாநாடு நடத்தினார்.

அப்போது, யுத்த நிறுத்த உடன்பாட்டை திருத்தியமைத்தல் பற்றியே அடுத்த நாள் ஆரம்பமாகும் பேச்சுகளின்போது கலந்துரையாடப்படும் என்ற அரசின் கொள்கை நிலைப்பாட்டை திட்டவட்டமாகப் பகிரங்கப்படுத்திப் பிரகடனப்படுத்தவும் அவர் தவறவில்லை.

செய்தியாளர்களைச் சந்திப்பதில்லை என்ற பொது உடன்பாட்டை அரசுத்தரப்பு மீறிய நிலையில் பேச்சுகள் புதனன்று தொடங்கின. அந்தத் தவறுக்கான விளைவை அரசுத் தரப்பு பேச்சின் ஆரம்பக் கட்டத்திலேயே வாங்கிக் கட்டிக்கொள்ளவேண்டியதாயிற்று.

முதல் நாள் ஆரம்பப் பேச்சில் புலிகளின் பிரதிநிதிகள் சார்பில் அதன் பேச்சுக் குழுத்தலைவர் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் நிகழ்த்திய அங்குரார்ப்பண உரையின் பிரதியைப் பெற்றுக்கொண்ட ஊடகவியலாளர்கள் சில கணங்களில் அதைப் பகிரங்கமாக உலாவரச் செய்துவிட்டனர். ஆழமான கருத்துகள் அடங்கியிருந்த அந்த உரை, யுத்தநிறுத்த ஒப்பந்தம் முழு அளவில் செம்மையாக நடைமுறைப்படுத்தப்படுவதே மாற்றமுடியாத ஒரே நடவடிக்கையாக இருக்க வேண்டும் என்பதைக் காரிய, காரணங்களோடு விளக்கமாக வற்புறுத்தியது.

மதியுரைஞர் பாலாவின் அங்குரார்ப்பண உரை ஊடகங்களுக்குக் கிடைத்துவிட்டது என்பதை அறிந்துகொண்ட அரசுத் தரப்பு அதற்குப் பதில் நடவடிக்கை எடுக்கிறேன் என்று கறுவிக்கொண்டு தனக்குத் தானே குழிபறித்துக்கொண்டமைதான் வேடிக்கையான நிகழ்வு. பாலாவின் அங்குரார்ப்பண உரை வெளியானதால் அதற்குப் பதிலடியாக தனது தரப்பு பேச்சுக் குழுவின் தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் அங்குரார்ப்பண உரையைப் பகிரங்கப்படுத்தத் தீர்மானித்தது அரசுத்தரப்பு. அந்த உரையின் உள்ளடக்கம், பேச்சுமேசையில் முதல் நாள் காலையில் எடுக்கப்பட்ட முடிவுகள் ஆகியவை பற்றியெல்லாம் கருத்திலெடுக்காமல் பழிக்குப் பழி - அறிக்கைக்கு அறிக்கை - உரைக்கு உரை - என்ற அடிப்படையில் நடந்து தன்னைத்தானே முட்டாளாக்கிக் கொண்டது அது.

அப்படி என்னதான் இந்த அங்குரார்ப்பண உரை வெளியானதால் நேர்ந்துவிட்டது? அதை அறிவதற்கு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் அந்த உரையின் அடிப்படை அம்சங்களை நாம் கவனிக்கவேண்டும்.

*"அரசும் புலிகளும் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் இலங்கை அரசுத்தரப்பால் ஏற்றுக்கொள்ளமுடியாதது. அது இலங்கையின் அரசமைப்புக்கு முரணானது. இலங்கையின் தேசியப் பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்கத்தக்கது. இலங்கையின் இறைமைக்கு ஆபத்தானது. ஆகவே, அந்த ஒப்பந்தத்தை மாற்றியமைக்க வேண்டும்"* - இதுதான் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் அந்த உரையின் சாராம்சம். இதைப் பகிரங்கப்படுத்தித்தான் தனக்குத்தானே மண்வாரிக்கொண்டது இலங்கை அரசுத்தரப்பு.


மேற்படி ஒப்பந்தம் அரசமைப்புக்கு உட்பட்டதே என்பதை, ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பொதுக்கட்டமைப்புக்கு எதிரான வழக்கில் தான் வழங்கிய தீர்ப்பின் நடுவே இலங்கை உயர்நீதிமன்றம் தெளிவாகத் தெரிவித்திருந்தது. அரசமைப்பு ஏற்பாடுகள் குறித்து வியாக்கியானம் செய்து தீர்ப்பளிக்கும் ஏக அதிகாரம் உயர்நீதிமன்றத்துக்கே உண்டு. அந்த நீதிமன்றம் மேற்படி அரசு - புலிகள் யுத்த நிறுத்தத்துக்கு வழிவகுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் அரசமைப்புக்கு இணக்கமானதே என்று தனது தீர்ப்பில் கூறியிருக்க, அதற்கு முரண்பட்டு அந்த ஒப்பந்தம் அரசமைப்புக்கு மாறானது என்று அரசுப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் அறிவித்திருக்கிறார். அது மட்டுமன்றி அதனை அரச சமாதானச் செயலகத்தின் இணையத்தளம் ஊடாகத் தனது உரையாகப் பகிரங்கப்படுத்தியும் இருக்கிறார்.

உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு முரணாக - மாறாக - இவ்வாறு பகிரங்கமாக விமர்சனம் முன்வைப்பது நீதிமன்றத்தை அவமதிக்கும் விடயமாகக் கொள்ளப்பட முடியாததா என்று ஆராய்வது ஒருபுறமிருக்க, இவ்வாறு கருத்து வெளியிட்டு, அதைப் பகிரங்கப்படுத்திய அரசுத்தரப்பு, கடைசியாக ஜெனீவாப் பேச்சில் என்ன செய்திருக்கிறது?

தற்போதைய யுத்தநிறுத்த ஒப்பந்தம் தனது நாட்டின் அரசமைப்புக்கு முரணானது என்றும், தனது நாட்டின் ஐக்கியம், ஆட்புல ஒருமைப்பாடு, இறைமை, தேசியப் பாதுகாப்பு என்பனவற்றுக்கு ஆபத்து விளைவிக்கத்தக்கது என்றும், முதல்நாள் பேச்சின் ஆரம்பத்திலேயே தான் வலியுறுத்தி, பின்னர் அதைப் பகிரங்கப்படுத்திவிட்டு, அடுத்த கணம் முதல் அந்த ஒப்பந்தத்தை வரிக்குவரி - ஷரத்துக்கு ஷரத்து அப்படியே செம்மையாக நடைமுறைப்படுத்துவது குறித்து அமர்ந்திருந்து விரிவாகப் பேசவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

ஆக இப்போது, தனது நாட்டின் அரசமைப்புக்கு மாறாக - தனது நாட்டின் ஐக்கியம், இறைமை, ஆட்புல ஒருமைப்பாடு, தேசியப் பாதுகாப்பு என்பனவற்றிற்குப் பங்கம் விளைவிக்கும் - ஒரு நடவடிக்கையை அரசின் மூத்த அமைச்சர்கள் நால்வர், பொலீஸ்மா அதிபர், கடற்படைத் தளபதி ஆகியோர் உட்பட அரச உயர்மட்டத்தினர் அடங்கிய குழுவினர் ஜெனீவாப் பேச்சுகளில் மேற்கொண்டுள்ளனர் என்பதை அரசே ஒப்புக்கொள்ளவேண்டிய நிலைமை எழுந்திருக்கிறது.

பாலாவின் அங்குரார்ப்பண உரை பகிரங்கப்படுத்தப்பட்டதற்குப் பதில் நடவடிக்கை என்று சீறி, தனது தரப்புப் பேச்சுக் குழுத் தலைவரின் ஆரம்ப உரையைப் பகிரங்கப்படுத்திய இலங்கை அரசுத்தரப்பு, அந்த உரையை அம்பலப்படுத்திவிட்டு, அதற்கு முரணான விதத்தில் ஒப்பந்தத்தை செம்மையாக நடைமுறைப்படுத்துவது குறித்துப்பேச இணங்கி, தன்னைத்தானே சிறுமைப்படுத்திக்கொள்ள நேர்ந்திருக்கிறது. ஜெனீவாவில் அரசுக்கு நேர்ந்த அவலம் இது.



மானிப்பாய் மகளிர் கல்லூரியில் பல மாணவிகள் நேற்று திடீரென காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு அம்புலன்ஸில் யாழ். ஆஸ்பத்திரிக்கு ஏற்றிச் செல்லப்படுவதையும் ஆஸ்பத்திரியில் அவர்களுக்கு சிகிச்சையளிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: கவிதரன், பிரபா, பகீர்)

# குடாநாட்டில் நவம்பருக்குப் பின்னர் நடந்த சம்பவம் குறித்து விசாரிக்க ஆணைக்குழு

## விவரங்கள் சமர்ப்பிக்குமாறு மக்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், பெப்.24

கடந்த ஜனாதிபதித் தேல்தலின் பின்னர் குடாநாட்டில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமித்துள்ளார்.

இந்த ஆணைக்குழுவிற்கு ஓய்வு பெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி தர்மசிறி ஜயவிக்கிரம தலைவராகவும் சட்டத்தரணி ஜனாப் ஏ.ஜே.யூசுப் உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆணைக்குழு 2005 நவம்பர் 18ஆம் திகதிக்கும் 2006 ஜனவரி 31ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்துக்குள் குடாநாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவதற்கு அனர்த்தம் விளைவித்த நிகழ்வுகள் எவை, அதற்குப் பொறுப்பாளிகள் யார் என்பதையும் -

அத்தகைய நிகழ்வுகளைத் தவிர்த்துக்கொள்வதற்கு எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்பதையும் ஆராய்ந்து அறிக்கை சமர்பிக்கும்.

இது தொடர்பான தகவல்களைத் தெரிவிக்க விரும்பும் பொதுமக்களோ, அமைப்புகளோ தமது தகவல்களை அடுத்தமாதம் 16ஆம் திகதிக்கு முன்னர் ஆர்.எம்.ஏ.பீ.ரத்நாயக்க, குழுவின் செயலாளர், அரச எழுதுநர் சேவைச் சங்க கட்டடம், இல.90, சேர் சிற்றம்பலம் 'ஏ' கார்டினர் மாவத்தை, கொழும்பு -02' என்ற முகவரிக்கு எழுத்து மூலம் அனுப்பிவைக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(3-202)

# வைத்திய அதிகாரியைத் தாக்கிய நபர் மானிப்பாய் பொலீஸாரால் கைது!

யாழ்ப்பாணம், பெப்.24

சங்கானை அரசினர் வைத்தியசாலையின் வைத்தியப் பொறுப்பதிகாரி தாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் எனக் கூறப்படும் நபரை மானிப்பாய் பொலீஸார் கடந்த செவ்வாய்க்கிழமை மடக்கிப்பிடித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சங்கானைப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்து ஒன்றில் உயிரிழந்தவரின் சடலத்தை ஒப்படைக்கும் விவகாரத்தில் வைத்தியசாலையில் கடமையில் இருந்த பொறுப்பு வைத்திய அதிகாரி பொதுமகன் ஒருவரால் தாக்கப்பட்டதும் -

அதனையடுத்து, வைத்தியசாலை ஊழியர்கள் தொடர் பணிபுறக்கணிப்பில் ஈடுபட்டு வந்ததும் தெரிந்ததே.

மேற்படி தாக்குதல் சம்பவம் குறித்து மானிப்பாய் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுவந்தனர். இந்த நிலையில் கடந்த செவ்வாயன்று வைத்திய அதிகாரியை தாக்கியதாகக் கூறப்படும் வட்டுக்கோட்டை வடக்கினைச் சேர்ந்த ஒருவரைப் பொலீஸார் கைது செய்தனர்.

(எ-13)

## நாளை

மாசி 13
சனிக்கிழமை
25.02.2006
திதி: துவாதசி
பி.ப. : 2.02 வரை
நட்சத்திரம் : உத்தராடம்
முன்னிரவு : 07.41
சுபநேரம் : 03.29 - 04.59
ராகுகாலம் : 09.29 - 10.59
(யாவும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

நண்பனுக்கு உயிரைக் கொடுப்பது எளிது. ஆனால் உயிரைக் கொடுப்பதற்குரிய நண்பன் கிடைப்பது அரிது.

- ஓர் அறிஞர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## கார் விற்பனைக்கு

மொடல் HONDA - 301 - XXXX முதற் பதிவு 99 BRAND NEW 7200 km ஓடியது. ONE OWNER, FULL OPTION CAR விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 61, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். (சுண்டுக்குளி அருகில்). தொ.பே.0777 305533. பார்வையிடும் நேரம் ஞாயிறு 9a.m. - 6p.m. (சி/48033)

## வீடு விற்பனைக்கு

இலக்கம் 56, சப்பல் வீதி, (CHAPEL STREET) யாழ்ப்பாணத்தில் 03 பரப்புக் காணியுடன் சேர்ந்த வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: 'நித்தியா ஸ்பொட்' இல.23, கே.கே. எஸ்.வீதி, சுன்னாகம். தொ.பே.இல. 0602213430. (47167)

## தவறிவிட்டது

ச.சுதர்சன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை அடிக்கட்டை, விசேட அடையாள அட்டை இல.0901033660 பேர்ஸுடன் சிறுதொகைப்பணமும் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் 11/1, புனித மரியாள் வீதி, நாவாந்துறை வடக்கு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அல்லது தொ.பே. 0776106839 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (47164)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1972 ஆயிலியம் கடகராசி, 5'2'' உயரம், கிரகபாவம் 51 ¾, M.B.B.S. டாக்டர் மணமகளுக்கு டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன், பட்டதாரி மணமகன் தேவை. கிறிஸ்தவர்கள், வெளிநாட்டில் தகுதியானவர்கள், விவாகரத்து ஆனவர்கள் விரும்பத்தக்கது. சிவாலயா 11, யமுனா வீதி, நல்லூர், யாழ். தொ.பே. 0776528641, E.mali - SK.Shivagaran @yahoo.com. (47115)

## நெடுந்தீவு பாடசாலைக்கு மைதானம் நிறுவக் காணி

நெடுந்தீவு மங்கையர்க்கரசி வித்தியாலயத்திற்கு மைதானம் உருவாக்குவதற்கென காணி அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

நெடுந்தீவைச் சேர்ந்த நலன்விரும்பிகளான வ.கந்தையா, இ.குமாரசாமி, க.கோவிந்தபிள்ளை, க.பாலசுந்தரம் ஆகியோர் ஒன்றிணைந்து இந்தக் காணியை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இதற்கிடையில்- மேற்படி மைதானத்தைப் புனரமைக்க நெடுந்தீவு மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் அனுசரணை வழங்க, பாடசாலை அபிவிருத்திச் சங்கம் புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டது என்று பாடசாலை அதிபர் கோ.பத்மநாதன் தெரிவித்தார்.

மேற்படி பாடசாலையின் இந்த வருடத்துக்கான மெய்வன்மைப் போட்டிகள் புதிய மைதானத்தில் நடைபெறும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ)

## விவசாய சம்மேளனத்திற்கு நீரிறைக்கும் இயந்திரம்

சில்லாலை விவசாயிகள் சம்மேளனத்திற்கு யாழ்.கமநல சேவைகள் திணைக்களத்தினால் புதிய 'றொபின்' இன நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்று கடந்த வாரம் வழங்கப்பட்டுள்ளது. உலக உணவு நிறுவனம் அண்மையில் கமநல சேவைகள் திணைக்களத்திற்கு வழங்கியிருந்த நீர்இறைக்கும் இயந்திரங்களில் ஒன்றே தமது சம்மேளனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாக அதன் செயலாளர் தெரிவித்தார். (எ-135)


கட்டைவேலி- நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்

**உடன் தேவை**

புத்தகம் கட்டுவதற்கும் அது சம்பந்தமான பயிற்சி அளிப்பதற்கும் அவசரமாக ஒருவர் தேவை. அனுபவமுள்ளவர்கள் கட்டைவேலி - நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கரவெட்டி என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

(சி/48032)(26.11.15)

**VNC**

தரமான முறையில் கொங்கிறீற் கற்கள், தூண்கள் 100 அடி நீளம், 40 அடி அகலம் கொண்ட தொட்டிகளில் அறுக்கப்பட்டு பின்னர் நீரில் ஊறவிட்டு விற்பனை செய்யப்படுகின்றன. 1 அடி நீளம் 4'' அகலக் கல்லின் விலை 26/- மட்டும். நேரடியாகப் பார்வையிட்டு முற்கூட்டியே பதிவுசெய்து பெற்றுச்செல்லவும்.

**VNC**

கும்பழாவளை பிள்ளையார் கோயில் அருகில்
அளவெட்டி மத்தி, அளவெட்டி.

(46913) (24.26.11.15)

சிவலிங்க யோக கேந்திரா நிலையம் நடாத்தும்

**சுகவாழ்வுக்கான யோகாசன தியான வகுப்புகள்**

**ஆரம்பம் - 04.03.2006**

மனிதனின் உடல், உள ஆத்மீக முன்னேற்றத்திற்கான பயிற்சி வழங்கப்படவிருக்கிறது. இப் பயிற்சி நெறியில் நோயாளர்களிற்கும் மாணவர்களுக்கும் விசேட பயிற்சிகளும் வழங்கப்படும்.

ஆண்கள், பெண்கள் என இருபாலருக்கும் நடாத்தப்படும் இப் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள விரும்புவோர் உங்கள் பதிவுகளை 01.03.2006இற்கு முன் மேற்கொள்ளவும்.

இவ் யோகாசனப் பயிற்சி நெறியை யோக கேந்திர பல்கலைக்கழகம் (பெங்களூர், இந்தியா) இல் பயிற்சி பெற்ற V.N. சிவவேஷ்வரராஜாவினால் விஷேடமாக பயிற்றுவிக்கப்பட்ட மாணவர்களால் போதிக்கப்படும். இப் பயிற்சி நெறியை யாழ். பல்கலைக்கழகம் உளமருத்துவத்துறை ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச பாடத்திட்டத்திற்கு அமைய கற்பிக்கப்படும்.

பயிற்சி வழங்கும் இடம் :- **அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையம்.**
இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

மேலதிக தொடர்பு :- **சக்தி நெற் சென்ரர்**
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் சந்தி.

குறிப்பு: இப் பயிற்சிநெறி பூரணமாகப் பூர்த்திசெய்பவர்களுக்கு சிவலிங்க யோக கேந்திர நிலையத்தால் சான்றிதழ் வழங்கப்படும்.

**S.T.R. TRAVELS**

**MULTY CENTER**



சுற்றுலா, திருமணம் மற்றும் விசேட தேவைகளிற்கான 54 இருக்கைகள் கொண்ட பேருந்து மற்றும் சிற்றூர்திகள், வான்கள் போன்றவற்றை பெற்றுக்கொள்ளவும். மிகக்குறைந்த கட்டணத்தில் Photo copy, Comp Print பெற்றுக்கொள்ளவும் யாழ்.கொழும்பு வான் சேவைக்கும் தொடர்புகொள்ளவும்.

**S.T.R. Multy Center,**
**45, Adiyapatham Road,**
**Thirunelvely.**
**T.P.: 021 4590223**
**0212225680**
**0777570150**

**S.T.R. Communication,**
**Araly East,**
**Vaddukoddai.**
**T.P.: 0602212601**
**0214590458**
**0777283796**

குறிப்பு: சிவராத்திரியை முன்னிட்டு 26.02.2006 திருக்கேதீஸ்வரத்திற்கான சுற்றுலா ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன செல்ல விரும்புவோர் தொடர்புகொள்ளவும்.

(சி/48024)(42.26.11.15)


## பதவி வெற்றிடம்

கிளிநொச்சி சேவாலங்கா நிறுவன சுனாமி அலுவலகத்தின் கட்டுமானப் பிரிவு பொறியியலாளருக்கான நியமனம் உடனடியாக நிரப்பப்படவுள்ளது.

01) கல்வித்தகைமை:-
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டதாரி.

02) விசேட தகைமை:-
3 வருட தொழில்சார் அனுபவம்.

மேற்படி பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் சேரவேண்டிய இறுதித் திகதி 28.02.2006. விண்ணப்பங்கள் திட்டப் பணிப்பாளருக்கு கடிதம் மூலமாகவோ, பக்ஸ் மூலமாகவோ, நேரடியாகவோ கிடைக்கவேண்டிய முகவரி:-

**சேவாலங்கா மன்றம், சுனாமித் திட்ட அலுவலகம்,**
**இல.72, திருநகர், கிளிநொச்சி.**
**பக்ஸ்:- 0212283957**

(சி/48025)(32.26.11.15)

விராட் விஸ்வப்பிரம்மனே நம

## ஈரவிழிகளுடன் ஓராண்டு

| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 10 - 04 -1953 | 06 - 03 -2005 |



அமரர்

**சிவகுரு தவராசா**

(பத்தர் பவுண்)

திதி: 24-02-2006

அன்பின் உறைவிடமாகி எமையெல்லாம்
பாசத்தால் அரவணைத்து வழிகாட்டிய
எம் அன்புத் தெய்வமே!
ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
உம் நினைவு நிழலில் [illegible]

பெரியபளை,
பளை.

(47152)(26.11.15)

குடும்பத்தினர்.


**COMPUTER EXPRESS**
**Institute of Information Technology**
இல. 15, சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம். (off Stanly Rd.)
021-222 8250,0777- 222422

இலங்கையில் முதற்தடவையாக கம்பனிக்கணக்குகளுடன்

**Computerized Accounting**

*Accpac+Quick Books Pro+MYOB*

ஆகிய முன்னணி *Accounting Software* அனைத்தினூடாகவும் கற்பிக்கப்படும்.

Course Contents
- Fundamentals of IT
- Manual Accounting
- Financial Accounting
- Cost Accounting
- Taxation (Including VAT)
- Stock Control
- Bank Reconciliation
- Budgeting
- Fore Casting
- Business Planing

**80% Off**

*Tally Accounting Package*

புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன.

ஆரம்பம்
25/02/2006 :- 10.00-12.00
26/02/2006 :- 02.00-04.00


## முக்கிய அறிவித்தல்

இன்று (24.02.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-12 வரையும் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருந்த 'சகல கிறிஸ்தவர்களுக்கான கருத்தரங்கு' தவிர்க்க முடியாத காரணத்தால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. ஏனைய கூட்டங்கள் யாவும் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

**நிர்வாகி,**
**எக்காளத்தொனி பூரண சுவிசேஷ சபை,**
**யாழ்ப்பாணம்.**

(47163)(32-26-11-15)

## பதவி வெற்றிடம்

**1) பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆண்)**
**வயதெல்லை 20-50**

**2)சுத்திகரிப்பாளர் (ஆண்)**
**வயதெல்லை 20-35**

*பணிபுரிய விரும்புவோர்* London English College, **105, அரசடி வீதி, யாழ்ப்பாணம்** *என்ற முகவரிக்கு 25-02-2006 சனி பி.ப.3 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.*

ஆளணி முகாமையாளர்
**Mak Cost Cutter,**
**Supermarket,**
**484, Hospital Road, Jaffna.**

(சி/48016)(26.11.15)

## இதயக் குமுறல்கள்



என் அன்பு போதகரும் அதிபருமாகிய

**வண.எம்.எம்.இன்பரூபன்**

*(சீயோன் தேவாலயம்)*

நெஞ்சம்நெகிழ, விழிகள் வழிய
உணர்வுகள் உறைய என்
இதய விம்மல்கள்.

671, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**வேதநாயகம் சுமணன்,**
*(மாணவன்).*

(47157)(26.11.15)

## மரண அறிவித்தல்

### கதிரித்தம்பி கனகசபை

*(முன்னாள் ஏற்றுமதி, இறக்குமதி உத்தியோகத்தர், ஹைற்றாமணி, கொழும்பு)*

சாவகச்சேரி வடக்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரித்தம்பி கனகசபை அவர்கள் 18-02-2006 சனிக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரித்தம்பி - அன்னப்பிள்ளை தம்பதியரின் அருமை மகனும் அமரர் க.சம்பந்தபிள்ளை (முன்னாள் உத்தியோகத்தர், கடதாசி ஆலைக்கூட்டுத்தாபனம்), திருமதிகள் சி.உமையம்மா, சி.புனிதவதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், செ.சின்னையா (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் தானியக் களஞ்சியம், நாவற்குழி), சி.சிவஞானம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), ச.பரமேஸ்வரி (ஓய்வு பெற்ற நெசவு ஆசிரியை, லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சி.வசந்தகுமார் (T.O. வானிலை அவதான நிலையம், திருகோணமலை), திருமதி பா.மைதிலி (அமெரிக்கா), செல்விகள் சி.சண்முகப்பிரியா (T.O. கல்வி வலயம், யாழ்ப்பாணம்), சி.பிரியரஜனி (தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ச.சந்திரமோகன் (லண்டன்), திருமதிகள் தமயந்தி (ஆஸ்திரேலியா), மாயாராணி (லண்டன்), ச.துஷ்யந்தன்(லண்டன்), ச.கோகுலரமணன் (லண்டன்) ஆகியோரின் சித்தப்பாவும், கலாநிதி சி.பாலகிருஷ்ணன் (அமெரிக்கா), வ.விஜயநந்தினி (ஆசிரியை, ஸ்ரீசண்முகா இந்துமகளிர் கல்லூரி திருகோணமலை) ஆகியோரின் துணைவழி மாமனும் பா.அர்ச்சனா, பா.அகிலன் (அமெரிக்கா) ஆகியோரின் mammy uncle, வ.மதுசாயி (திருகோணமலை)யின் அப்பா மாமாவுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு 20-02-2006 திங்கட்கிழமை கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சாவகச்சேரி வடக்கு,*
*மீசாலை.*
தொ.பே.*0602212951*

*தகவல்:*
திரு.திருமதி சிவஞானம், புனிதவதி
*(மைத்துனர், சகோதரி.)*

(47145)(26.11.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்டார் படைப் பயிற்சியை முடித்த போராளிகளுக்குத் தலைவர் பரிசளிப்பு

மேஜர் றோய் கட்டளையதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் மோட்டார் பீரங்கி ஒருங்கிணைப்புப் பயிற்சி நிறைவு நிகழ்வில் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் கலந்துகொண்டு சான்றிதழ்களையும் பரிசில்களையும் வழங்கினார்.

சாள்ஸ் அன்ரனி படையணியின் தாக்குதல் தளபதிகளில் ஒருவரான அமுதாப் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

மேஜர் றோயின் திருவுருவப்படத்திற்கு தேசியத் தலைவர் வே.பிரபாகரன் ஈகச் சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார்.

அதனைத் தொடர்ந்து போராளிகள் மத்தியில் தேசியத் தலைவர் கருத்துரை வழங்கினார். பயிற்சியை நிறைவு செய்தோருக்கு தலைவர் பிரபாகரன் சான்றிதழ்களையும் பரிசுகளையும் வழங்கிக் கௌரவித்தார்.

இந்நிகழ்வில் சாள்ஸ் அன்ரனி படைப் பிரிவின் ராகசீலம் இசைக் குழுவினரின் இசைநிகழ்வும் இடம்பெற்றது. (த)





## தென்னியங்குளம் விரைவில் புனரமைப்பு

பரந்தன்,பெப்.24

மல்லாவி தென்னியங்குளம் புனரமைப்பு வேலைகளை யப்பான் நாட்டு 'யபிக்' நிறுவனம் விரைவில் ஆரம்பிக்கவுள்ளது.

இக்குளத்தைப் புனரமைப்பு செய்வதன் மூலம் இப்பகுதியில் சிறுபோக காலத்தில் பயிர் உற்பத்தியை அதிகரிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-352)

## மல்லாவி பேருந்து நிலையத்தில் அடிப்படை வசதிகள் எதுவுமில்லை!

### இதனால் பயணிகள் பெருஞ்சிரமம்

கிளிநொச்சி,பெப்.24

மல்லாவி நகர்ப்பகுதியில் அமைந்துள்ள பேருந்து நிலையத்தில் அடிப்படை வசதிகள் எதுவும் ஏற்படுத்திக் கொடுக்கப்படாமையால் பயணிகள் பெருஞ்சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பேருந்து நிலையம் தனியார் ஒருவருடைய காணியில் அமைக்கப்பட்டிருக்கிறது.

இங்கு குடிதண்ணீர் வசதிகளோ, மலசலகூட வசதிகளோ ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

இதனால், இப்பகுதியில் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவுகின்றன. மக்கள் பெருஞ்சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அரசினால் இந்தப் பேருந்து நிலையம் அமைப்பதற்கென காணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளபோதிலும் அந்த இடத்தில் இதுவரை இதற்கான கட்டடங்கள் அமைக்கப்படவில்லை.

எனவே, உரியவர்கள் இந்த விடயத்தைக் கவனத்திலெடுத்து அரசினால் ஒதுக்கப்பட்ட காணியில் பேருந்து நிலையத்தை அமைத்து மக்களின் அசௌகரியங்களைப் போக்க முன்வரவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்துள்ளது. (த-307-203)

கிளிநொச்சி வன்னிச் செய்திகள் மூல்

## தொழிலாளர்கள் பற்றாக்குறையால் பூநகரியில் நெல் அறுவடை தாமதம்

வெள்ளாங்குளம்,பெப்.24

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட இடங்களில் நெல்அறுவடை செய்வதற்குரிய காலம் நெருங்கியுள்ளபோதும் வேலையாள்கள் பற்றாக்குறையால் நெல் அறுவடை செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

கறுக்காய்த்தீவு, நெற்புலவு, 19ஆம் கட்டை, நாகபடுவான், பல்லவராயன்கட்டு போன்ற அனைத்து இடங்களிலும் நெல் அறுவடை செய்யவேண்டிய பருவம் நெருங்கியுள்ளது.

அனைத்து இடங்களிலும் நெல்அறுவடை செய்யும் காலம் நெருங்கியுள்ளதால் வேலையாள்கள் பற்றாக்குறை நிலவுகின்றது என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே, தொண்டு நிறுவனங்கள் இப் பகுதி மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு நெல் அறுவடை செய்யும் இயந்திரத்தை வழங்கி உதவ வேண்டும் என்று விவசாயிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-415-203)

## கண்ணிவெடிகள் தொடர்பாக மாணவர்களுக்குக் கருத்தூட்டல்

பரந்தன்,பெப்.24

கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் பாடசாலைகள் தோறும் கருத்தூட்டல் நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தக் கருத்தூட்டல் நிகழ்வு ஒன்று அண்மையில் வட்டக்கச்சி மகாவித்தியாலத்தில் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் கண்ணிவெடி வகைகளும் அதனால் ஏற்படும் தாக்கங்களும் என்ற தலைப்பிலும் அவை எவ்வாறான சந்தர்ப்பத்தில் வெடிக்க வைக்கப்படுகின்றன என்பது தொடர்பாகவும் கருத்துகள் வழங்கப்பட்டன.

கண்ணிவெடிகளால் ஏற்படும் பாதிப்புகள் பற்றி வீடியோப் படங்கள் மூலம் விரிவாக விளக்கமளிக்கப்பட்டன.

அத்துடன், மாணவர்களிடம் கண்ணிவெடிகளுடன் தொடர்புடைய வினாக்கள் கேட்கப்பட்டு அதற்குப் பதில் கூறியவர்களில் ஆறு பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

இவ்வாறான கருத்தூட்டல் நிகழ்வுகள் ஏனைய பாடசாலைகளிலும் நடத்தப்பட்டு வருகின்றன. (த-352-203)

## வவுனியா கிழவிக்குளம் கிராமத்தின் அபிவிருத்தி தொடர்பாக ஆராய்வு

வவுனியா பிரதேசம், பாலமோட்டை கிராமசேவகர் பிரிவின் கிழவிக்குளம் கிராமத்தின் அபிவிருத்தி தொடர்பான ஒன்றுகூடல் கடந்த 19 ஆம் திகதியன்று கிழவிக்குளம் தமிழேந்தி முன்பள்ளியில் நடைபெற்றது.

குஞ்சுக்குளம் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் பரிவேல் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழக வவுனியா மாவட்டப் பணிப்பாளர் மூர்த்தி, வவுனியா மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் ஆவர்த்தனா, வவுனியா அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் சந்திரன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

அக்கிராமத்தில் வசிக்கும் 42 குடும்பங்களுக்கும் வவுனியா அபிவிருத்தி நிறுவனத்தினூடாக சுழற்சி முறையில் கடன்பெற்றுக் கொடுத்தல், சமூக பொருளாதார அபிவிருத்திக் குழுக்களை வலுப்படுத்தல், வீதிகளைச் சிரமதானம் மூலம் சீர்செய்தல், பொதுஇடங்களை சிரமதானம் மூலம் துப்புரவாக்குதல் போன்ற விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன.

முன்னதாக அக்கிராமத்திலுள்ள 42 வீடுகளும் தரிசிப்பு மேற்கொள்ளப்பட்டு சமூக, பொருளாதார, அபிவிருத்தி, அரசியல், சுகாதாரம் தொடர்பான கருத்துகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், வவுனியா அபிவிருத்தி நிறுவனம், அரசியல்துறை, தமிழீழ சுகாதார சேவைகள், பொதுஅமைப்புகள் என்பவற்றின் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர். (த-355)

## மல்லாவி சந்தைக்குச் செல்லும் பிரதான வீதி மிகவும் மோசம்

கிளிநொச்சி,பெப்.24

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மல்லாவி பொதுச்சந்தைப் பகுதிக்குச் செல்லும் பிரதான வீதி பாரிய குண்டும் குழியுமாகக் காணப்படுவதால் சந்தையில் பொருள்களை வாங்க வருவோர் பல இடர்களைச் சந்தித்து வருகின்றனர்.

இவ்வீதி அண்மையில் பெய்த தொடர் மழையினால் சேதமடைந்தது. இதனால் சந்தைக்குச் செல்லும் மக்கள் பல விபத்துகளை எதிர்கொள்கின்றனர்.

இதனால், மக்கள் படும் இன்னல்களைத் தவிர்க்க குண்டு குழிகளை நிரப்பி மக்கள் பாதுகாப்பாகச் செல்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வரவேண்டும் என மக்கள் கேட்கின்றனர்.

இதுகுறித்து பலமுறை உரியவர்களுக்குத் தெரியப்படுத்தியும் கவனமெடுக்கப்படவில்லை என மக்கள் விசனமடைகின்றனர். (த-307)

## மாயவனூர் கிராமத்தில் மாணவருக்கு உபகரணங்கள்

பரந்தன்,பெப்.24

வட்டக்கச்சி, மாயவனூர்க் கிராமத்தில் மாலை நேரக் கல்வியைத் தொடரும் மாணவர்களுக்குப் பெண்கள் அபிவிருத்திப் புனர் வாழ்வு நிறுவனத்தினரால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு மாயவனூர் பொதுமண்டபத்தில் வட்டக்கச்சிப் பிரதேச பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் சொலஸ்ரின் மாலினி தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் இக்கிராம அலுவலர், வட்டக்கச்சிப் பிரதேச ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் ஆகியோர் மாலை நேரக் கல்வியின் முக்கியத்துவம் தொடர்பாகக் கருத்துரை வழங்கினர்.

தொடர்ந்து அங்கு மாலை நேரக் கல்வி பயிலும் 49 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (த-352-203)

## தருமபுரம் பிரதேசத்தில் தற்காப்புப் பயிற்சி

பரந்தன்,பெப்.24

தருமபுரம் கிழக்கு, மேற்குப் பிரதேச மக்களுக்கான தற்காப்புப் பயிற்சி வழங்கும் நிகழ்வு கடந்தவாரம் ஆரம்பமானது.

தருமபுரம் பொதுவிளையாட்டு மைதானத்தில் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் மு.சோழநிலவன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

தருமபுரம் பிரதேச வர்த்தகர்கள், பொதுமக்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனப் பணியாளர்கள் என நூற்றுக்கணக்கானோர் இந்தப் பயிற்சியில் கலந்துகொண்டனர்.

மக்களுக்குத் தற்காப்புப் பயிற்சி வழங்க வேண்டியதன் அவசியம் தொடர்பாகவும் தற்கால அரசியல் நிலைப்பாடு தொடர்பாகவும் தூயவன் அரசறிவியல் கல்லூரி ஆசிரியர் புலிமறவன் கருத்துரை வழங்கினார்.

இதனையடுத்துத் தற்காப்புப் போர்ப் பயிற்சி ஆசிரியர் கண்ணாளன் பயிற்சிகளை ஆரம்பித்துவைத்தனர். (த-352-203)

## உருத்திரபுரம் மருந்தகத்துக்கு பற் சிகிச்சை உபகரணங்கள்

கிளிநொச்சி,பெப்.24

கிளிநொச்சி, உருத்திரபுரம் மருந்தகத்திற்குப் புலம்பெயர்ந்து பிரான்ஸில் வசிக்கும் ச.மு.சண்முகரத்தினம் என்பவரால் 5 லட்சம் ரூபா பெறுமதியுடைய பற்சிகிச்சை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உபகரணங்கள் அண்மையில் உருத்திரபுரம் மருந்தக வைத்திய அதிகாரி மு. கோபாலபிள்ளையிடம் கையளிக்கப்பட்டன. (த-307-203)

## கண்டாவளைப் பிரிவில் சுகாதாரக் கருத்தரங்கு

விசுவமடு,பெப்.24

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட உணவக உரிமையாளர்களுக்கான சுகாதாரக் கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் உணவும் சுகாதாரமும் உணவு கையாளும் நிலையக் கட்டட அமைப்பு உட்படப் பல்வேறு விடயங்கள் குறித்து விளக்கங்கள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட சுகாதார இணைப்பாளர் இதற்கான விளக்க உரையை வழங்கினார். (த-402-203)

## மன்னார் வீதியில் பயணிகள் சிரமம்

மன்னார் வீதியில் 19ஆம் கட்டையில் இருந்து ஏற்றம்பிட்டி வரையான பகுதியில் வீதியின் இருமருங்கிலும் வீதி புனரமைப்புக் கெனப் பறிக்கப்பட்டுள்ள கிரவல் மண்ணால் இவ்வீதியால் பயணஞ்செய்வோர் விபத்துகளை எதிர்கொள்ளவேண்டிய நிலை தோன்றியுள்ளது.

இந்த வீதியின் நடுப் பகுதிகள் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றன.

இதன் காரணமாக வாகனங்களில் செல்பவர்களும் பாதசாரிகளும் வீதியோரமாகவே பயணஞ் செய்துவந்தனர்.

இந்த நிலையில் வீதியோரங்களில் கிரவல் பறிக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்த மண்ணை உரிய முறையில் பரப்பி வீதியை செப்பனிடும் பணிகள் தொடங்கவில்லை. இதனால், வீதியில் போக்குவரத்து செய்யமுடியாது நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

எனவே, உரியவர்கள் மக்களது நலனில் அக்கறை கொண்டு இவ் வீதியோரங்களில் பறிக்கப்பட்டுள்ள கிரவல் கும்பிகளை வீதியில் பரப்பி - வீதியைப் புனரமைப்புச் செய்து - மக்களது போக்குவரத்து நெருக்கடியைத் தீர்க்க முன்வரவேண்டுமென்று மக்கள் கேட்டுள்ளனர். (த-415-203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



முன்னாள் இலங்கை மின்சாரசபை ஊழியரும்
ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலனசபையின்
தலைவருமாகிய
ஐயாத்துரை சிவலிங்கம்
அவர்களுடைய தாயார்
திருமதி
**ஐயாத்துரை சரஸ்வதி**
அவர்களின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

கடவைப்புலம் வீதி,
சுன்னாகம்.

S.வசந்தன் *(மருமகன்)*,
வ.சிவச்செல்வி *(பேர்த்தி)*,
வாகினி, கரிஷிகா, கரினிகா
*(பூட்டப்பிள்ளைகள்)*.

(47077)(52.32.19)

# கண்ணீர் அஞ்சலி



## போதகர் M.M. இன்பரூபன்

[சீயோன் தேவாலயம், யாழ்ப்பாணம்]

*அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்திய டையப் பிரார்த்திக்கின்றோம்.*

**நிர்வாகத்தினர் - உறுப்பினர்கள்,**
காங்கேசன்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம்,
*வியாபாரிமூலை,*
*பருத்தித்துறை.*

(47140)(52.32.19)

## அலுவலக உத்தியோகத்தர்கள் தேவை

கொழும்பை தலைமையகமாகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் கிளை நிறுவனமாக இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு கீழ்வரும் உத்தியோகத்தர்கள் தேவை.

1.கணனி தட்டெழுத்து தமிழ், ஆங்கிலம் நன்கு தெரிந்த பெண்கள்.

2.கணக்காளர்கள் ஆண், பெண் இருபாலாரும்-

3.வரவேற்பாளர்கள் (Receptionests), தொலைபேசி இயக்குநர், பெண்கள் தேவை.

உங்கள் விண்ணப்பப்படிவங்களை 26.02.2006 அன்று சுயவிவரக்கோவையுடன் அனுப்பிவைக்கவும். தொலைபேசி இலக்கத்தையும் தவறாது குறித்து வைக்கவும்.

**தொடர்புகளுக்கு:**
**விளம்பர இல.2812**
**மே/பா உதயன்.**

(த-47003)(18-45-49)

## கடை வாடகைக்கு

*யாழ்.நகரில் கஸ்தூரியார் வீதியில் இல.214 இல், நகைக்கடைகள் நிறைந்த பகுதியில் கடை ஒன்று வாடகைக்குண்டு.*

தொடர்பு:-
077-7374726

(47157)(32-19)

## நினைவுப் பேருரை இன்று

யாழ்ப்பாணம்,பெப்.24

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அறிஞர் அமரர் வி.சிவசுப்பிரமணியத்தின் 10ஆவது ஞாபகார்த்த நினைவுப் பேருரை இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரியின் வித்துவான் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் க.சிவாஜி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் அமரரின் மகன் டாக்டர் சி.சிவானந்தராஜா மங்கள விளக்கை ஏற்றுவார். நினைவுப் பேருரையைக் 'கல்வியும் எமது தேவையும்' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடாதிபதியும் ஸ்கந்தாவின் மைந்தனுமான பேராசிரியர் கே.கந்தசாமி நிகழ்த்துவார்.

நினைவுப் பாமாலையை இசை ஆசிரியர் சி.சிவஞானராஜா நிகழ்த்துவார். கௌரவ விருந்தினர் உரையை இளைப்பாறிய வட மாநில கல்விப் பணிப்பாளர் ஸ்கந்தாவின் மைந்தன் இரா.சுந்தரலிங்கம் நிகழ்த்துவார். (த-202)

# கண்ணீர் அஞ்சலி



*இமையாணன் மேற்கு, தும்பளையைப் பிறப்பிடமாகவும் கவிற்ஸர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட*

**கிருஷ்ணபிள்ளை சிறிமுருகன்**
*(கிட்டிணன் முருகவேல்)*

*அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

தகவல்:
ஜீவகன் சனசமூக நிலையம் தும்பளை - கோர்பு அங்கத்தவர்,
உடுப்பிட்டி.

(47149)(32-19)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

*மலர்வு* 20 - 04 - 1922



*உதிர்வு* 25 - 01 - 2006

## திருமதி காவிராஜா நாகம்மா

*வையத்துள் வாழ்வாங்கு வாழ*
*வழி சமைத்த எம் தெய்வமே!*
*தண்ணிலாவாக எங்களுக்குள்*
*தான் ஒளிர்ந்த தங்கமே!*
*முற்றத்து நித்திய கல்யாணியாய்*
*என்றைக்கும் எம்முள் மலரும் மலரே!*
*தங்கள் புன்னகை தவழும் வதனம்*
*எங்கள் மனதில் என்றும் தவழும்.*

25.01.2006 புதன்கிழமை இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவியின் மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி தெரிவித்தவர்களுக்கும் சகலவிதத்திலும் உதவிகள் செய்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அயலவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குறிப்பு: இன்று (24.02.2006) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

(47134)(52-32-19)

**-குடும்பத்தினர்.**


# 21 ஆண்டு கால இணையற்ற பயிற்சியகம்

# கலாலயா

பயிற்சியகம்
மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கு அருகில்)

இந்த ஆண்டிற்கான 2ஆவது பிரிவு ஆரம்பமாகிறது

**மகளிருக்கான துரித ஒரு மாத/5 மாதப் பயிற்சிகள்**

- கேக் ஐஸிங் (24 வகையான கேக் அமைப்புகளில் சகலவிதமான ஐஸிங் முறைகள்) மற்றும் மாச்சீனி மலர்கள் செய்தல்.
- உணவு தயாரித்தல் (மேலைத்தேச, கீழைத்தேச உணவுகள், சிற்றுண்டிகள்)
- கூந்தல் அலங்காரம் (20 இற்கும் மேற்பட்ட கொண்டைகள் போடுதல்)
- Fabric Painting (துணிகளில், சேலையில், கண்ணாடியில் வர்ணந்தீட்டுதல்) ✱ பூவேலை ✱ தைவேலை
- அடிப்படைத் தையல் தெரிந்தவர்களுக்கான சாறிபிளவுஸ் (Saree blouse) வெட்டித் தைக்கும்முறை
- 6 மாதகால உடை தயாரித்தல் (தையற்கலை) பயிற்சி (குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான ஆடைகள் தைத்தல், பூப்போடுதல்)

3 நாள்களுக்கான

அடிப்படை FACIAL முக அழகுக்கலையும், மணப்பெண்களை அலங்கரிக்கும் முறையும் வித்தியாசமான முறைகளில் 4 விதமாக சேலை அணியும் வகுப்புகளும் நடைபெறவுள்ளன.

**புதிய கிழமை நாள் வகுப்புகள் ஆரம்பம் : 01.03.2006**
**புதிய சனி - ஞாயிறு வகுப்புகள் ஆரம்பம் : 04.03.2006**

மேலும் விவரங்களை பிற்பகல் 2.30 மணி வரை நேரில் அறிந்துகொள்ளலாம்.

**இயக்குநர்.**

(#/46013)(26.32.17)


10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 13 - 07 - 1922



மறைவு 01 - 02 - 1996

அமரர்
**தம்பிப்பிள்ளை சின்னராசா**
[பிரபல வர்த்தகர்]

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 07 - 11 - 1927



மறைவு 25 - 01 - 2006

திருமதி
**சின்னராசா சரஸ்வதி**

25.01.2006 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவி திருமதி சின்னராசா சரஸ்வதி அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (24.02.2006) வெள்ளிக்கிழமை மு.ப.11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(46938)(52.32.19)

**37/10, இராமநாதன் வீதி,**
**தலையாழி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.**

-குடும்பத்தினர்
(ராஜா ...)

# மரண அறிவித்தல்



## போதகர் M.M. இன்பரூபன்

*(சீயோன் தேவாலயம், யாழ்ப்பாணம்)*

கொழும்பைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சீயோன் சபையின் சிரேஷ்ட உதவிப் போதகரான கர்த்தரின் திராட்சைத் தோட்டத்தின் பணியாளன் போதகர் M.M. இன்பரூபன் அவர்கள் 19.02.2006 ஞாயிற்றுக்கிழமை பரலோகத்தின் பரமனிடம் பரமேறிச் சென்றார்.

அன்னார் கிறிஸ்ரின் சியாமளாவின் அன்புக் கணவரும் கெட்ரூரா, டெபோரா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற S.J.A. மார்டீன்- திருமதி C.F மார்டீன் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற எட்வின் மரியாம்பிள்ளை-திருமதி சந்திரா மரியாம்பிள்ளை தம்பதியரின் மருமகனும் மரீனா, இதயரூபன், இன்ரிகா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரதனி - ஜெகன், அன்ரன் - மஞ்சு, ரவி - கோகிலா, சுரேஷ்-பிரதீஷா, மித்திரன் - காயத்ரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இவரின் நல்லடக்க ஆராதனை இன்று (24.02.2006) வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, மு.ப.11 மணிக்கு இறுதி அஞ்சலிக்காக சீயோன் தேவாலயத்திற்கு (24, இராமையாச் செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம், பழைய O.P.D. முன்பாக) எடுத்துச் செல்லப்பட்டு, பின்னர் நல்லடக்கம் கானான் சேமக்காலையில் (இராஜ வீதி, கோப்பாய்) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவாய் ஏற்றுக் கொள்ளவும்.

*F30, ... வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(47139)(42-32-17)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபால் மூலம் வாக்களிக்க குடாநாட்டில் இரண்டாயிரம் பேரே விண்ணப்பம்

## ஆனால் இருபதாயிரம் பேர் அதற்குத் தகுதி

யாழ்ப்பாணம்,பெப்.24

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலின்போது தபால் மூலம் வாக்களிப்பதற்கு யாழ்.மாவட்டத்தில் 20 ஆயிரம் பேர் தகுதிபெற்றுள்ளபோதும் 2 ஆயிரம்பேரே அதற்கான விண்ணப்பங்களை அனுப்பிவைத்துள்ளனர் என யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் கடந்த 16 ஆம் திகதி நிறைவடைந்தது.


இந்நிலையில் தபால் மூலம் வாக்களிப்புக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு இருந்தது. விண்ணப்ப முடிவு திகதி முடிந்த நிலையில் 2 ஆயிரம் பேரே தபால்மூலம் வாக்களிக்க விண்ணப்பித்துள்ளனர்.

யாழ்.மாவட்டத் தேர்தல் தொகுதியைச் சேர்ந்த தபால் மூலம் வாக்களிக்கத் தகுதியான 20 ஆயிரம் பேர் இலங்கை முழுவதும் கடமை புரிகின்றனர்.

இவர்களிலேயே 2 ஆயிரம் பேர் தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பித்துள்ளனர்.

(த-202-204)

## ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அன்னையின் மடியில் 09.10.1976

அநியாய அழிப்பில் 10.01.2006



அமரர்

### இராசலிங்கம் உமாசங்கர்

(வானொலி, தொலைக்காட்சி திருத்துநர்)

10.01.2006 அன்று சிவபதமடைந்த இராசலிங்கம் உமாசங்கர் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு அவரின் இல்லத்தில் இன்று (24.02.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெறும். அத்தருணம் இடம்பெறும் அவரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வசந்தகிரி,
சாவகச்சேரி வடக்கு,சாவகச்சேரி.

- குடும்பத்தினர்.

(47094)

## திருமறைக் கலாமன்றத்தில் கலைச் சங்கமம் நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.24

திருமறைக் கலாமன்றம் நடத்தும் 'கலைச் சங்கமம் - 2006' நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை மாலை 7 மணிக்கு யாழ்.திருமறைக் கலாமன்ற அரங்கில் இடம்பெறவுள்ளன.

யாழ்.திருமறைக் கலாமன்றக் கலைஞர்களினதும், தென்னிலங்கையின் கண்டி, பாணந்துறை, அவிசாவளை ஆகிய மூன்று திருமறைக் கலாமன்றக் கலைஞர்களினதும் கலை நிகழ்வுகளைக் கொண்டதாக 'கலைச் சங்கமம் - 2006' நிகழ்வுகள் அமையவுள்ளன.

இதன்போது, பல்வேறு பாரம்பரிய வடிவங்களில் அமைந்த நடனங்கள், கலாசார சங்கம நர்த்தனம், கோலாட்டம், எனப் பல நிகழ்வுகளுடன், நிறைவு நிகழ்ச்சியாக யாழ். திருமறைக் கலாமன்றம் வழங்கும் 'ஜெனோவா' நாட்டுக் கூத்தும் இடம்பெறவுள்ளது.

(த)

## ஆறாம் ஆண்டு நீங்காத நினைவுடன்



### அமரர் முருகேசு நடராஜலிங்கம்

(ஓய்வுபெற்ற இ. மின்சாரசபை உத்தியோகத்தரும் இந்திர தீபம் உரிமையாளரும்)

மண் மகிழ 19.12.1944 · நெஞ்சம் நெகிழ 01.03.2000

திதி: 24.02.2006

எம் குடும்பத்தின் ஒளி விளக்கே!
எம்மை வாழவைத்த தெய்வமே பப்பா!
நிலையில்லா வாழ்வினிலே நீங்காத நினைவுகளைத் தந்துவிட்டு
நிலையான வாழ்வுதேடிச் சென்ற தெய்வமே!
நாம் என்றும் உங்களை நினைத்திருக்க
நீங்கள் மட்டும்- எமை விட்டுப் பிரிந்து சென்றதேனோ?
ஆண்டுகள் ஆறு கடந்தாலும் ஆறிடுமோ எம் கவலை?
என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இன்றைய நாளில்
இறைவனை வேண்டுகின்றோம்.

(C/47100)

நிரந்தர முகவரி:
முதலாம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.

தற்காலிக முகவரி:
மணியகாரன் சந்தி, தும்பளை,
பருத்தித்துறை.

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
மனைவி,
பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.




உ
அம்பிகை துணை

பழைய காளி கோயில் என விளங்கும் கோண்டாவில் கிழக்கு, பொற்பதி வீதி

# திருவருள்மிகு ஸ்ரீ சிவ மஹாகாளி அம்பாள் தேவஸ்தானம்

## மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2006



பதினெட்டுக்கரமுடைய பகவதியாம் காளியம்மன்
நிதிகொட்டும் கவசமிதை நித்தமுமே பாடிவரின்
பதிவிதியும் ஓடிவிடும் பலவலிமை கூடிவரும்
மதி மலர்ந்த வாக்குவரும் மங்களமே மிக்குவரும்.

அம்பிகை அடியார்களே,

இற்றைக்கு 200 வருடம் பழமை வாய்ந்த ஆலயத்தில் மங்களகரமாக நிகழும் பார்த்திப வருடம் மாசி மாதம் 15 ஆம் நாள் திங்கட்கிழமை (27.02.2006) கொடியேற்றத்துடன் மஹோற்சவம் ஆரம்பமாகி மாசி மகத்தில் தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறும்.முதல் ஐந்து நாள்களும் விநாயகர், சுப்பிரமணியருக்கும் மிகுதி பத்து நாள்களும் அம்பாளின் அனுக்கிரகப்படி அம்பாளின் மகோற்சவம் நடைபெறும்.

### மஹோற்சவ விவரம்

| | | | |
|---|---|---|---|
| 27-02-2006 | திங்கட்கிழமை | பகல் 10 மணிக்கு | கொடியேற்றம் |
| 05-03-2006 | ஞாயிற்றுக்கிழமை | பகல் | பக்தி முக்தி பாலன உற்சவம் |
| 07-03-2006 | செவ்வாய்க்கிழமை | இரவு | வசந்தோற்சவம் |
| 09-03-2006 | வியாழக்கிழமை | இரவு | பூச்சப்பரம் |
| 10-03-2006 | வெள்ளிக்கிழமை | | வேட்டைத்திருவிழா |
| 11-03-2006 | சனிக்கிழமை | இரவு | சப்பரம் |
| 12-03-2006 | ஞாயிற்றுக்கிழமை | காலை 9.30 மணிக்கு | இரதாரோகணம் |
| 13-03-2006 | திங்கட்கிழமை | காலை 10 மணிக்கு | தீர்த்தோற்சவம் |
| | | இரவு | கொடியிறக்கம் |
| 14-03-2006 | செவ்வாய்க்கிழமை | பகல் | மாரி அம்மன் அபிஷேகம் |
| | | இரவு | உற்சவம் |
| 15-03-2006 | புதன்கிழமை | பகல் | அபிஷேகம், பூங்காவனம் |
| | | இரவு | ஊஞ்சல்,பூந்தண்டிகை |
| 16-03-2006 | வியாழக்கிழமை | பகல் | துர்க்கை, லக்ஷ்மி, சரஸ்வதி அபிஷேகம் |
| | | இரவு | உற்சவம் |
| 17-03-2006 | வெள்ளிக்கிழமை | பகல் | காத்தவராயர், ஆஞ்சநேயர் அபிஷேகம். காத்தவராயர் மடையும்(சுளகுமடையும்) |
| | | இரவு | ஆஞ்சநேயர்உற்சவம். |
| 18-03-2006 | சனிக்கிழமை | பகல் | வைரவர் அபிஷேகம் |
| | | இரவு | வைரவர் தோடிப்பொங்கல், சாந்தி உற்சவம் நடைபெறும். |
| 19-03-2006 | ஞாயிற்றுக்கிழமை | காலை 8.30 மணிக்கு | பிராயச்சித்த அபிஷேகம், வாகன பூசையுடன் மங்களகரமாக விழா நிறைவுபெறும். |

முக்கியகுறிப்பு:-

- சிவராத்திரி அன்று இரவு ஆசிமட அரசடி விநாயகர் ஆலயத்திலிருந்து அடியார்கள் நான்கு சாமமும் தீர்த்தக்காவடி எடுத்து வந்து இங்கு வீற்றிருக்கும் காசி ஈஸ்வரன் லிங்கத்திற்கு தங்கள் கைகளினால் அபிஷேகம் செய்யலாம்.
- மஹோற்சவ காலத்தில் 20 நாள்களும் அன்னதானம் நடைபெறும். இதற்கு வேண்டிய பணம் பொருள்களை ஆலயத்தில் கொடுத்து உதவவும்.
- பால், தயிர், இளநீர், பூவகைகள் கொடுத்து உதவவும்.
- காத்தவராயர் மடை 17.03.2006 அன்று பழைய மரபு முறைப்படி அடியார்கள் பங்குபற்றும் விதத்தில் சுளகுமடை நடைபெறும்.
- பங்குனி மாதம் நான்கு திங்கட்கிழமையும் திருக்குளிர்த்தி நடைபெறும்.

அடியார்கள் இக்காலத்தில் ஆசாரசீலர்களாய் வருகைதந்து அம்பாளைத் தரிசித்தும், இந்நிகழ்வுகளில் பங்கு கொண்டும், அம்பாளின் இஷ்டசித்திகளைப் பெற்று மண்ணில் நல்லவண்ணம் பேரின்பப் பெருவாழ்வு வாழ்வீர்களாக.

" மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

அனைவரும் வருக அன்னையின் திருவருள் பெறுக.

நாட்டின் நிலைமைக்கேற்ப நிகழ்ச்சியில் நேர மாற்றங்கள் செய்யப்படும்.

-அம்பாளின் தொண்டில் அறங்காவலர்

விளம்பர அனுசரணையாளர்:

JK COPIER PHOTO COPY PAPER, RATOMAC 'SMS' PENS

போன்றவற்றின் வடமாகாண விநியோகஸ்தர்:

இல.74, ராஜா பிளாசா, பலாலி வீதி, கோண்டாவில், தொ.பே.: 0773 169488, 021 4590 630

(47100)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையிலும் பறவைக் காய்ச்சல்...?



ஏவியன் இன்புளுவென்ஸா (**Avian in- fluenza**) அல்லது பறவைக்காய்ச்சல் என்பது இப்போது ஒவ்வொரு தனி மனிதனுக்கும் தெரிந்த, தெரிந்திருக்க வேண்டிய ஒரு தொற்று நோயாகும். இந்த நோயானது இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்பே இத்தாலி நாட்டில் முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வைரஸ் கிருமியானது சில காட்டுப் பறவைகளின் உணவுக்கால்வாய்த் தொகுதியில் காணப்பட்டபோதும் சாதாரணமாக அவைகளுக்கு நோயினை ஏற்படுத்துவதில்லை. ஆனாலும், அவை இக்கிருமியினை இடத்திற்கிடம் காவுகின்றன. எப்படியிருப்பினும் கூடுதலாக எல்லாப்பறவைகளுமே இதன் தாக்கத்திற்கு உள்ளாகக்கூடியதாயிருப்பினும் ஒருசில பறவைகளுக்கு இந்நோயின் தாக்கம் கூடுதலாகக் காணப்படுகின்றது. சில பறவைகளில் இது கூடுதலாகப் பரவக்கூடியதாகவும் வீட்டுப்பறவைகளான கோழி, வாத்து, தீக்கோழி போன்ற பறவைகளில் அதிகம் மரணத்தை ஏற்படுத்தக்கூடியதாகவும் உள்ளது. இந்த நோய்ப்பரம்பலில் பறவைப் பண்ணைகள் மூலம் ஏற்படும் வருமானமானது உலகளாவிய ரீதியில் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் 150 மில்லியன் கோழிகள் இறந்தோ அல்லது கொல்லப்பட்டோ இருக்கின்றன.

பறவைகளில் இந்நோயின் தாக்கமானது சிறிய அளவிலான சுகயீனம் தொடக்கம் மிகவும் வேகமாகப் பரவி ஒரே நேரத்தில் அநேகம் பறவைகளைப் பலி கொள்ளக்கூடிய அளவுக்குப் பயங்கரமான நோய்வரை காணப்படலாம்

பறவைகளிடையே பெரியளவிலான இதன் தாக்கமானது இதுவரையில் கம்போடியா, சீனா, கொங்கொங், இந்தோனேசியா, ஜப்பான், லாஓஸ், தென்கொரியா, தாய்லாந்து, வியட்னாம், இந்தியா ஆகிய இடங்களில் காணப்பட்டுள்ளது.

இந்நோயானது பறவைகளிடையே காணப்பட்ட போதிலும் முதன் முதலாக 1997ஆம் ஆண்டில் மனிதர்களிடையே கொங்கொங்கில் இனங்காணப்பட்டது.

### எதனால் ஏற்படுகின்றது?

இன்புலுவென்ஸா (**Influenza**) வைரஸ் கிருமியிலே பிரதானமாக **A, B, C** என மூன்று வகையான வைரஸ்கள் காணப்படுகின்றன. இந்த மூன்று நோய்க்கிருமிகளுமே மனிதனைத் தாக்கக் கூடியதாகக் காணப்படுகின்றபோதும் இந்த **A**



வகைக் கிருமியானது பறவைகளிலும் வேறு ஒருசில விலங்குகளிலும் நோயினை உண்டுபண்ணக்கூடியதாக உள்ளது. இந்த **A** வகை வைரஸிலே மேலும் 15இற்கும் மேற்பட்ட இனங்கள் காணப்படுகின்றன. இவை ஒவ்வொன்றுமே அவைகளின் மேற்பரப்பிலுள்ள புரதத்தினால் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டுக் காணப்படுகின்றது. இவற்றில் எல்லா வகையான **A** வகை வைரஸ்களுமே பறவைகளில் காணப்படலாம். கடந்த காலங்களில் ஏற்பட்ட எல்லா பெரிய அளவிலான பறவைக் காய்ச்சல்களுமே இந்த **A** வகைக் கிருமியினாலேயே ஏற்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அவை ஒவ்வொன்றும் **AH5, AH7** ஆகிய வகை வைரஸினாலேயே ஏற்பட்டிருந்தன. ஆனால், இம்முறை ஆசியாவிலே உருவாகியுள்ள இந்த நோய்ப்பெருக்கமானது **AH5N1** எனப்படும் நோய்வாய்த் தன்மை கூடிய வைரஸினால் உருவாகியுள்ளது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

### எவ்விதம் பரம்புகிறது

ஒரு நாட்டிற்குள்ளே இந்நோயானது மிக இலகுவாக ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குப் பரம்பக்கூடிய தன்மையுள்ளதாகக் காணப்படுகின்றது. இந்த நோய்தொற்றிற்குள்ளான பறவைகள் பெருமளவிலான வைரஸ் கிருமிகளினைத் தங்களது எச்சங்களாகிய மலம், உமிழ்நீர் மற்றும் சுவாசக் கழிவினூடாக வெளியேற்றுகின்றன. இந்தக் கிருமிகள் மண் மற்றும் தூசுகளின் மூலம் வேறு பறவைகளைச் சென்றடைகின்றன. அத்துடன், இந்த வைரஸ் கிருமியானது காற்றினூடாகவும் ஒரு பறவையிலிருந்து இன்னொரு பறவைக்குப் பரம்பக்கூடியதாயுள்ளது. தொற்றுள்ள எச்சங்களினால், தொற்றுப்படுத்தப்பட்ட உடைகள், பாத்திரங்கள், உணவுப் பதார்த்தங்கள், வாகனங்கள் போன்றவற்றினால் ஒரு பறவைப் பண்ணையிலிருந்து இன்னொரு பண்ணைக்கு இந்த வைரஸ் கிருமியானது பரப்பப்படுகின்றது. இந்த வைரஸ் கிருமியானது மனிதர்களது பாதங்கள் மற்றும் வேறு ஊரும் பிராணிகளின் உடலில் ஒட்டியும் ஓரிடத்திலிருந்து இன்னொரிடத்திற்குப் பரம்பக்கூடியதாயுள்ளது. சிறிய பூச்சிகள் மூலம் இந்நோய்க்கிருமி பரம்புவதற்கான ஆதாரங்கள் மிக அரிதாகவே காணப்படுகின்றன.

இன்றுவரை மனிதர்களிடையே 125 பறவைக்காய்ச்சல் நோய்கள் உலகம் முழுவதுமாக உறுதிசெய்யப்பட்டுள்ளது. இவற்றுள் 64 நோயாளிகள் இறந்துள்ளனர். இதுவரை இந்த ஏவியன் புளு ஒரு மனிதரில் இருந்து இன்னொருவரிற்குத் தொற்றக்கூடிய நிலைக்கு மாறவில்லை, இதனால், இதன் பரம்பல் குறைந்த அளவிலேயே காணப்பட்டது. ஆனால், பண்ணைகளில் இருந்து மனிதருக்குப் பரவிவரும் இந்தப் புளு அதிகரித்து வருவதால் இந்த வைரஸின் தன்மை மனிதனில் இருந்து இன்னொரு மனிதனுக்குப் பரவக்கூடிய விதத்தில் மாறக்கூடிய சந்தர்ப்பம் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. இலங்கையில் இதுவரையும் இந்நோய் தாக்காதபோதும், எமது அயல் நாடுகளில் வேகமாகப் பரவி வரும் அபாயங்களினால், அதை நாம் அசட்டை செய்துவிட முடியாது.

### கரிசனை கொள்ளவேண்டும்

உலகில் ஒவ்வொரு நாடுகளும் இதுவரையில் மூன்று பெரிய அளவிலான இன்புளுவென்சா காய்ச்சல் 10-50 வருட இடைவெளியில் ஏற்பட்டுள்ளன. இவை எதுவித முன்னறிவிப்புமின்றி எதிர்பாராத அளவு இறப்புக்களை ஏற்படுத்தியுள்ளன. 1918 - 1919ஆம் ஆண்டில் உலகில் 25% இற்கு அதிகமான சனத்தொகை (40-50 மில்லியன்) ஒரு வருடத்திற்குள் இன்புளுவென்சா நோயினால் இறக்கநேரிட்டது. இதிலே கூடுதலான மரணங்கள் 15 தொடக்கம் 35 வயதிற்கு இடைப்பட்டவர்களிடம் ஏற்பட்டது. இதன் பின்னர் 1957இல் இரண்டு


**வைத்தியகலாநிதி சி.எஸ்.சோலமன்,**
தாய், சேய் நல வைத்திய அதிகாரி,
யாழ்ப்பாணம்.


மில்லியனும் 1968இல் ஒரு மில்லியன் சனத்தொகையும் இவ்வகையான இன்புளுவென்சா வைரஸின் தாக்கத்தினால் இறந்துள்ளனர்.

இதன் அடிப்படையில் பரவிவரும் இந்தப் பறவைக்காய்ச்சலானது மனிதனுக்குப் பரவக்கூடிய நிலையை எட்டும்போது உலகளாவிய ரீதியில் பேரழிவினை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புகள் அதிகம் உள்ளன என நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். அத்தோடு இன்றைய சூழ்நிலையில் ஆசியாவில் இருந்தே இது ஆரம்பிக்கும் வாய்ப்பும் அதிகமாகக் காணப்படுவதாக உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.

இலங்கை ஒரு தீவாக இருப்பினும் இந்த நோயின் தன்மையானது இங்கும் பெரிய அளவில் பரம்பக்கூடிய வாய்ப்பினைக் கொண்டுள்ளது. ஏனெனில்,

1) பறவைகள் காலத்திற்குக்காலம் வேறு நாடுகளில் இருந்து இலங்கைக்கு இடம்பெயர்ந்து வருகின்றன.

2) இலங்கையில் கோழிப் பண்ணைகள் நாடு முழுவதும் பரவலாகக் காணப்படுவதோடு அவர்களுக்கு இதுபற்றிய விழிப்புணர்வும் குறைவாகக் காணப்படுகிறது.

3) பெருமளவிலான சுற்றுலாப்பயணிகள் பாதிக்கப்பட்ட நாடுகளில் இருந்து இலங்கைக்கு வந்தவண்ணம் உள்ளனர்.

கடந்தகாலங்களில் உலகளாவிய ரீதியில் பரவிய நோய்ப் பரம்பலானது ஆறு பிரதான கட்டங்களைக் கொண்டதாகக் காணப்பட்டது.

1) நோயின் தாக்கம் விலங்குகளில் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் காணப்படுவது.

2) விலங்குகளில் மாத்திரம் குறிப்பிடப்பட்ட அளவில் காணப்படுவது.

3) விலங்குகளில் இருந்து மனிதனுக்குப் பரம்பக்கூடிய நிலை ஏற்படுவது.

4) மனிதனில் இருந்து மனிதனுக்குப் பரம்பக்கூடிய நிலைக்கு அந்த வைரஸ் மாற்றப்படுவது.

5) மனிதனில் இருந்து மனிதனுக்குச் சிறிய அளவில் நோய்ப் பரம்பல் ஏற்படுவது.

6) உலகளாவிய ரீதியில் பெரிய அளவில் நோயின் தாக்கம் காணப்படுவது.

இவற்றில் இன்று உலகில் பரவிவரும் ஏவியன் இன்புளுவென்சாவின் தாக்கமானது மூன்றாம் கட்டத்தை அடைந்துள்ளது. இதற்கு அடுத்ததாகவுள்ள மனிதனில் இருந்து மனிதனிற்குத் தொற்றக்கூடிய நிலைக்கு வைரஸ் மாற்றமடையுமானால், இந்த வைரஸினால் ஏற்படக்கூடிய பேரழிவினைத் தடுப்பது மிகவும் கடினமான காரியம். இதனாலேயே இது பற்றிய விழிப்புணர்வு இன்று ஒவ்வொருவருக்கும் அவசியமாகத் தேவைப்படுகிறது.

இதுவரையும் உலகிலே மனிதர்களைத் தாக்கிய இவ்வைரஸானது பறவைகளுடனும் அதன் எச்சங்களுடனும் நேரடியாகத் தொடர்புபட்டவர்களுக்கே ஏற்பட்டுள்ளது. இதிலும் குறிப்பாக, சிறிய பண்ணைகளை வைத்திருப்பவர்களுக்கே இதன் தாக்கம் கூடுதலாக அவதானிக்கப்பட்டுள்ளது. இச்சிறிய பண்ணைகளில் உள்ள பறவைகள் உரிய முறையில் அடைத்துப் பராமரிக்கப்படாமல் வெளியே சுயாதீனமாக உலாவவிடப்படுவதால் தொற்றுள்ள பறவைகளோடும் அதன் எச்சங்களோடும் தொடர்புகள் ஏற்படும் சந்தர்ப்பம் அதிகமாகவுள்ளதே இதற்குக் காரணமாகும்.

### மனிதர்களிடையே நோயின் தாக்கம்

தற்போது பரவிவரும் **H5N1** வகை கிருமியிலான பறவைக் காய்ச்சல் நோயானது மனிதர்களிடையே முதன்முதலில் 2003ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கொரியா நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வைரஸ் கிருமியானது படிப்படியாகப் பலதரப்பட்ட விலங்கினங்களின் ஊடாக (காட்டுப்பறவைகள், பன்றி, பூனை, புலி) பரவத் தொடங்கியது. இதுவரையில் 13 நாடுகளை இது தாக்கியுள்ளது. அவையாவன: கொரியா, ஜப்பான், கம்போடியா, சீனா. இந்தோனேசியா, லாவோஸ், மலேசியா, ரஷ்யா, கசகஸ்தான், ஒங்கோலியா, தாய்லாந்து, வியட்னாம், இந்தியா.

### பறவைக்காய்ச்சல் நோய் பற்றி ஏன் பயப்பட வேண்டும்?

பறவைக்காய்ச்சல் நோயானது ஒரு மனிதனிலிருந்து இன்னொரு மனிதனுக்குப் பரவுவதற்கான ஆதாரங்கள் எதுவும் இதுவரையில் அறியப்படவில்லை. எனினும், இந்த ஏவியன் இன்புளுவென்சா வைரஸானது மனிதனைத் தொற்றும் பொழுது அவரில் இன்னுமோர் இன்புளுவென்சா வைரஸ் காணப்படுமாயின் இவை இரண்டும் சேர்ந்து ஒரு புதுவகையான வைரஸை உருவாக்கக்கூடும். இந்தப் புது வைரஸானது ஒரு மனிதனில் இருந்து இன்னொருவரிற்குக் கடத்தப் [illegible] அனேகரைத் தாக்கிப் பேரழிவினையும் ஏற்படுத்தக்கூடும். அதனாலேயே இந்தப் பறவைக்காய்ச்சல் பற்றி அதிக கவனமெடுக்கப்படுகின்றது.


இதுவரை மனிதர்களிற்கேற்பட்ட எல்லா பறவைக் காய்ச்சல் நோய்களுமே இறந்த அல்லது தொற்றுள்ள பறவைகள் அல்லது அவற்றின் எச்சங்களுடன் நேரடியான தொடர்புபட்டவர்களிடையே ஏற்பட்டுள்ளது. ஒருசில நோயாளிகள் மாத்திரம் உணவு தயாரிக்கும் நபர்களாகக் காணப்படுகின்றனர். சரியான முறையில் சமைத்த பறவை இறைச்சியின் மூலமோ அல்லது சரியாக சமைத்த முட்டையின் மூலமோ இதுவரை யாருக்கும் பறவைக்காய்ச்சல் வந்ததற்கான ஆதாரங்கள் இல்லை. ஒரேயொரு நோயாளிக்கு மாத்திரம் தாய்லாந்திலே இன்னொரு மனிதரிலிருந்து பறவைக்காய்ச்சல் நோய் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

### குணங்குறிகள்

அனேகமான ஏவியன் இன்புளுவென்சா வைரஸானது பறவைகளின் மத்தியில் நோயின் அறிகுறிகள் எதனையும் காட்டுவதில்லை; அல்லது சிறிதளவான குணங்குறிகளையே காட்டும். ஆயினும், இந்தக் குணங்குறிகளின் அளவானது பறவைகளின் இனத்திலும் தொற்றினை ஏற்படுத்தும் கிருமியின் வகையிலும் பெருமளவில் தங்கியுள்ளது. அதி வீரியம் கூடிய இன்புளுவென்சா வைரஸ் **H5, H7** வகையின் தொற்றானது சில பறவையினங்களின் மத்தியில் பாரிய அளவிலான நோயினையும் இறப்பினையும் ஏற்படுத்துகிறது.

மனிதர்களிடையே இந்த நோயின் அறிகுறியானது சாதாரண தடிமன், காய்ச்சலிலிருந்து (தொண்டை நோ, தசை நோ) கண்களில் தொற்று, சுவாசப்பைத் தொற்று, திடீர் மூச்சுத்திணறல் வரையான உயிர் ஆபத்தை ஏற்படுத்தும் நிலையினை உருவாக்கலாம்.

- இன்புளுவென்சா வைரஸ் **A,B,C** என மூன்று வகையாக உள்ளது.
- **A** வகையின் எல்லா உப இனங்களும் பறவைகளில் ஏவியன் இன்புளுவென்சாவை ஏற்படுத்துவதாக அறியப்பட்டுள்ளது.
- தொற்றுகள் உள்ள பறவைகளிலிருந்து வெளிவரும் எச்சங்கள் (உமிழ்நீர், நாசிநீர், மலம்) பெருமளவில் வைரஸ்களைக் கொண்டிருப்பதால் நிலத்தையும் சூழலையும் தொற்றுக்குள்ளாக்குகின்றன.
- இந்த நோயின் பரவலானது காற்றுவளியாகவும் தொற்றுக்குள்ளான பொருள்களோடான நேரடித் தொடுகையினாலும் ஏற்படுகின்றது.
- மனிதரில் இருந்து மனிதரிற்குப் பரவும் சாத்தியக்கூறுகளும் உண்டு. ஆனாலும், இவ்வகையான பரம்பலினால்



தாய்லாந்தில் ஓரேயொருவருக்கு மட்டுமே இவ்வாறு பரம்பியதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

- இப்பொழுது ஆசியாவில் ஏற்பட்டுள்ள பறைவைக் காய்ச்சல் நோயின் தாக்கமானது அதிவீரியங் கூடிய **H5N1** வகை வைரஸினால் ஏற்பட்டுள்ளது.
- மனிதர் மத்தியில் இப்பறவைக்காய்ச்சல் நோயின் அறிகுறிகளானது சாதாரண தடிமன், காய்ச்சலிலிருந்து கண் தொற்று, சுவாசப்பைத் தொற்று, உயிரிற்கு ஆபத்தை ஏற்படுத்தும் நிலைவரை காணப்படலாம்.

### தொற்றினை உறுதிப்படுத்தல்

1. கிருமியையும், கிருமியின் கூறுகளையும் கண்டறிதல்
2. நோயெதிர்ப்புக் காரணியைக் கண்டறிதல்( நாலு மடங்கு அதிகரிப்பு).

போன்றவற்றினால் ஒருவருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது அல்லது நோய் ஏற்பட்டுள்ளது என்பதை உறுதிசெய்யலாம்.

இந்தப் பரிசோதனைகள் மிகவும் பாதுகாப்பான சூழ்நிலைகளிலேயே மேற்கொள்ளப்படுவது அவசியமானது.

**Test available for the investigation of Avian influenza**

- **Direct fluoresecence test (DFT)**
- **Rapid antigen/antibody detection**
- **RT-PCR**
- **Virus isolation**
- **Serological Test**
- **Strain identification (at WHO Centers only)**

### சிகிச்சை

மனிதனில் ஏற்படும் இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கும் சிகிச்சைக்காகவும் வைரஸ் கிருமிகளுக்கெதிரான குறித்த சில மருந்துகள் பாவிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- **M2 inhibitors ( Amantadine, rimantadine)**
- **Nuraminidase inhibitors (Oseltamivir and zanimivir)**

ஆனால், இப்பொழுது இந்த வைரஸ்கள் **M2 inhibitors** இற்கு எதிர்ப்புச் சக்தியை உருவாக்கியுள்ளன.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்

## நிர்மாண வேலைகள்

## (யுனிசெவ்)

1. பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (மா), யாழ்ப்பாணம் சார்பாக தலைவர், மாவட்ட கேள்விச்சபை யாழ்ப்பாணம் அவர்களால் தகுதி வாய்ந்த சகல கேள்விதாரர்களிடமிருந்து கீழ்வரும் வேலைகளுக்காக மூடிய கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | வேலை விவரம் | ஒப்பந்த குறியீட்டு இல. | இக்ராட் பதிவு தரம் | மீளளிக்கப் படும்கேள்வி பிணை (ரூபா) | மீளளிக்கப் படாத கேள்வி வைப்புப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் நிர்மாணித்தல் தெல்லிப்பழை - சுன்னாகம் | JF/DPDHS/ UNICEF/02 | M - 6 அதற்கு மேலும் | 70,600.00 | 1,000.00 |
| 02 | சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் நிர்மாணித்தல் ஊர்காவற்றுறை | JF/DPDHS/ UNICEF/03 | M - 6 அதற்கு மேலும் | 76,000.00 | 1,000.00 |
| 03 | கிராம சுகாதார நிலையம் நிர்மாணித்தல், மெலிஞ்சிமுனை ஊர்காவற்றுறை | JF/DPDHS/ UNICEF/05 | M - 7 அதற்கு மேலும் | 44,800.00 | 750.00 |
| 04 | கிராம சுகாதார நிலையம் நிர்மாணித்தல், கட்டுவன் | JF/DPDHS/ UNICEF/06 | M - 7 அதற்கு மேலும் | 39,500.00 | 750.00 |

2. கேள்வி அறிவித்தல் தொடர்பில் பின்வரும் தகைமைகளை கேள்விதாரர்கள் கொண்டிருக்கவேண்டும்.
   i) இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்க (NCCASL) உறுப்பினராகவும், மேற்கூறிய அட்டவணையின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட ICTAD தரத்தையும் கொண்டிருத்தல்வேண்டும்.
   ii) ICTAD அறிவுறுத்தலுக்கமைய மேற்படி வேலை தொடர்பில் போதிய கேள்வி தகவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   iii) ஒப்பந்தகாரர் புதுப்பித்த தகவுப் புத்தகத்தைக் கேள்வி ஆவணங்கள்பெற முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கேள்வி கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து 120 நாள்களுக்கு செல்லுபடியாதல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள கேள்விதாரர் மேலதிக விவரங்களையும் கேள்வி ஆவணங்களையும் இலவசமாக அலுவலக நாள்களில் பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (மா), யாழ்ப்பாணம் பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி இல. 021-222-2632)
5. 27.02.2006 தொடக்கம் 13.03.2006 பிற்பகல் 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கேள்வித் தொகையை பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (மா), யாழ்ப்பாணத்தில் செலுத்தி கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
6. மூடிய கேள்விகளை **தலைவர், மாவட்ட கேள்விச் சபை, கச்சேரி, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு 15.03.2006 பிற்பகல் 3 மணிக்கு முன்பாக அனுப்பி வைத்தல் வேண்டும். பெறப்பட்ட கேள்விகள் உடனடியாகத் திறக்கப்படும். அந்நேரம் கேள்விதாரரோ அல்லது அவர்சார்பில் உரித்தளிக்கப்பட்டவரோ சமுகமளிக்க முடியும்.

குறிப்பு: ***கேள்விதாரருக்கு VAT சம்பந்தமாக எதுவித கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படமாட்டாது என்பதனை கவனத்திற் கொள்ளவும்.***

**கே.கணேஷ்**
தலைவர்,
மாவட்ட கேள்விச் சபை/ அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம்.

**பிரதம பொறியியலாளர் அலுவலகம்,**
**கட்டடங்கள் திணைக்களம் (மா),**
**கடற்கரை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-48021)(21.11.15)

### எக்காளத் தொனியின் தெய்வீகக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம்,பெப்.24

எக்காளத் தொனி சபை நடத்தும் தெய்வீக சமாதானக் கூட்டங்கள் இன்று தொடக்கம் 3 நாள்கள் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இக் கூட்டங்களில் பாஸ்ரர் கிம் ரோப், சகோதரி டெபிலார்சன் ஆகிய இருவரும் வழிபாடுகளை நடத்துவர். (த-202)

### கணனி அன்பளிப்பு

நல்லூர்,பெப்.24

நெடுந்தீவு பல நோ.கூ.சங்கத்தின் கிராமிய வங்கிக்கு ஐ.நா.அபிவிருத்தி நிறுவனம் புதிய கணனி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (எ-111)

### 'பாண்ட்' வாத்தியக் கருவிகள் அன்பளிப்பு

வலி.தென்மேற்கு,பெப்.24

மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலயத்திற்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் பாண்ட் வாத்தியக் கருவிகளை அன்பளிப்புச் செய்துள்ளது.

இதேவேளை - மாணவர்களுக்கு கணனிப் பயிற்சி வழங்குவதற்காக புதிய கணனி ஒன்றையும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் வழங்கியுள்ளதாக மகா வித்தியாலய அதிபர் வி.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

ஏற்கனவே விஞ்ஞான கூடம் ஒன்றை அமைப்பதற்கு இந்த நிதியம் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை வழங்கியிருந்தது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-135)

### சமைத்த உணவு வழங்குமாறு கோரிக்கை

வலி.தென்மேற்கு,பெப்.24

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்கள் தமக்கு சமைத்த உணவு இதுவரை வழங்கப்படவில்லை என்றும் - சமைத்த உணவை வழங்க ஆவன செய்யுமாறும் - யாழ். சுகாதாரசேவை பிரதி மாகாணப் பணிப்பாளரை கடித மூலம் கேட்டுள்ளனர்.

கடந்த வாரம் வைத்தியசாலை ஊழியர்கள் கையொப்பமிட்டு வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி ஊடாக அனுப்பியிருந்த கடிதத்தில் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (எ-135)

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 25 - 09 - 1948

மறைவு 26 - 02 - 2003

**அமரர் கந்தையா ஜெயராசா**

(கமநல சேவை ஊழியர், முல்லைத்தீவு)

*பாசத்தின் உறைவிடமே! நேசத்தின் இருப்பிடமே!*
*எங்கு ஐயா சென்றீர் எம்மை விட்டு நீங்கள்?*
*ஓடிவாருங்கள் அப்பா உங்கள் முகம்காண*
*ஏங்கித் தவிக்கின்றது எங்கள் இதயங்கள்*

\- குடும்பத்தினர்.

*கச்சாய்வெளி,*
*பளை.*

(சி/48031)(26.11.15)

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 01 . 08 . 1938

உதிர்வு 13 . 03 . 1999

**அமரர் சின்னக்குட்டி வேலுப்பிள்ளை**

பண்பின் பிறப்பிடமே!
பாசத்தின் உறைவிடமே!
குடும்பத்தின் ஒளிவிளக்கே
ஆண்டுகள் ஏழு ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவு மட்டும் மறையாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**'சிவகிரி' மீசாலை வடக்கு,**
**கொடிகாமம்.**

**குடும்பத்தினர்.**

(46904)

## 18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 20 - 10 - 1937

மறைவு 13 - 02 - 1988

**அமரர் தி.சி.சண்முகலிங்கம்**

***(இணுவில் கிழக்கு)***

*திதி: 24.02.2006*

அவனியில் பிறந்த பயன் அளவில் சேவையுடன்
சிவாலயத் தொண்டுகள் பல சீருடனாற்றிய
கொற்றம் பலவுடைக் குடும்பக் கலசமே - அப்பா!
உற்ற விதியால் ஒரு கணத்தில் பிரிந்ததுவோ - உம்
மக்கட் செல்வங்கள் கல்வியில் மகிமை உற்று,
தக்க பதவிகளில் தழைத்து நிற்கையில் - விழிநீரால்
எக்கணமும் உமை இறையெனவே ஏற்றுகிறோம்!

*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*சிவகாமியம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.*

**அன்பான மனைவி,**
**பிள்ளைகள், சுற்றத்தார்.**

'சுகந்தம்'
இணுவில் கிழக்கு. (47151)(21.11.15)


**திருமணமா உங்களுக்கு.........!**

**சொர்க்கமே காத்திருக்கிறது உங்களுக்காக! ஆம்.... அதற்காக**



மங்களகரமான அழைப்பிதழ்களை அனுப்பிவையுங்கள்....!



**போஸ் காகிதாதியாளர்கள்**
இல. 03 மருத்துவமனை வீதி,
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

அத்தனையும் இறக்குமதி செய்யப்பட்ட அழகிய
அழைப்பிதழ்கள் மிகக்குறைந்த விலையில்

boasco@gmail.com T.P: 021 222 6549

**போஸ்கோ நிறக்கலை பதிப்பகம்**
252, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






ஜீவனோபாய செயற்றிட்டப் பயிற்சிப் பட்டறையின் ஆரம்ப நிகழ்வில் பருத்தித் துறைப் பிரதேச செயலக உதவித் திட்ட மிடல் பணிப்பாளர் திருமதி கே.ஜெயராசா மங்கள விளக்கேற்றுவதையும் சேவா லங்கா நிறுவன மாவட்டப் பணிப்பாளர் எஸ். ஆனந்தராசா தலைமையுரை நிகழ்த்து வதையும் முதலிரு படங்களில் காணலாம். பருத்தித்துறைப் பிரதேச செயலர் இர.வர தீஸ்வரன், சேவாலங்கா நிறுவன திட்ட முகா மையாளர் எஸ்.கீத பொன்கலன் ஆகியோ ரும் இந்தப் படத்தில் உள்ளனர். பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினர் அடுத்துள்ள படத்தில் காணப் படுகின்றனர். *(படங்கள் : சி.சுந்தரலிங்கம், கரவெட் டிச் செய்தியாளர்)*

# ஜீவனோபாய செயற்றிட்டம் குறித்து பருத்தித்துறையில் பயிற்சிப் பட்டறை

கரவெட்டி,பெப்.24

சேவாலங்கா நிறுவனம் ஏற்பாடு செய்த ஜீவனோபாய அபிவிருத்திச் செயல்திட்டம் பற்றிய பயிற்சிப் பட்டறை கடந்த செவ்வா யன்று புலோலியில் அமைந்துள்ள கமத் தொழில் திணைக்களத்தின் கேட்போர் கூடத் தில் நடைபெற்றது.

சேவாலங்கா நிறுவனத்தின் யாழ்.மாவட் டப் பணிப்பாளர் ஆர்.ஆனந்தராசா தலை மையில் செவ்வாயன்று காலை 10 மணிய ளவில் இந்தப் பயிற்சிப் பட்டறை ஆரம்பமா னது.

நிகழ்வில் பருத்தித்துறைப் பிரதேச செய லாளர் இரா.வரதீஸ்வரன் பிரதம விருந்தின ராகவும் சேவாலங்கா திட்ட முகாமையாளர் எஸ்.கீதபொன்கலன், பருத்தித்துறைப் பிர தேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் திரு மதி எஸ்.ஜெயராசா, பருத்தித்துறை நகரசபை யின் நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.நடராசா, பருத்தித்துறை பிரதேச சபையின் உள்ளூ ராட்சி உதவியாளர் திருமதி எஸ்.நந்தினி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

வடமராட்சியைச் சேர்ந்த பல்வேறு சங் கங்களின் பிரதிநிதிகளும் தொண்டர்களும் இந்தப் பயிற்சிப் பட்டறையில் பங்கேற்ற னர். (எ-70)

# ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகம் நடத்தும் மென்பந்துத் துடுப்பாட்ட இறுதிப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.24

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறைப் பிர தேச செயலக விளையாட்டுக்குழுவினரால் யாழ். மாவட்டத்திலுள்ள அரச, தனியார் நிறு வனங்களுக்கிடையில் நடத்தப்பட்ட மென் பந்து துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியின் இறு திப்போட்டியும் பரிசளிப்பும் நாளைமறு தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஊர்காவற்றுறை பொதுவிளை யாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 9 மணிக்கு அரையிறுதிப் போட்டிகள் நடைபெறும்.

இதில் மாவட்ட செலான் வங்கி அணியை எதிர்த்து யாழ். மாவட்ட செயலக 'ஏ' அணி யும்-

யாழ்.போதனா வைத்திய சாலை அணியை எதிர்த்து யாழ்.தபால் திணைக்கள அணியும் மோதவுள்ளன.

அரையிறுதிப்போட்டிகளில் வெற்றி பெறும் அணிகளுக்கான இறுதியாட்டமும் பரிசளிப்பும் பிற்பகல் 2.30 மணிக்கு தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடை பெறும்.

இந்த நிகழ்வுகளில் ஊர்காவற்றுறை மக் கள் வங்கிக்கிளையின் முகாமையாளர் எஸ். தயாபரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள் வார். (எ-190)

# ஆடுகளைக் கடித்துக் குதறும் கட்டாக்காலி நாய்கள்

கோப்பாய்,பெப்.24

அச்செழு இராணுவக் காவலரணை அண் டிய மண்அணைப் பகுதிகளில் அப்பகுதி விவசாயிகளால் மேய்ச்சலுக்காக அவிழ்த்து விடப்படும் ஆடுகளை அந்தப் பிரதேசத்தி லுள்ள கட்டாக்காலி நாய்கள் கடித்துக் குதறு வதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இருவாரங்களில் மட்டும் ஐந்திற் கும் அதிகமான ஆடுகள் இவ்வாறு அழிக்கப் பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (எ-72)

# இந்திய குல்லாப் படகுகளின் ஆக்கிரமிப்பால் வடமராட்சி வடக்கு மீனவர்கள் பாதிப்பு

வடமராட்சி,பெப்.24

வடமராட்சி வடக்குக் கடலில் கடற்றொழி லில் ஈடுபடும் மீனவர்கள் இந்திய குல்லாப் படகுகளின் ஆக்கிரமிப்பு காரணமாக பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக மேற்படி மீனவர்கள் வட மராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுற வுச் சங்கத்திடம் நேற்றுமுன்தினம் முறைப் பாடு செய்துள்ளனர்.

இதுதொடர்பாக மீனவர்கள் செய்த முறைப் பாட்டில் -

கடற்படையினரின் தாக்குதலின் மத்தி யிலும் கடந்த செவ்வாய்கிழமை இரவு மீனவர்கள் கடற்றொழிலுக்குச் சென்றுள்ளனர். ஆனால், அன்று பெருந்தொகையான குல் லாப் படகுகள் வடமராட்சி வடக்கு கடலில் ஆக்கிரமித்திருந்தன.

அந்தக் குல்லாப் படகுகளில் இருந்த இந் திய மீனவர்கள் எமது பகுதிக் கடலில் தாராள ளமாக மீன்பிடித்துக்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் கடற்றொழிலைச் செய்ய முடியாது மீனவர்கள் தாம் சென்ற படகுகள், மீன்பிடி உபகரணங்களுடன் கரை திரும்பி யுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தியக் குல்லாப் படகுகளின் ஆக்கிர மிப்புக் கெடுபிடிகள் குறித்து வடமராட்சிப் பகுதி மீனவர்கள் வடமராட்சி வடக்கு கடற் றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச பொது முகாமையாளர் க.சூரியகுமாரிடம் புகார் தெரிவித்துள்ளனர். (எ-173)

# பொதுக் கூட்டங்கள்

வலி.தென்மேற்கு,பெப்.24

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 23ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்கத்தலைவர் வி.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ. சிவலிங்கம், கூட்டுறவு உதவி ஆணையாளர் (எண்பார்வை) த.கந்தசாமி, சங்கானை மக் கள் வங்கி முகாமையாளர் பொ.அச்சுதம் பிள்ளை ஆகியோர் கலந்துகொண்டு உரை யாற்றுவர். (எ-135)

* * *

வடமராட்சி,பெப்.24

வடமராட்சி தெற்கு மேற்கு, (கர வெட்டி) கால்நடை வளர்ப்போர் சங்க பொதுக் கூட் டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமை யில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் கால்நடை வளர்ப் போரின் தேவைகள் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெறுவதுடன் புதிய உத்தியோகத்தர் களும் தெரிவு செய்யப்படுவார்கள். (173)

# மண்கும்பானில் பனங்கிழங்கு திருட்டு

புங்குடுதீவு,பெப்.24

மண்கும்பான் பகுதியில் உள்ள பனம் பாத்திகள் இரவுவேளைகளில் குலைக்கப் பட்டு அவற்றிலிருந்து பனங்கிழங்குகள் திரு டப்பட்டு வருவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவித்தனர்.

பனங்கிழங்குக்கான 'சீஸன்' ஆரம்பித் திருப்பதை அடுத்து இத்தகைய திருட்டுகளில் ஈடுபடுவோர் பனங்கிழங்கைத் திருடிவிட்டு ஊமல்களால் பனம்பாத்திகளை மூடிவிட்டு சென்றுவிடுகின்றனர் என்று - கூறப்பட்டது. (எ-188)

# லண்டன் பழைய மாணவர் நிதியுதவியுடன் மானிப்பாய் இந்துவில் அபிவிருத்திப் பணிகள்

வலி.தென்மேற்கு, பெப்.24

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு லண் டனிலுள்ள கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் வழங்கிய ஆறு லட்சம் ரூபா நிதி மூலம் பல்வேறு அபிவிருத்திப் பணிகளும் புனரமைப்புப் பணிகளும் நிறைவேற்றப்பட் டுள்ளன.

கல்லூரியிலுள்ள சாரி மண்டபம் புனர மைப்புச் செய்யப்பட்டு மெருகூட்டப்பட் டுள்ளதுடன் இங்குள்ள வகுப்பறைகளும் நவீன மயப்படுத்தப்பட்டுள்ளன என்று கல்லூரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

அதிபர் அலுவலகத்துடன் கூடிய நிர்வா கக் கட்டடமும் புனரமைக்கப்பட்டுள்ளது. கல்லூரி உள்ளக வீதியும் தார் சாலையாக புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. (எ-135)

# மனிதப் பிறவியின் மாண்பினை அறிவோம்

''அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது'' என்றார் ஒளவையார். இப்படிப் பெருமை பேசும் நாம் இப்பிறவி எப்படிக் கிடைத்தது? இப்பிறவியை நாம் பெறக் காரண காரியங்கள் எவை? இப்பிறவி யின் பயன் யாது? என்று எண்ணுவதில்லை நம் மில் மிகப் பெரும்பான்மையோர். இது பற்றி என் றுமே எண்ணாத போதும் ஞானிகளும், மகான்களும், முனிவர்களும் , அறிஞர்களும், சித்தர்களும் அன் றும் இன்றும் இதுபற்றி அயராது நன்கு சிந்தித்து எமக்கு நல்வழி காட்டியுள்ளனர்.

எல்லாம்வல்ல கடவுளுடைய திருவடிகளை

## ஞானக்கதிர்

அடைவதற்காகவே நாம் பிறவி எடுத்தோமாதலால் அந்தத் திருவடிகளைச் சிந்தித்தலும், தியானித்த லுமே எமது தலையாய கடனாகும். இன்றைய கால கட்டத்தில் இறை வழிபாடு இல்லாத மனிதன் விலங்கு எனவும், இறைவழிபாடு செய்கின்ற மனி தன் தேவன் எனவும் நாம் உணரவேண்டும்.

உடலறிவு, ஆற்றல், திறமை, நல்லொழுக்கம், வல்லமை, அழகு இப்படியாக மனிதனுக்கு மனி தன் மிகப் பெரும் வேற்றுமையுடன் பிறக்கின்றானே. இதன் மர்மம் தான் என்ன? இதற்கு விடை கூறும் இந்துமதம் ஒருவன் இப்புவியில் வாழும் வாழ்வு அவன் முற்பிறப்பில் செய்த பாவ புண்ணியங்களின் பயன் என விளக்கியுள்ளது.

ஆகவே பிறவி எடுத்ததன் நல்ல பயன் இறை வனை நாம் எல்லோரும் உள்ளன்போடு, புனித மாக வணங்கி முத்தியின்பம் பெறுவதேயாகும். சிவ பெருமானே முழுமுதற்கடவுள். அவரே உலகத்திற் குக் கர்த்தா. ஆகையால், நாம் அவரது பாதக் கம லங்களைப் பணிந்து எமது பாதகக் கமலங்களைப் போக்கிக் கொள்ளலாம். நல்லைநகர் ஸ்ரீலஸ்ரீ ஆறு முகநாவலர் இதைத்தான் வலியுறுத்தியுள்ளார்.

கடவுளிடம் பக்தி செலுத்த வயதும் தோற்றமும் குறுக்கிடாது. கல்வி, செல்வம், ஜாதி, பலம் முக்கிய மில்லை. நல்ல ஆசாரம், நற்குணம் இவற்றிலும் செலுத்துவதில்லை. அவர் அன்பு ஒன்றையே எதிர் பார்க்கிறார். அன்பு இல்லாதவருக்கு தானமும் தவ மும் செய்யாதவருக்கு விண்ணுலக வாழ்வு நிரா கரிக்கப்படும். இதனால், அவன் மீண்டும் பிறந்தே ஆகவேண்டும்.

இந்த நிலையிலுள்ள மனித வாழ்வில் நீர்க்கு மி ழிக்கு நிகரான சொற்ப காலத்தில் நன்மையைச் செய்து புண்ணியத்தைத் தேடிக் கொள்ளுதல் வேண் டும். வங்கிக் கணக்கில் பணம் இருந்தால்தான் தேவைக்கு எடுத்துக்கொள்ளமுடியும். சொர்க்கம் என்னும் வங்கியில் புண்ணியம் என்ற பணத்தைப் போட்டு வைத்துக்கொள்ளுதல் வேண்டும். இந்தப் பிறவியிலே புண்ணியத்தைச் செய்தால் அதன் பயனை நிச்சயம் பெற்றுக்கொள்ளலாம்.

மானிடப் பிறவி எடுத்த நாம் முதலில் மனிதனாக வாழப் பழகவேண்டும். மனம், மொழி, மெய் ஆகிய மூன்றாலும் அறம் புரியவேண்டும். புனித மான மனத்தால் செய்யும் அறம் கடவுள் உணர்வும் நற்சிந்தையும் ஆகும். மொழியால் புரியும் அறம் ஆண்டவன் திருநாமம் ஓதிடப் புகழ்பாடுதலும் பிற ருக்குத் துன்பம் பயவாத மொழிகளைக் கூறுதலு மாகும். உடலால் புரியும் அறம் பதியை மலர் கொண்டு பரவுதல். அடியார்களுக்குத் தொண்டு பூணு தல் பிற உயிர்களுக்கு நன்மை செய்தலுமாகும்.

[illegible]
*(நன்றி : 'அருள் ஒளி')*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அனுராதபுரம் ஸ்ரீ கதிரேசன் ஆலய பாலஸ்தாபன பெருவிழா அண்மை யில் நடைபெற்றது. சிவஸ்ரீ க.சோமசுந்தரக் குருக்கள் கிரியைகள் நடத்து வதை முதற்படத்திலும் நாட்டில் சமாதானம் நிலவவேண்டி ஆலய முன்றி லில் சர்வமதப் பிரார்த்தனை இடம்பெறுவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

இந்த விழாவில் வடமத்திய மாகாண முதலமைச்சர் பேட்டி பிரேம்லால் திசநாயக்கா, செயலர் எச்.பி.சோமதாச, சிறைச்சாலை அத்தியட்சகர் காமினி, யாழ். சேவாலங்கா பணிப்பாளர் இளங்கோ,சேவாலங்கா தலை வர் ஹர்சா நவரத்ன, சாமதீப தலைவர் சந்திரரத்ன உட்பட பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

### பறவைக் காய்ச்சல் பீதியால் இந்தியாவில்

# ஆறு கோடி முட்டைகள் தேக்கம்; மொத்த இழப்பு ஆயிரம் கோடி ரூபா!



பறவைக்காய்ச்சல் பீதி காரணமாக நாமக்கல் கோழிப்பண்ணைகளில் உற்பத்தியான ஆறு கோடி முட்டைகள் தேக்கம் அடைந்துள்ளன. பறவைக்காய்ச்சல் நோய் பீதியால் இந்தியா முழுவதும் முட்டை, கோழி விற்பனையில் சரிவு ஏற்பட்டுள்ளது.

உற்பத்தி செய்யப்பட்ட முட்டை, கறிக்கோழி, வயது முதிர்ந்த முட்டைக்கோழி ஆகியவற்றை என்ன செய்வதெனத் தெரியாமல் தவிக்கும் நிலைக்குப் பண்ணையாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் நாமக்கல், ராசிபுரம், ஈரோடு பகுதிகளில் மட்டும் நாளொன்றுக்கு இரண்டரைக்கோடி முட்டைகள் உற்பத்திசெய்யப்படுகின்றன. தினமும் 30 லட்சம் முட்டைகள் வெளிநாடுகளுக்கும் 50 லட்சம் முட்டைகள் கேரள மாநிலத்துக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. மற்ற முட்டைகள் அனைத்தும் உள்ளூரில் விற்பனை செய்யப்பட்டன.

பறவைக் காய்ச்சல் பீதியால் இந்திய கோழிப் பண்ணைத் தொழிலுக்கு ஆயிரம் கோடி அளவுக்கு இழப்பு ஏற்படும் என தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு மண்டலத் தலைவர் டாக்டர் பி.செல்வராஜ் தெரிவித்தார்.

மகாராஷ்டிர மாநிலத்தில் பறவைக் காய்ச்சல் பரவியதைத் தொடர்ந்து அங்குள்ள லட்சக்கணக்கான கோழிகள் அழிக்கப்பட்டு வருகின்றன. இந்நோய் பீதியால் பல்வேறு மாநிலங்களில் கறிக்கோழி விற்பனை சரிந்துள்ளது. ஒருசில மாநிலங்களில் கறிக்கோழி விலை கிலோ ரூ.15 ஆக இருந்தும் போதிய விற்பனையில்லை. நோய் பீதி



யால் தொழிலுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை சீரடைந்து மீண்டும் சகஜநிலை திரும்ப 3 மாதத்துக்கு மேலாகும்.

இதன்மூலம், இந்தியக் கோழிபண்ணைத் தொழிலுக்கு ஆயிரம் கோடி ரூபாவுக்கு மேல் இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. நன்கு சுகாதாரமான முறையில் பண்ணைகளைப் பராமரித்தாலே நோய்த் தொற்று ஏற்படாது - என்றார் அவர். (த)

# இஸ்ரேலை ஏற்காதவரை பலஸ்தீனத்துக்கு உதவி இல்லை!

### அமெரிக்க அதிபர் புஷ் அறிவிப்பு

இஸ்ரேலை ஏற்காதவரை பலஸ்தீனத்துக்கு நிதி உதவி அளிக்கமாட்டோம் என்று அமெரிக்க ஜனாதிபதி புஷ் அறிவித்திருக்கிறார்.

பலஸ்தீனத்தில் தற்போது ஆட்சி அமைத்துள்ள ஹமாஸ் இயக்கம் இஸ்ரேல் என்று ஒரு நாடு இருப்பதையே ஏற்க மறுத்து வருகிறது.

அத்தோடு பலஸ்தீன - இஸ்ரேல் இடையேயான பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு காண்பதிலும் அதற்கு நம்பிக்கை இல்லை.

ஹமாஸ் தலைமையிலான அரசுக்கு நிதி உதவி செய்தால் அந்த நிதியை ஆயுதம் வாங்குவதற்கு ஹமாஸ் பயன்படுத்தலாம் என்று அமெரிக்கா நம்புகிறது. இதனால், அமெரிக்காவும் இஸ்ரேலும் நிதி உதவி செய்ய மறுத்துள்ளன.

இது பற்றி அமெரிக்க ஜனாதிபதி புஷ் பத்திரிகையாளர்களிடம் கூறியதாவது:-

பலஸ்தீனத்துக்கு அமெரிக்க அரசு நேரடியாக மானியம் கொடுப்பது கிடையாது. அரசு அல்லாத அமைப்புகள் மூலம் மட்டுமே நாங்கள் மானியங்களை வழங்கி வருகிறோம். இஸ்ரேலின் இருப்பை ஹமாஸ் அங்கீகரிக்காத வரை பலஸ்தீனத்துக்கு நிதி உதவி அளிக்கமுடியாது. அமைதியின் பங்காளியாகப் பலஸ்தீனம் இருக்காத வரை நாங்கள் எப்படி உதவமுடியும்.

வன்முறையைக் கைவிட்டு இஸ்ரேலை அங்கீகரிக்காதவரை மனிதாபிமான உதவிகளைத் தவிர மற்ற அனைத்து உதவிகளையும் முடக்கிவிடுவோம். இஸ்ரேலை அழிப்பதுதான் எங்கள் இலட்சியம் என்று ஹமாஸ் கூறியுள்ளது. 2 நாடுகளும் அருகருகே அமைதியாக வாழ வேண்டும் என்பதுதான் அமெரிக்காவின் கொள்கை - இவ்வாறு புஷ் கூறினார். (த)



உலக அரங்கில்

## மொசாம்பிக்கில் கடும் நிலநடுக்கம்

மொசாம்பிக்,பெப்.24

ஆபிரிக்க நாடான மொசாம்பிக்கில் நேற்று கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவில் 7.5 புள்ளிகளாக இந்நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. அதிகாலை 3.49 மணிக்கு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என அமெரிக்க ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் குறித்த தகவல் இல்லை.

# பட்டாசுத் தொழிற்சாலையில் விபத்து; சிவகாசியில் பத்துப் பேர் கருகி மரணம்!

சிவகாசி,பெப்.24

விருதுநகர் மாவட்டம், சிவகாசி அருகே ஊரான்பட்டி பஞ்சாயத்துக்குட்பட்ட பர்மா குடியிருப்பில் உள்ள பட்டாசுத் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 10 பேர் பலியாகினர்.

15 அறைகள் கொண்ட இந்த ஆலையில் நேற்றுமுன்தினம் 60இற்கு மேற்பட்ட ஊழியர்கள் வேலைசெய்து கொண்டு இருந்தனர்.

மாலையில் ரொக்கெட் வெடிக்கு மருந்து செலுத்தும் அறையில் திடீரென பட் டாசு வெடித்துச் சிதறியது. இதில் அந்த அறை முழுவதும் இடிந்து தரைமட்டமானது. அதோடு, ரொக்கெட் வெடியில் பற்றிய நெருப்பு மற்ற அறைகளுக்கும் தாவியது. இதில் அங்கு அடுக்கிவைக்கப்பட்டிருந்த மற்ற வெடிகள் பயங்கரச் சத்தத்துடன் வெடித்துச் சிதறின. அப்போது 10 அறைகள் சேதமாயின.

இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே 4 பெண்கள் உட்பட 5 பேர் இறந்தனர். 5 பேர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு இறந்து போனார்கள்.

மேலும் 10 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் சிவகாசி அரச ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். அவர்களது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

விபத்து நடந்த இடத்தினை ஆளுநர் முகமது அஸ்லம், பொலீஸ் அதிகாரி ஜெயச்சந்திரன், உதவி ஆளுநர் பூஜா குல்கர்னி ஆகியோர் விரைந்துசென்று பார்வையிட்டனர்.

இது குறித்து மாரனேரி பொலீஸார் விசாரித்து வருகிறார்கள்.

கடந்த 3 மாதங்களில் 5 பட்டாசுத் தொழிற்சாலைகளில் வெடி விபத்து ஏற்பட்டுள்ளது. இவற்றில் மட்டும் 13 பேர் பலியாகி இருப்பது குறிப்பிடத்தக்கது.

**உறவினர்கள் மறியல்**

இதேவேளை, உயிரிழந்தவர்களுக்கு 3 லட்சம் ரூபாய் நிதி தரக் கோரி உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மறியல் நடத்தினர்.

இறந்தவர்களின் குடும்பத்திற்கு 50 ஆயிரம் ரூபா நிதியுதவி அளிக்கப்படும் என அரசு அறிவித்தது. இந்த நிலையில் 3 லட்சம் ரூபாய் நிதி தரக்கோரி, இறந்தவர்களின் உறவினர்கள் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆகியோர் இறந்தவர்களின் உடலை வாங்க மறுத்துப் போராட்டம் நடத்தினர். இதனால், சிவகாசி - ஸ்ரீவில்லிபுத்தூர் சாலையில் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது. (த)

## ஷெரோனுக்கு சத்திரசிகிச்சை

ஜெருசலேம்,பெப்.24

இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோனுக்கு வயிற்றுப் பகுதியில் சிறிய சத்திரசிகிச்சை நடைபெற்றது. இதன்பிறகு அவர் உடல் நிலை சீராக உள்ளதாகவும் ஆனாலும், அவர் தொடர்ந்து கோமா நிலையிலேயே இருப்பதாகவும் டாக்டர்கள் தெரிவித்தனர். (த)

## விசாகபட்டினத்தில் கப்பலில் தீ; 3 பேர் பலி!

விசாகப்பட்டினம்,பெப்.24

விசாகப்பட்டினம் துறைமுகத்தில் நின்று கொண்டிருந்த கப்பலில் நேற்று திடீரென்று தீப்பிடித்ததில் 3 பேர் பலியாகியுள்ளனர். 11 பேர் காயமடைந்துள்ளனர். தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து தீயணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். தீ விபத்திற்கான காரணம் கண்டறியப்படவில்லை. (த)

# நைஜீரியாவில் இனக்கலவரம்!

நைஜீரியா,பெப்.24

ஆபிரிக்காவில் உள்ள நைஜீரியா முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் சம அளவில் உள்ளனர். மொத்தம் உள்ள 14 கோடி மக்களில் வடக்கில் முஸ்லிம்களும் தெற்கில் கிறிஸ்தவர்களும் பெரும் அளவில் வசிக்கிறார்கள்.

டென்மார்க் நாட்டில் இருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்றில் நபிகள் நாயகத்தின் கார்ட்டூன் வெளியானதற்கு எதிர்ப்புத் தெரிவித்து முஸ்லிம்கள் கலவரத்தில் ஈடுபட்டனர். கிறிஸ்தவ ஆலயங்களுக்குத் தீ வைத்தனர். தேவாலயங்களில் பிரார்த்தனை நடத்திய கிறிஸ்தவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இதற்குப் பதிலடி கொடுக்கும்வகையில் கிறிஸ்தவர்கள் கலவரத்தில் ஈடுபட்டனர். இளைஞர்கள் கையில் துப்பாக்கி மற்றும் கல் ஆகியவற்றுடன் சந்தை ஒன்றினுள் புகுந்து கண்ணில்பட்ட முஸ்லிம்களை எல்லாம் தாக்கினர், நைஜர் ஆற்றுப்பாலத்தில் கணவன், மனைவியைக் கலவரக்காரர்கள் அடித்து உதைத்தனர். பிறகு அவர்களை உயிருடன் கொளுத்தினர்.

கலவரக்காரர்களுக்குப் பயந்து இராணுவத்திடம் அடைக்கலம் கேட்டு இராணுவ முகாம் நோக்கி முஸ்லிம்கள் பெருந்திரளாக ஓடினர். இந்தக் கலவரத்தில் 11 பேர் கொல்லப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

பல மசூதிகளுக்குத் தீவைக்கப்பட்டு இருப்பதாகச் செஞ்சிலுவைச் சங்கம் கூறி உள்ளது. இந்தக் கலவரத்தில் ஆயிரம் பேர் வீடுவாசல்களை இழந்தனர். அவர்கள் இராணுவ முகாமிலும் பொலீஸ் நிலையங்களிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இந்தக் கலவரத்தில் 38 பேர் கொல்லப்பட்டதாக மற்றொரு தகவல் தெரிவித்தது. (த)

## இந்தியாவில் பறவைக் காய்ச்சலா? கட்டுக்கதை என்கிறார் விஜயகாந்த்

சென்னை, பெப். 24

பறவைக்காய்ச்சல் பீதி இந்தியாவையே உலுக்கிக் கொண்டிருக்கிறது. நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் மத்திய மாநில அரசுகளும் விஞ்ஞானிகளும் தீவிரம் காட்டி வருகின்றனர்.

ஆனால், பறவைக்காய்ச்சல் என்பதெல்லாம் வெறும் கட்டுக்கதை என்றார் நடிகர் விஜயகாந்த். சேலம் மாவட்டம் தேவூரில் பிரசாரம் செய்தபோது அவர் கூறியதாவது:-

'நாமக்கல்லில் 2 கோடி முட்டை பாதிப்பு என்று செய்தி வந்துள்ளது. திடீரென பறவைக்காய்ச்சல் என்று கதைகட்டிவிட்டுள்ளனர். இது உண்மையாக இருக்காது. யாராவது மருந்துக் கம்பெனிக்காரன் லஞ்சம் தந்திருப்பான். அவனது மருந்து விற்கவேண்டும் என்பதற்காக, இதுபோன்று அறிவித்து இலாபம் சம்பாதிக்க நாடகம் ஆடுகின்றனர்' இப்படி ஒரு தகவலை வெளியிட்டிருக்கிறார் விஜயகாந்த்.



இதுகுறித்து கால்நடை பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவரிடம் கேட்டபோது, 'மக்கள் நலன் சம்பந்தப்பட்ட விடயத்தில் எந்த அரசும் நாடகம் ஆடாது.

நோய் பாதிப்பு குறித்த அறிகுறிகள் தென்பட்டதும் தீவிரமாக ஆராய்ந்துதான் பறவைக் காய்ச்சல் பரவியிருப்பதாக டாக்டர்கள் அறிவித்துள்ளனர். அரசும் பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி இருக்கின்றது.

இந்நிலையில் புதிதாகக் கட்சி தொடங்கியுள்ள விஜயகாந்த் இதைக் கட்டுக்கதை என்கிறார். அவரது கருத்துத் தீவிரமாக ஆராயப்படவேண்டிய ஒன்றுதான் - என்றார். (த)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## Farewell to
### REV. M.M.INBARUPAN



It is with profound sadness that we say farewell to Rev. M. Inbarupan of Zion Church, Jaffna, who was, for the past several years, a coordinator of the CTS - Jaffna extension. His deep godliness, unflagging zeal, sincere love, and overflowing joy has made a significant impact on us all, for which we give Glory to God.

Our heartfelt condolences and prayers are with his wife, Mrs Shamala Inbarupan, his daughters Keturah and Deborah, mother Mrs.C.F. Martin and senior Pastor Josiah philip, Co-Ministers and the members of Zion Church.

From the Principal, Council, Faculty, staff, Jaffna Coordinating committee and students (Kohuwela, Jaffna & Matara)

**Colombo Theological Seminary.**
**189, Dutugemunu Street, Kohuwela.** (47147)

## எங்கள் இதயத்தின் விம்மல்கள்



### போதகர் M.M. இன்பரூபன்

[சீயோன் தேவாலயம்]

சத்தியத்தைச் சத்தியமாகப் போதித்து
சத்தியத்தின்படி வாழ்ந்து விண்மகிமைக்குள்
பிரவேசித்த அன்பு போதகர் இன்பரூபன்
அவர்களுக்கு எங்கள் இதயம் உடைந்து
வழியும் வேதனையோடு
கண்ணீர் சொரிகின்றோம்.

**திருநெல்வேலி சீயோன் தேவாலய**
**ஊழியர்கள், விசுவாசிகள்.**

(47171)(32-11)

## துயர் பகிர்கின்றோம்



### போதகர் M.M. இன்பரூபன்

*(சீயோன் தேவாலயம்,*
*யாழ்ப்பாணம்)*

அவர்கள் 19.02.2006 கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினர், சபையார் யாவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஸ்தாபகர் - நிர்வாகி, போதகர்கள்,**
**ஊழியர்கள், விசுவாசிகள்,**
**எக்காளத்தொனி பூரண சுவிசேஷ**
**சர்வதேச ஊழியங்கள்,**
**இலங்கை - இங்கிலாந்து.**

(47165)(32-11)

## எம் நீங்காத நினைவில் ...

*''நீதிமானோ தன் மரணத்தில் நம்பிக்கையுள்ளவன்''*
*நீதி 14:32*



போதகர்
### M.M. இன்பரூபன்

[சீயோன் தேவாலயம்]

*அன்பர் இயேசுவின் கரங்களில்*
*அலங்காரக் கிரீடமே இன்பா*
*நெஞ்சினில் வேதனை தந்து*
*நீங்காத நினைவானீர்*
*கண்ணீரில் குளித்து*
*கரமசைத்து விடை தருகின்றோம்*
*இயேசுவின் சமூகத்தில்*
*நித்தம் இன்பம் காணவே.*

*நீங்காத நினைவில்:*
**கல்வா[illegible] குடும்பம்,**
[illegible]

(47172)(42-32-11)


# பார்வையாளர் காத்திருப்பு மண்டபம்

தென்மராட்சி கிழக்கு, பெப்.24

பருத்தித்துறை (மந்திகை) ஆதார வைத்தியசாலையில் நோயாளர்களைப் பார்வையிடும் பொதுமக்கள் தங்கியிருக்க மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

யுனிசெவ் நிறுவனத்தின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த மண்டப நிர்மாண வேலைகளை மேற்படி ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபையினர் மேற்கொண்டு வருகின்றனர். (எ-122)

# கண்ணி அகற்றும் நிறுவன ஊழியருக்கு கருணா குழுவினர் அச்சுறுத்தல்!

மட்டக்களப்பு, பெப். 24

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் இணை நிறுவனமான கண்ணி அகற்றும் நிறுவனத்தின் பணிபாளர்களை ஆயுதக் கும்பல் ஒன்று மிரட்டிவிட்டுச் சென்றுள்ளது.

சாதாரண உடையில் வந்த கருணா குழுவினரே இவ்வாறு மிரட்டல் விடுத்துள்ளது என்று புலிகள் தரப்புச் செய்திகள் கூறுகின்றன.

எம்.ஏ.ஜி. எனப்படும் கண்ணிவெடி ஆலோசனைக் குழு என்ற அந்த அமைப்பின் மட்டக் களப்பு அலுவலகத்திற்கு நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.55 மணியளவில் நுழைந்த ஆயுத தாரிகள், பணியாளர்களை அச்சுறுத்தியுள் ளனர். அவர்கள் நன்றாகத் தமிழ் பேசினர் என்றும் அந்த அமைப்பின் உள்ளூர் பணியாளர்களோ வேறு எந்தப் பணியாளர்களோ அந்தப் பகுதியில் பணியாற்றக் கூடாது என அவர்கள் மிரட்டினர் என்று பணியாளர்கள் கூறினர்.

கடந்த ஜனவரி மாதம் 29, 30ஆம் திகதிகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த 7 பணியாளர்கள் இராணுவத் துணைப் படைகளால் கடத்தப்பட்டனர். அவர்களை இன்றுவரை காணவில்லை. (க)

# மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.24

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் மு.மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.வரதராஜன் பிரதம விருந்தினராகவும் வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் திருமதி பரமேஸ்வரி நல்லதம்பி சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வார். (எ-13)

★ ★ ★

தென்மராட்சி கிழக்கு,பெப்.24

வரணி மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் செ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விளையாட்டு விழாவில் யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகப் பொறியியலாளர் ஜீ.சிவபாலன் பிரதமவிருந்தினராகவும் சிறப்பு விருந்தினராக ஜி.ரி.இசற் நிறுவனத்தின் நிதி இணைப்பாளர் செ.ஞானராசாவும் கௌரவ விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயப் பிரதி கல்விப்பணிப்பாளர் கோ.வரதராசமூர்த்தியும் கலந்துகொள்வர். (எ-122)

★ ★ ★

தொல்புரம்,பெப்.24

தொல்புரம் அ.மி.த. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பொக்கனை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் வ.பரமேஸ்வரம்பிள்ளை தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் வலிகாமம் மேற்கு, சங்கானை பிரதேச செயலர் ஏ.சி.மோகன்றாஸ் [illegible] கலந்துகொள்வார். (எ-13-119)

# இலங்கை சமாதான முயற்சிகளுக்கு நியூஸிலாந்து முழுமையான ஆதரவு

சேர்ச்சில், பெப்.24

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு நியூஸிலாந்து அரசு முழுமையான ஆதரவைத் தொடர்ந்து அளிக்கும் என்று அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சர் வின்ஸ்டன் பீற்றர்ஸ் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்காவின் 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு நியூஸிலாந்து, மலேசியா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு அரசியல் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. உலக வங்கி நிதி உதவியுடன் இந்தச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இக் குழுவினர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நியூஸிலாந்து வெளிவிவகார அமைச்சர் வின்ஸ்டன் பீற்றர்ஸை சந்தித்துப் பேசினர்.

''ஸ்ரீ லங்கா அரசு முகம் கொடுத்திருக்கும் நீண்டகால பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நியூஸிலாந்து அரசு தொடர்ந்து ஆதரவளிக்கும். இலங்கையில் நிரந்தரமான எதிர்காலம் மற்றும் அமைதியை உருவாக்க அனைத்து அரசியல் கட்சியினரும் ஒருங்கிணைந்து செயற்படவேண்டும்'' - என்றும் வின்ஸ்டன் பீற்றர்ஸ் கேட்டுக் கொண்டார்.

மேலும் ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிகள் தொடர்பாகவும் ஸ்ரீலங்கா குழுவினருடன் வின்ஸ்டன் பீற்றர்ஸ் ஆலோசனை நடத்தினார். ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிகளுக்காக இலங்கைக்கு நியூஸிலாந்து அரசு ஒரு கோடி நியூஸிலாந்து டொலர்களை வழங்கி உதவியுள்ளது. (எ-க)


## கண்ணீர் அஞ்சலி

*19.02.2006 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்த*
*எமது நண்பி*
**டெபோரா இன்பரூபன்** *அவர்களின் அன்புத் தந்தை*

### M.M. இன்பரூபன்

*அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், துயரில் நாமும் பங்கேற்று, அவரின் நித்திய இளைப்பாறுதலுக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

**நண்பிகள்**
(சி/48034)(32-11) P.Dayana, S.Dhamayanthi & A.Sarba.

## ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்



*எமது கல்லூரி ஆசிரியர்*
*திரு.க.நித்தியானந்தனின்*
*அன்புச் சகோதரி*
**அமரர் கணபதிப்பிள்ளை பவளராணி**
*(சமுர்த்தி அலுவலர்,*
*மட்டுவில் வடக்கு J/313)*
*அவர்களின் 45ஆம் நாள் நினைவு*
*அலைகளுடன் நாமும் இணைந்து*
*ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.*

**நலன்புரிக் கழகம்,**
**யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.**

(47169)(32-11)

## கண்ணீர் அஞ்சலி

*சைவவித்தியா விருத்திச் சங்கத்தின்*
*பணிப்பாளர் சபை உறுப்பினர்*
**திருமதி நாச்சியார் செல்வநாயகம்**
*அவர்களின் அன்பு மருமகள்*

### திருமதி பானுமதி தணிகைக்குமரன்

*அவர்கள் டென்மார்க்கில் காலமான செய்திகேட்டு துயருருகின்றோம். அவரின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அவரது ஆத்மாசாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.*

சைவவித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி. (சி/48035)(32-11)

பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்,
பணியாளர்கள், இல்லச்சிறார்கள்.

## கண்ணீர் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்



### போதகர் M.M. இன்பரூபன்

(சிரேஷ்ட உதவிப் போதகர், சீயோன் தேவாலயம்)

*அன்பின் பிறப்பிடமாகவும் ஆண்டவனின்*
*அருட்பணியில் ஆவல் படைத்தவருமாகிய*
*எமது இனிய , இன்பா அண்ணா!*
*உங்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்கள் சமர்ப்பணம்.*

**போதகர், ஊழியர், விசுவாசிகள்**
*(வன்னிப் பிராந்தியம்).*

(477164)(42-32-11)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவா பேச்சு வெற்றியளிக்க வேண்டி மட்டு.மாவட்டத்தில் அமைதிப் பேரணி

ஜெனிவா சமாதானப்பேச்சுகள் நிரந்தர சமாதானத்தைத் தரவேண்டி மட்டக்களப்பில் பாரிய சர்வமத பிரார்த்தனைகளும், அமைதிப் பேரணியும் இடம்பெற்றன.

மட்டக்களப்பு சமாதானத்திற்கான சக வாழ்வுமன்றம் இச்சமாதானப் பேரணியையும், பிரார்த்தனை வைபவத்தையும் ஏற்பாடு செய்திருந்தன. மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயம், ஜாமியுஸ்ஸலாம், ஜும்ஆப்பள்ளிவாசல் , ஸ்ரீ மங்கள ராம ராஜ மகா விகாரை, வீரகத்தி பிள்ளையார் ஆலயம் என்பவற்றில் விசேட சமய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. மத்திய வீதியில் ஆரம்பமான அமைதிப் பேரணி பிரதானவீதி, முனைவீதி, மணிக்கூட்டுக் கோபுரச்சந்தி, திருமலை வீதியூடாகச் சென்று தாமரைக் கேணியிலுள்ள சகவாழ்வு மன்றத் தலைமையகத்தையடைந்தது. அங்கு சகவாழ்வு மன்றத் திட்ட அதிகாரி எஸ். ராஜனினால் சமாதானப் புறாக்கள் பறக்கவிடப்பட்டன. (க-211)




அமைதிப் பேரணியில் கலந்துகொண்ட மாணவர்கள் மற்றும் கல்விப் பிரமுகர்கள் ஊர்வலமாகச் செல்வதையும் இந்து, இஸ்லாம், பௌத்த மதங்களின் தலைவர்கள் பிரார்த்தனை உரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

# 56 ஆம் ஆண்டு பண்டா உருவாக்கிய புரட்சியை நானும் ஏற்படுத்துவேன்

## மக்கள் ஐக்கிய முன்னணி மாநாட்டில் ஜனாதிபதி கருத்து

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறுவனரான எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்க ஏற்படுத்திய 1956ஆம் ஆண்டுப் புரட்சியை மீளவும் புதுப்பிப்போம் "-இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். நேற்றுமுன்தினம்நடைபெற்ற மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி 50ஆம் ஆண்டு நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

1956ஆம் ஆண்டு எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க இடதுசாரிகள்மற்றும்தேசியசக்திகளை இணைத்து ஒரு புரட்சியை நடத்தினார்.

இதேவேளை, பண்டாரநாயக்க, எனது தந்தை டி.எம். ராஜபக்ஷ, டபிள்யூ தகாநாயக்க ஆகியோர் மக்கள் ஐக்கிய முன்னணியை உருவாக்கி அதே ஆண்டு புரட்சியை நடத்தினார். இந்த மக்கள் ஐக்கிய முன்னணியின் கொள்கைகளையே சிறிமாவோ பண்டாரநாயக்கவும் ஏற்றுக்கொண்டு செயற்பட்டார்.

ஆனால், சில காலங்களுக்குப் பின்னர் சுதந்திரக் கட்சியினர் சிலர் அக்கொள்கைகளுக்கு எதிராகச் செயற்பட்டனர். இந்தத் தவறை நான் செய்யமாட்டேன். மக்கள் ஐக்கிய முன்னணியின் கொள்கைகளைப் பின்பற்றி நானும் செயற்படுவேன்.

இடதுசாரிக் கட்சிகளோடும் தேசிய சக்திகளோடும் நான் இணைந்து நிற்பதை பலரும் எதிர்க்கின்றனர்.

நான் மாற்றுப் பாதையில் செல்வதாக அச்சம் தெரிவித்தனர். ஆனால், மக்கள் விரும்பும் பாதையில் தான் நான் செல்கின்றேன் - என்றார்.

# இனப்பிரச்சினைக்கு பேச்சுமூலம் தீர்வு காண்பதில் எக்காரணம் கொண்டும் பின்வாங்க வேண்டாம்

## ஜனாதிபதிக்கு சர்வமதத் தலைவர்கள் மகஜர்

மதங்களுக்கிடையிலான சமாதான மாநாடு நேற்றுமுன்தினம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதன் போது சர்வமதத் தலைவர்கள் பிரகடனம் ஒன்றை எடுத்தனர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அப்பிரகடனத்தின் பிரதி அனுப்பி வைக்கப் பட்டது. அந்த மகஜரில் தெரிவிக்கப் பட்டிருப் பதாவது:-

போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு நான்கு வருடங்கள் நிறைவுபெறுதலும் ஜெனீவா நகரில் பேச்சு ஆரம்பமாவதைக் குறிக்கும் முகமாக 22ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடத்தப்பட்ட மதங்களுக்கிடையிலான மாநாட்டின் மூலம் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக இப்பிரகடனத்தை தங்களுக்கு சமர்ப்பிக்கின்றோம்.

கடந்த நவம்பர் மாதம் நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தலின்போது இந்நாட்டிற்கு கௌரவமான சமாதானத்தைக் கொண்டுவருவதற்காக தாங்கள் வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றும் ஒருபடியாக சர்வகட்சி மாநாடு ஒன்றை நடத்தியதோடு நோர்வே அனுசரணை யுடன் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புடன் கலந்துரையாடி இனப்பிரச்சினைக்கோர் தீர்வுகாண்பதற்காக நீங்கள் எடுத்த முயற்சி களை பெரிதும் பாராட்டுகின்றோம். அதுமாத்திரமின்றி காலம் தாழ்த்தாது ஜெனிவா நகரில் இன்று சமாதான பேச்சுகள் ஆரம்பிப்பதற்காக நீங்கள் எடுத்த முயற்சிகள் வழங்கிய தலை மைத்துவம், மற்றும் அர்ப்பணிப்பு எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் சமயத் தலைவர்களின் பங்களிப்பு மற்றும் அர்ப்பணிப்புகள் நாம் நன்கறிவோம். இன்றைய தினம் நாட்டின் பல்வேறுபட்ட சமயங்களையும், இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சகல மதங்களுக்கிடையிலான சமாதான மகாநாட்டின் மூலம் எடுக்கப்பட்ட கீழ் குறிப்பிடப்படும் விடயங்களை உங்களது மேலான கவனத்தில் கொண்டுவர விரும்புகின்றோம்.

✱தங்களால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளை தொடர்ந்தும் அதேவழியில் நடைமுறைப் படுத்துவதோடு அந்நடவடிக்கைகளில் சகல சமயங்களின் பிரதிநிதிகளான எமது ஒத்துழைப்பைத் தொடர்ச்சியாக வழங்குவதற்கு நாம் உறுதிபூண்டுள்ளோம்.

✱இந்நாட்டின் கௌரவமானதும், நிலையானதுமான சமாதானத்தை ஏற்படுத்துவ தற்காக எவ்விதத் தடைகள் மற்றும் இடைஞ்சல்கள் ஏற்படினும் பேச்சுகள் மூலமும், இனப்பிரச்சினைக்கான தீர்வைநோக்கிச் செல்வதற்காக தாங்கள் எடுத்துள்ள நடவடிக்கைகளின்றும் பின்வாங்க வேண்டாமென கேட்டுக் கொள்கின்றோம்.

✱ இந்நாட்டில் 20 வருடங்களுக்கு மேலாக பல்லாயிரம் உயிர்களைப் பலிகொண்ட இந்நாட்டின் பொருளாதாரம் மற்றும் கலாசாரத்தின் மீது மிகப் பாரிய தாக்கத்தை ஏற்படுத்திய இனப்பிரச்சினைக்கான தீர்வை ஏற்படுத்தும்போது அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளும் அடிப்படையிலான தீர்வொன்றை ஏற்படுத்துவதற்காக தங்களதும் தங்களது அரசினதும் அர்ப்பணிப்புகளை அவ்வாறே தொடர்ந்தும் நடைமுறைப்படுத்த வேண்டுமென நாம் கேட்டுக்கொள்கின்றோம். (எ-க)

# வேலணையில் அபிவிருத்திப் பணிகள்

யாழ்ப்பாணம்,பெப்.24

வேலணை, செட்டிபுலம் பகுதியில் ஐ.நா. அபிவிருத்தித்திட்ட நிதி ஒதுக்கீட்டில் 3 அபிவிருத்தித் திட்டங்கள் 23 லட்சம் ரூபா செலவில் முன்னெடுக்கப்படுகின்றன.

✱ செட்டிபுலம் கலைமகள் ச.ச. வீதி - 10 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படுகிறது.

✱அங்கு 9 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் பொது மண்டபமும் 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் சந்தையும் அமைக்கப்படுகிறது.

இந்த அபிவிருத்தி திட்டங்கள் வேலணைப் பிரதேச செயலகமும் பிரதேச சபையும் இணைந்த வகையில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. (த-185)

# பொதுச்சபைக் கூட்டம்

வலி.தென்மேற்கு(சண்டிலிப்பாய்) பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தின் பொதுச் சபைக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சமாசத் தலைவர் ச.செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் பிரதே செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்துகொள்வார். (3-135)


தொடர் இல. 1687

22.02.2006 ஆம் திகதி புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி எண்கள் சுப்பர் எண்

26 31 33 61 10

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 200978976 இலிருந்து 200995520

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 1,74,92,250/-வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 1,74,92,250/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 36 | 5,000/- | 1,80,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 438 | 1,000/- | 4,38,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,413 | 500/- | 7,06,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 21,544 | 40/- | 8,61,760/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 20,383 | 20/- | 4,07,260/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,06,083 | 10/- | 30,60,830/- |
| மொத்தம் | | | 76,54,150/- |
| தங்க நகைகள் , [illegible] | 5 | 100,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,49,884 | | 81,54,150/- |

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 1,83,09,750/-

| | |
|---|---|
| பொலன்னறுவை | 200981992-9-04 |
| திருகோணமலை | 200982513-8-88 |
| இரத்தினபுரி | 200981674-0-75 |
| மொனராகலை | 200980319-2-73 |
| கேகாலை | 200990422-8-52 |

அபிவிருத்தி லொத்தர் சபை


# பரமேஸ்வராச் சந்தியில் கைதான ஊடகவியலாளர் இருவரும் விடுதலை

யாழ்ப்பாணம்,பெப்.24

கடந்த டிசெம்பர் மாதம் யாழ்.பல்கலைக் கழகச் சமூகம் நடத்திய அமைதிப் பேரணியின் போது அச்சூழலில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இரண்டு ஊடகவியலாளர்களும் விடுதலை செய்யப் பட்டுள்ளனர்.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதியளவில் பரமேஸ்வராச் சந்திக்குச் சமீபமாக இராணுவத்தினரையும் அவர்களது யுத்த டாங்கியையும் அனுமதியின்றிப் படம்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த மதனசுரேந்திரன் சுதாகரன், குணநாயகம் ரவிசங்கர் ஆகிய இருவர் மீதும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்குத் தொடர்பான விசாரணைகள் யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் கடந்த மாதம்25 ஆம்,26 ஆம் திகதிகளில்நடைபெற்றன.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகளாக அ.விநாயமூர்த்தி, எஸ்.சுரேந்திரன் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

இந்த வழக்கு விசாரணையில் சட்டத்தரணிகள்ஆட்சேபனைகளை எழுப்பினர்.

பரமேஸ்வராச் சந்தியை அண்மித்த பகுதியில் வைத்து இராணுவத்தினரையும் அவர்களது யுத்த டாங்கியையும் எதிரிகள் படம்பிடித்துள்ளனர் எனத்தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு அவசரகாலச் சட்டத்தின்30 ஆவது பிரிவிற்கு மாறானது.

அவசரகாலச் சட்டத்தின் 30 ஆவது பிரிவு, பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரின் அனுமதியின்றி ஸ்ரீ லங்கா இராணுவம், பொலீஸார், வான்படை, கடற்படை ஆகியோரால் பயன்படுத்தப்படும் ஒரு கட்டடத்தையோ அல்லது அவர்கள் பயன்படுத்தும் விமானம், கப்பல் போன்றவற்றையோ படம் எடுக்கக்கூடாது என்றுதான் சொல்கிறது.

ஆகையால் அவசரகாலச் சட்டத்தின்30ஆவது பிரிவின் பிரகாரம் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளஇருவரும் எதுவித குற்றமும்செய்யவில்லை- இப்படி சட்டத்தரணியினர் வாதிட்டனர்.

சட்டத்தரணியினரின் வாதங்களை ஆராய்ந்த பின் நீதிபதி அளித்த தீர்ப்பில் -

எதிரிகளுக்கெதிரான குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டவாறு வீதியில் கடமையிலிருக்கும் இராணுவத்தினரையோ அவர்களது யுத்தடாங்கியையோ படமெடுக்கக் கூடாது என்ற வாசகம் குறித்து அவசரகாலச் சட்டத்தின் 30 ஆவது பிரிவில் எதுவும் இல்லை என்பதையிட்டு நான் திருப்தியடைகிறேன்.

எனவே, இந்த வழக்கைத் தொடர்ந்து நடத்த முடியாது என்று தெரிவிக்கப்பட்ட சட்ட ஆட்சேபனையை ஏற்று எதிரிகளை விடுதலை செய்கிறேன்- என்று தெரிவித்தார்.

அத்துடன், இவர்கள் இருவரும் சிறந்த ஊடகவியலாளர்கள் என்பதையும் நீதி மன்றம் ஏற்றுக்கொள்கிறது எனவும்-

குற்றஞ்சாட்டப்பட்டவர்களிடமிருந்து நீதிமன்றத்தால் பெறப்பட்ட கையடக்கத் தொலைபேசியை அவர்களிடம் கையளிக்குமாறும் - அத்தீர்ப்பில் நீதிவான் தெரிவித்தார். (3-203-13)


## முக்கிய அறிவித்தல்

இருபாலை கிழக்கு, இந்து மயானத்தின் பொதுக் கூட்டம் 05-03-2006 ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு (பு.நே.) இருபாலை கிழக்கு, பாரதி கலாமண்டபத்தில் நடைபெறவிருப்பதால் சகல மக்களும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மு.குறிப்பு : புதிய அங்கத்தவர் தெரிவும் நடைபெறும்.

இருபாலை கிழக்கு, இந்து மயான அபிவிருத்திச் சபை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனீவாப் பேச்சு ஆரம்பித்த தினத்தில் கிழக்கில் மீண்டும் வன்முறை அதிகரிப்பு

கிழக்கில் மீண்டும் வன்முறைகள் அதிகரிக்க ஆரம்பித்துள்ளன. அரசு - விடுதலைப் புலிகள் பேச்சு ஆரம்பமாகிய நேற்றுமுன் தினம் புதன்கிழமை விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அன்றைய தினம் நடந்த மூன்றாவது கொலை இதுவாகும். கிரான், விஷ்ணு கோயில் வீதியில் வைத்து இரவு 9.45 மணியளவில் நவராசன் என்ற இளைஞர் ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் ஒட்டுப்படையினரே இந்தக் கொலையை மேற்கொண்டனர் என்று விடுதலைப் புலிகள் தரப்புச் செய்திகள் குற்றஞ் சாட்டுகின்றன.

உயிரிழந்த சிவத்தம்பி தேவராசா (வயது - 20) மூன்று ஆண்டுகளாக விடுதலைப் புலிகள் இயக்கத்தில் உறுப்பினராக இருந்தவர். அண்மையிலேயே அமைப்பிலிருந்து வெளியேறி இருந்தார். திருமணம் செய்து கொண்டுள்ள அவருக்கு மிக விரைவிலேயே குழந்தை பிறக்கவுள்ளது.

அவரது சடலம் நேற்றுப் பகல் வரை அவர் இறந்து கிடந்த இடத்திலேயே கிடந்தது. மட்டக்களப்பு நகரில் இருந்து 25 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கிறது கிரான்.

கிரானில் புதன்கிழமை நடைபெற்ற மற்றொரு சம்பவத்தில் புலிகளின் துணைப்படை வீரரான நாராயணபிள்ளை சாந்தகுமார் மரணமடைந்தார். சந்திவெளி, திகிலிவெட்டையைச் சேர்ந்த இவர் ஒட்டுக்குழுவினரின் பதுங்குத் தாக்குதலில் கொல்லப்பட்டார் என்று புலிகள் குற்றஞ் சாட்டினர். இதேசமயம், ஏறாவூர், மீரா கேணியில் முஸ்லிம் இளைஞர் ஒருவரும் புதன்கிழமை இரவு சுட்டுக் கொல்லப்பட்டார். உயிரிழந்தவரான முகமது முகைதீன் (வயது 28) சாதாரண கூலித்தொழிலாளி என்று பொலீஸார் கூறினர்.

- இவ்வாறு கிழக்கில் ஒரேநாளில் மூன்று கொலைகள் இடம்பெற்றுள்ள அதேசமயம், மேற்கில் மன்னார் மாவட்டத்தில் தமிழ் வர்த்தகர் ஒருவரின் வீடு மீது கிரனேட் வீச்சு இடம்பெற்றுள்ளது. ஆள்களுக்குப் பாதிப்பு ஏற்படாத போதும் வீடு சேதமடைந்தது. வடக்கு - கிழக்கில் அதிகரித்து வந்த வன்முறைகள் ஜனவரிமாத இறுதியில் குறைந்தன. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனும், விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடனும் நோர்வே அனுசரணைக் குழுவின் தலைவரும் அமைச்சருமான எரிக்சொல்ஹெய்ம் நடத்திய பேச்சுகளை அடுத்து இந்தநிலை ஏற்பட்டது. அந்தச் சந்திப்பில் ஜெனீவாப் பேச்சுக்கான இணக்கம் ஏற்பட்டது. அன்றிலிருந்து அடங்கியிருந்த வன்முறைகள் ஜெனீவாவில் பேச்சு ஆரம்பமான அதே தினத்தில் மீண்டும் தலைவிரித்துள்ளன.


**VEMBADI GIRLS' HIGH SCHOOL, JAFFNA**
Annual Inter House Sports meet-2006
Time: 25.02.2006 Saturday 2.p.m.
Venue: School grounds
Chief Guests: Mr.T.Arunagirirajah
Deputy Director of Education (Planning)
Zonal Education office Jaffna
&
Mrs.Selvamahal Arunagirirajah
Parents, Past pupils & Well Wishers are Cordially invited
23-02.2006 PRINCIPAL, STAFF & STUDENTS


# மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.24

புத்தூர், புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்குப் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் நா.சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக சிறுவர் பாதுகாப்பு கல்விசார் முகாமையாளர் அ.பேரின்பநாதனும் சிறப்பு விருந்தினர்களாக நீர்வேலிப் பிரதேச சபைச் செயலாளர் த.நடராசா, கோப்பாய் கல்விக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம், மாகாண கணக்காய்வுத் திணைக்கள (நியாப்) பிரதம கணக்காளர் பெ.தம்பிராசா ஆகியோரும் கலந்துகொள்வர். (3-12)

* * *

நல்லூர்,பெப்.24

ஆவரங்கால், மகாஜனாக் கல்லூரியின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் ஆ.அருந்தவநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக டென்மார்க் செஞ்சிலுவைச் சங்க ஆலோசகர் செல்வி எடிற் ஹரினும் விசேட விருந்தினராகக் கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவஞானசுந்தரமும் சிறப்பு விருந்தினராக இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலிகாமம் கிழக்கு செயலாளர் இ.மயில்வாகனமும் கலந்துகொள்வர். (3-111-203)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.24

உடுவில் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.15 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யுனைற்றட் சேர்ச் ஒவ் கிறைஸ்றறைச் சேர்ந்த தியோடர் எல்சென்கெய்மர் கலந்துகொள்வார். (த-202)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.24

நவாலி றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெறும். (த-185)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.24

யாழ்.மத்திய கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் எஸ்.பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்விற்கு கல்லூரியின் பழைய மாணவனும் நல்லூர் பிரதேச சபையின் கணக்காளருமான சி.மனோகரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (3-190)

* * *

சாவகச்சேரி,பெப்.24

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் பாடசாலை அதிபர் வ.கயிலேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந் நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் பிரதம விருந்தினராகவும் சாவகச்சேரி கோட்டக் கல்வி அதிகாரி நா.சத்தியநாதன், சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (3-31)

* * *

தென்மராட்சி,பெப்.24

மட்டுவில் கமலாசனி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், முதன்மை விருந்தினராக சமநலவாய கல்வி அபிவிருத்திக்கான கூட்டமைப்பின் தலைவர் வி.சக்திவேலும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலய உடற்கல்வி முதன்மை ஆசிரியர் க.சிவகோச்சாரியாரும் கலந்துகொள்ளவுள்ளனர். (3-12-31)

# வணிக மன்றத்தின் மாதாந்த நிகழ்வு

வட்டக்கச்சி,பெப்.24

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் வணிக மாணவர் மன்றத்தின் மாதாந்த நிகழ்வும் தமிழீழ வைப்பகத்தின் பள்ளிச் சேமிப்பு அலகின் மாதாந்த குலுக்கல் நிகழ்வும் இன்று முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

நிதித்துறை வணிக ஒன்றியத்தின் ஏற்பாட்டில் சோழன் வாணிபத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், வணிக ஒன்றியத் தலைவர் வெற்றியரசன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்.

தமிழீழ வைப்பகத்தின் பள்ளிச் சேமிப்பு அலகில் கணக்குகளை வைத்துள்ள மாணவர்களில் 10 அதிர்ஷ்டசாலிகள் தெரிவுசெய்யப்பட்டு, சோழன் வாணிப அனுசரணையுடன் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இந் நிகழ்வு மாதாந்தம் வணிக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. (3-405)


## இணுவில் பொது நூலகம் சனசமூக நிலையம்

புனருத்தாரண நான்காவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்படுகின்ற போட்டிகள்

| | |
|---|---|
| மரதன் ஓட்டம் | : ஆண்கள் |
| கரபந்தாட்டம் | : பெண்கள் |
| மென்பந்து | : 06 ஓவர் (07 பேர்) |

மேற்படி போட்டிகள் உடுவில் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்டவர்கள் / உட்பட்ட கழகங்கள் பங்குபற்றலாம்.

சதுரங்கம் / கரம் } யாழ். மாவட்டத்தில் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

போட்டிப்பரீட்சை - பொதுஅறிவு, பொது உளச்சார்பு, மொழித்திறன்.

| | |
|---|---|
| ஆரம்பப் பிரிவு | - 5, 6 ஆம் தரங்கள் |
| கீழ்ப்பிரிவு | - 7, 8 ஆம் தரங்கள் |
| மத்திய பிரிவு | - 9, 10, 11ஆம் தரங்கள் |
| மேற்பிரிவு | - 12, 13 ஆம் தரங்கள் |

போட்டிப்பரீட்சைக்கு மாணவர்கள் பாடசாலை ஊடாக விண்ணப்பங்களை அனுப்பலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி : 03.03.2006

இணுவில் பொதுநூலகம் - சனசமூக நிலையம்.

(சி-48040)(30-12-49)



## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### விநாசித்தம்பி சோமசுந்தரம்

எமது பாடசாலை ஆசிரியை சோ.ஜெயகௌரி அவர்களின் தந்தையார் விநாசித்தம்பி சோமசுந்தரம் அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு அவரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(47187)(30-12-49) பாடசாலை சமூகம்
யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்.



## துயர்பகிர்கின்றோம்



போதகர் M.M.இன்பரூபன் (சீயோன் தேவாலயம்)

19.02.2006 அன்று மகிமைக்குள் பிரவேசித்த போதகர் இன்பரூபன் அவர்களின் குடும்பத்தார், சபை ஊழியர்கள், தேவபிள்ளைகள், உற்றார், உறவினர் யாவரோடும் நாமும் துயர்பகிர்கிறோம்.

இலங்கை நாற்சதுர சுவிசேஷசபை,
தேசிய நிர்வாகத்தினரும்
யாழ்.மாவட்ட ஊழியரும்

(47191)
(30-12-49)



போட்டிப் பரீட்சை வகுப்புகள்
நுண்ணறிவு - த.தவசேகர்
கிரகித்தல் - பா.மகாலிங்கசிவம்.
ஆவண உதவியாளர் பரீட்சை
D.M.I யாழ்.நகர் சனி,ஞாயிறு - 11.30-2.00
கிறிஸ்ரல் நெல்லியடி சனி,ஞாயிறு - 09 - 11
S.L.E.A.S திறந்த பரீட்சை
D.M.Iயாழ்.- சனி 2-6
(47185)

மனோகரா யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
இளம் புயல் ரவி, கம்னா நடித்த
இதயத்திருடன்
காட்சி நேரம்: 10.30, 1.30, 4.30, 7.30

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
அக்ஷன் கிங் அர்ஜூன், கஜாலா, விவேக் நடித்த
மதராஸி
புதியநேரம்: 10.00, 1.00, 4.00

நாகம்ஸ் சுன்னாகம்
விஜய், திரிஷா நடித்த
ஆதி
காட்சிநேரம்: பு.நே. 11.00, 3.00.7.00
அடுத்த வெளியீடு பரமசிவன்

ராஜா யாழ்ப்பாணம்
இன்று மட்டும் சிம்பு, ஜோதிகா,பிரகாஷ்ராஜ் நடித்த

நேரம்: பு.நே. 10.30, 2.15 மட்டும்
சரவணா
அடுத்த வெளியீடு
கோவை பிரதர்ஸ்
பு.நே. 10.30, 1.30, 4.30



## மரண அறிவித்தல்கள்

### இரத்தினம் வாமதேவன்



சிலம்புப்புளியடி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் தொட்டிலடி, சங்கானையை வதிவிடமாகவும் கொண்ட இரத்தினம் வாமதேவன் (பிரபல கார் தரகர்-சின்னம்பி) அவர்கள் நேற்று (23.02.2006) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திருதிருமதி இரத்தினம் நல்லம்மாவின் அன்பு மகனும் சிவலோகநாயகியின் பாசமிகு கணவரும் தங்கேஸ்வரி, மகாதேவன், சந்திரவதனா, வாமதேவி, ஞானதேவன், வாசுதேவன், இந்திராதேவி, காமதேவன் ஆகியோரின் சகோதரரும் சங்கானை N.K.S.சிவப்பிரகாசத்தின் மருமகனும் சிவலோகநாதன், லோகேஸ்வரநாதன், விக்னேஸ்வரநாதன், சாந்தநாயகி, சர்வலோகநாயகி ஆகியோரின் மைத்துனரும் சுபாஜினி, சுபாகரன், சுமதினி (ஜேர்மனி), சுதர்சன் - சுதர்சினி (இங்கிலன்ட்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொட்டிலடி, சங்கானை. (சி-48042) (30-12-49)
தகவல்: குடும்பத்தினர்.

### சின்னத்தம்பி தியாகராசா

(டாக்டர் வேலழகன்)

பருத்தித்துறையை வசிப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி - தியாகராசா (டாக்டர் வேலழகன்) அவர்கள் நேற்று (23.02.2006) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சின்னத்தம்பி - ஞானப்பூங்கோதை தம்பதியரின் அன்பு மகனும் இரகுநாதன் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற செல்வபாக்கியத்தின் அன்புக் கணவரும் கேசவன் (அமெரிக்கா), வாசுகி (கனடா), தேவகி ஆகியோரின் அன்புத் தந்தையும் நளாயினி (அமெரிக்கா), சிவஞானநாதன் (கனடா), இராகவன் ஆகியோரின் அன்பு மாமனாரும் பிருந்தன், கீர்த்தன், துஷன், துஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிரதான வீதி, சிவன்கோயிலடி, பருத்தித்துறை. (சி-48043) (30-12-49)
தகவல்: பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்புமனு நிராகரிப்புக்கான காரணத்தை அறியும் உரிமை ஐ.தே.க. ஆதரவாளர்களுக்கு இல்லையா?

## மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி கேள்வி

கொழும்பு,பெப்.24

கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வழமையாக வாக்களிக் கும் லட்சக் கணக்கான மக்களுக்கு அக்கட்சியின் வேட்பு மனு தமது மாவட்டத்தில் ஏன் நிராகரிக்கப் பட்டது என்பதற்கான காரணத்தைத் தெரிந்து கொள்ளும் உரிமை இல்லையா?

- இவ்வாறு நேற்றுக் கேள்வியெழுப்பினார் மேன்முறையீட்டு நீதியரசர் சிசிர டி ஆப்ரூ. கொழும்பு மாநகரசபைத் தேர்தலுக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து அக்கட்சி தாக்கல் செய்திருந்த வழக்கு விசாரணை நேற்று இடம்பெற்றது. அப்போதே நீதியரசர் சிசிர டி ஆப்ரூ மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார்.

இந்த வழக்கு விசாரணை மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான கே. ஸ்ரீபவன், சிசிர டி ஆப்ரூ ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. தேர்தல் ஆணையாளர் சார்பில் மன்றில் ஆஜராகி கருத்து வெளியிட்ட பிரதி சொலிஸ்ட்டர் ஜெனரல் சி. ஆர்.டி. சில்வா, ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டமைக்கான காரணத்தை வெளியிடவேண்டிய அவசியம் இல்லையென்று சுட்டிக்காட்டினார்.

அப்போதே மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பி, ஐக்கிய தேசியக்கட்சி வாக்காளர்களது அடிப்படை உரிமை குறித்து வினவினார்.

மனுதாரரான ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் மன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா, இயற்கை சட்ட நியதிகளின் கீழ் வேட்புமனு நிராகரிக்கப்பட்டிருந்தால் அதற்கான காரணத்தை பிரதிவாதிகள் காட்டவேண்டுமெனவும், ஆனால், இயற்கை சட்டதிட்டங்களுக்கு முரணாக 2004ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு ஐ.தே.கவின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டிருப்பதாகவும் சுட்டிக் காட்டினார்.

இதனையடுத்து, மேலதிக விசாரணைகளுக்காக வழக்கு இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டது. நேற்றைய தினம் நீதிமன்றில் ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாநகரசபை வேட்பாளர் சிறிசேன குரே, பிரதி மேயர் அசாத் சாலி ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர். (எ-3)

# லஞ்சக் குற்றச்சாட்டில் கிராம அலுவலர் கைது

கொழும்பு,பெப்.24

அரசாங்கக் காணியொன்றில் குடியேறியுள்ள ஒருவருக்கு வருடாந்த அனுமதிப் பத்திரங்கள் இரண்டை வழங்குதற்கு 14 ஆயிரம் ரூபா லஞ்சம் பெற்றமை தொடர்பாக லஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் கிராம அதிகாரி ஒருவரை நேற்று கைதுசெய்துள்ளனர். கெக்கிராவை பிரதேசசபைக்குட்பட்ட கிராம அலுவலர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். மருதங்கடவல பகுதியில் அரச காணியொன்றில் சட்டவிரோதமாகக் குடியேறியுள்ள ஒருவருக்கு வருடாந்த அனுமதிப் பத்திரம் இரண்டை வழங்க இவர் லஞ்சம் பெற்றமையினாலேயே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நெவில் குருகே தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். அவரை மார்ச் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதி வான் உத்தரவிட்டுள்ளார். (க-3)

# மட்டக்களப்பு தேர்தல் களத்தில் 908 பேர் போட்டியில் குதிப்பு

காத்தான்குடி, பெப். 24

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர்களுக்கான விருப்பு இலக்கங்கள் இன்று வியாழக்கிழமை வழங்கப்படவுள்ளதாக மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ரி.கிருஷ்ணானந்தலிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு மாநகரசபை, காத்தான்குடி நகரசபை உட்பட 12 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. 6 அரசியல் கட்சிகள் மற்றும் 34 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 908 வேட்பாளர்கள் போட்டிக் களத்தில் குதித்துள்ளனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, தேசிய காங்கிரஸ், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி என்பன இம் மாவட்டத்தில் போட்டியிடுகின்றன. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடுகின்றது.

இம்மாவட்டத்திலிருந்து 12 உள்ளூராட்சி சபைகளுக்கும் 128 பேர் தெரிவுசெய்யப்படவுள்ளனர். மாவட்டத்தில் காத்தான்குடி நகர சபையிலேயே அதிகமான கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. (க-3)

# சிறுவர் நலனில் கவனம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றச்சாட்டுக்கள் போர் நிறுத்த ஒப்பந்தத்துடன் நேரடித் தொடர்பற்றவையாயினும் கூட, இரண்டு தசாப்தகால யுத்தத்தினாலும் சிறுவர்களின் அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்படும் சூழலினாலும் இந்த விடயம் குறித்து ஒப்பந்த அமுலாக்கல் பற்றிப் பேசும் இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடுவது அவசியமான தேவையாகிறது.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்து நான்கு வருடங்கள் கடந்த நிலையிலும், 20 வருட யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வில் இயல்புநிலை தோன்றவில்லை. அரச படைகளின் குண்டுவீச்சிற்கு இலக்காகி ஆயிரக்கணக்கிலான பிள்ளைகள் தமது பெற்றோரை இழந்து ஏதிலிகளாக்கப்பட்டனர். இந்த அவலநிலையை, குழந்தைகளின் நலன்களில் கரிசனை காட்டும் அரச தூதுக்குழுவினர் அந்தந்த இடங்களுக்கு நேரில் சென்று பார்த்தாலே புரிந்துகொள்ள முடியும்.

அண்மையில் திருகோணமலையில் அரச படைகளால் மிகவும் கொடூரமாகக் கொல்லப்பட்ட ஐந்து மாணவர்கள் பற்றியும் கொடிகாமம் வரணியில் தாய், தந்தையோடு உறங்கிக்கொண்டிருந்த 15 வயதுச் சிறுவன் கதறக்கதற ஸ்ரீலங்காப் படைகளால் இழுத்துச் செல்லப்பட்ட சம்பவமும் பல்கலைக் கழக மாணவர்கள், பேராசிரியர்கள், உபவேந்தர் உட்படப் பலர் மிகமோசமான முறையில் தாக்கப்பட்டமையும் இங்கு விசேடமாகக் குறிப்பிட்டுக் கூறத்தக்கன.

அத்துடன், உங்களுடைய அரசால் கட்டவிழ்த்து விடப்பட்ட இனப்படுகொலைகளாலும், அப்பாவி மக்கள் மீதான தாக்குதல்களாலும், குறிப்பாகப் பாடசாலைகள், ஆலயங்கள், குடியிருப்புகள் மீதான தாக்குதல்களாலும் எமது பல்லாயிரக்கணக்கான சிறுவர்கள் கொல்லப்பட்டமையையும் இவற்றால் பெற்றோர் மற்றும் உறவினரை இழந்த ஆயிரக்கணக்கான சிறுவர்களை எமது அமைப்புப் பொறுப்பேற்றுப் புனர்வாழ்வளித்துப் பராமரித்து வருவதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

தமிழர் தாயகத்தின் இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங்களில் இளம் சிறார்கள் இராணுவ வன்முறைகளுக்கு அஞ்சி அப்பிரதேசங்களிலிருந்து வெளியேறி எமது அமைப்பிடம் தஞ்சம் கோரி வந்தவண்ணமுள்ளனர். அவர்களுக்குத் தஞ்சமும் பாதுகாப்பும் அளிக்க வேண்டிய தேவை ஒரு பொறுப்புள்ள விடுதலை இயக்கம் என்றவகையில் எமக்குண்டு. இத்தேவையை நிறைவேற்றுவதற்காக ஆயிரக்கணக்கான சிறார்களை அவர்களுக்காக அமைக்கப்பட்ட இல்லங்களில் பாதுகாப்பாகத் தங்கவைத்து கல்வி, தேவைப்படும் இடத்தில் தொழில் கல்வி என்பவற்றை எமது அமைப்பு வழங்கிக்கொண்டிருக்கிறது.

இந்த உண்மைகளை நேரில் பார்த்து நிலைமைகளைச் சீர்செய்வதை விடுத்து ஸ்ரீலங்கா அரசு, விடுதலைப் புலிகள் வயது குறைந்தோரைப் படையில் சேர்க்கிறார்கள் என்று தவறான பரப்புரையைச் செய்துவருகிறது.

சிறுவர் நலன் தொடர்பாக நாங்கள் 'யுனிசெப்' அமைப்புடன் ஒரு வேலைத்திட்டத்தை ஒழுங்கமைத்து செயற்படுத்தி வருகிறோம். இதற்கென சமாதானச் செயலகத்தின் அனுசரணையுடன் விசேட செயற்குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

யுனிசெவ்வின் அறிக்கைகளில் எண்ணிக்கை தொடர்பான தவறுகள் இருப்பதை பல தடவைகளில் நாம் சுட்டிக்காட்ட நேர்ந்தது. அத்துடன் வயது குறைந்தோர் என்று இனங்காணப்பட்டவர்கள் காலத்திற்குக் காலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படுவது. இந்த எண்ணிக்கைகளில் பிரதிபலிக்கப்படாமல் இருப்பது குறித்து சுட்டிக்காட்டப்பட்ட பொழுது 'யுனிசெவ்' அதனை ஏற்றுக்கொண்டுள்ளது.

நான்கு வருடங்களாகியும் சமாதானத்தின் பெறுபேறுகள் மக்களைச் சென்றடையாத நிலையில் வறுமை, பெற்றோரின்மை, வேலைவாய்ப்பின்மை சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல முடியாதவை போன்றவை சிறுவர்களைத் தொடர்ந்தும் பாதிக்கும் காரணிகளாகவுள்ளன.

இராணுவ ஆக்கிரமிப்பிற்குட்பட்ட பிரதேசங்களில் பாடசாலைச் சிறுவர்கள் இராணுவ சோதனைக் கெடுபிடிகளுக்குட் பட்டே அன்றாடம் பாடசாலை செல்லும்நிலை இருப்பதும் சுற்றிவளைப்புக்களால் ஏற்படும் பீதியும், சிறுவர்களையும் பல்கலைக்கழக மாணவர்களையும் அப்பிரதேசங்களிலிருந்து வெளியேறி எமது நிர்வாகப் பிரதேசத்தினுள் வருவதற்கு நிர்ப்பந்திக்கின்றன.

வயது குறைந்தோரை அமைப்பில் சேர்ப்பது தொடர்பான குற்றச்சாட்டுகள் கிழக்கு மாகாணத்திலேயே பெருமளவில் இருந்தன. தவறான நடவடிக்கைகளுக்காக எமது அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட கருணாவின் காலத்தில் தலைமைப்பீடத்தின் கொள்கைக்கு மாறாக பலவந்தமாகச் சேர்க்கப்பட்ட 2,000 இற்கு மேலான வயது குறைந்த சிறார்கள் பெற்றோரிடம் சேர்க்கப்பட்டனர்.

இது எமது அமைப்பு சிறுவர் ஆட்சேர்ப்புத் தொடர்பாகக் கடைப்பிடிக்கும் சர்வதேசக் கோட்பாட்டு நியமங்களை மதிப்பதென்ற நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தும் ஓர் அம்சமெனலாம்.

அண்மை நாள்களில் அரசபடைகளுடன் சேர்ந்தியங்கும் கருணா குழுவினர் பல வந்தமாகக் கடத்திச் சென்று ஆயுதப் பயிற்சி கொடுத்த 14, 15, 16 வயதுச் சிறுவர்கள் ஸ்ரீலங்கா இராணுவ முகாம்களில் தமக்குப் பயிற்சியளிக்கப்பட்டதை வெளிப்படுத்தியுள்ளனர்.

போரில் சிறுவர்களைப் பயன்படுத்துவது தொடர்பான சர்வதேச நியமங்களை நாம் மதிக்கும் அதே வேளை, போரினால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்குக் கல்வி, பெற்றோரின் வாழ்வு நிலை உயர்வு, போசாக்கு, சுகாதாரம் போன்றவற்றில் உண்மையான அக்கறையுடன் செயற்படுவது அவசியமேயன்றி, சிறுவர் பிரச்சினையை அரசியலாக்கி விவாதம் செய்வது பொருத்தமற்றது.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் எந்தவொரு சரத்துமே படைக்கு ஆட்சேர்ப்பதைத் தடைசெய்யாத நிலையில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஆணை வரையறைக்குள் இந்த விடயம் பிரச்சினைக்குரியதாகாது. மாறாகச் சிறுவர் தொடர்பான முறைப்பாடு வரும் சந்தர்ப்பங்களில் அதற்கெனப் பணிபுரியும் 'யுனிசெவ்' அமைப்பிடமும் எமது அமைப்பிடமும் சமர்ப்பிப்பதே பொருத்தமானதாகும்.

சிறுவர்கள் தொடர்பான கரிசனை உள்ளவர்கள் வடக்கு - கிழக்கையும் விடுதலைப் புலிகள் அமைப்பையும் தெரிவு செய்து விமர்சனத்திற்கு உள்ளாக்குவதை விடுத்து தெற்கில் மிகப்பாரிய அளவில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கும் அடிமை வேலைகளுக்கும் சிறுவர்கள் பயன்படுத்தப்படுவதையும் கருத்திற்கொண்டு பாரபட்சமற்ற முறையில் விமர்சனம் செய்வதே சிறவர்களுக்கு ஆற்றும் நற்பணியாகும் -. என்றார் சு.ப. தமிழ்ச்செல்வன்.


## உடன் தேவை

பிரபல்யமான அச்சுக்கூடம் ஒன்றிற்கு செம்டா ஓவ்(f)செற் மெசின் இயக்குநர் தேவை.
உடன் தொடர்பு கொள்ளவும்.

**பிரபா ரேடேர்ஸ்**
**144, சிவப்பிரகாசம் வீதி,**
**நாச்சிமார் கோவிலடி,**
**யாழ்ப்பாணம்.**
T.P.: 0777-253017,
0776619442,222 9296.


## மரண அறிவித்தல்கள்

### கந்தையா இரத்தினம்



மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இரத்தினம் அவர்கள் நேற்று (23.02.2006) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் இராசசேகரன் (வர்த்தக முகாமையாளர், நல்லூர் ப.நோ. கூ.சங்கம்), இராசநாயகி ஆகியோரின் அன்புத் தந்தையும் செ.விக்கினேஸ்வரன் (இளைப்பாறிய ஆசிரியர், உரும்பிராய் இந்துக் கல்லூரி), இ.தவமலர் ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மஞ்சவனப்பதி வீதி,**
**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**
(47196)
(30-12-49)
**தகவல்:**
**இ.இராசசேகரன்**
**(மகன்).**

### கந்தன் மாணிக்கன்

மயிலிட்டியை பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட கந்தன் மாணிக்கன் அவர்கள் நேற்று (23.02.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தன்-மரிசை தம்பதியினரின் அன்பு மகனும் செல்லமணியின் பாசமிகு கணவரும் சுப்பிரமணியம், சுரேஸ், சுதர்சன், சுதர்சனராணி, சுதாகர் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2006) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் பூவோடை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சபாபதிப்பிள்ளை வீதி,*
*சுன்னாகம் தெற்கு,*
*சுன்னாகம்.*
(47196)
(30-12-49)
**தகவல்:**
**மா. சுப்பிரமணியம்**
**(மகன்).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் நலனில் கவனம் செலுத்துங்கள் அதை அரசியலாக்கி விவாதிக்காதீர்கள்

## ஜெனீவாவில் அரச தரப்புக்கு தமிழ்ச்செல்வன் சாட்டை

ஜெனீவா,பெப்.24

சிறுவர்கள் விடயத்தில் அரசு அக்கறை காட்டவேண்டுமானால் போரினால் பாதிக்கப்பட்ட அவர்களின் நலன்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டுமேயன்றி அதை அரசியலாக்கி விவாதம் செய்வது பொருத்தமற்றது.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பளார் சு.ப.தமிழ்ச் செல்வன்.

ஜெனீவாப் பேச்சில், சிறுவர்களைப் படைக்குச் சேர்த்தல் என்ற விடயம் குறித்துப் பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

வயது குறைந்த சிறுவர்களை விடுதலைப் புலிகள் தமது அமைப்பில் சேர்த்துக் கொள்வது

தொடர்பாக எழும் (17 ஆம் பக்கம் பார்க்க)

ஜெனீவாப் பேச்[illegible]ரின் பின் [illegible] -புலிகள் [illegible] கையை நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் வெளியிட்டுவைப்பதைப் படத்தில் காணலாம். அரச - புலிகள் பிரதிநிதிகளும் உடனிருக்கின்றனர்.



### புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த எறிகணைத் தாக்குதல் தொடர்பாக யாழ்.மாவட்ட அரசியல்துறையினர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் முறைப்பாடு செய்ததையடுத்து கண்காணிப்புக் குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து பார்வையிட்டனர். (க-3)

### நான்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவாதிக்க வேண்டி யிருந்தது. நீண்ட நேரம் இந்த விடயம் விவா திக்கப்பட்டதால் ஏனைய விடயங்கள் அடுத்த கட்டப் பேச்சுகளில் விவாதிப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது.

- இப்படி அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

பேச்சு முடிவில் இன்று அதிகாலை 2 மணிக்கு அவர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இதைத் தெரிவித்தார்.

பேச்சு மிகவும் இறுக்கமாக நடந்தது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (3)

### பாலசிங்கம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றைப் புரிந்துகொள்ளுங்கள். அவற்றை வாசித்துப் பார்த்த பின்னர் பேச்சு மேசைக்கு வாருங்கள்.'' - என்று தெரிவித்தே பாலசிங்கம் அந்தப் புத்தகங்களை அவர்களுக்கு வழங்கினார்.

அரச தரப்புப் பிரதிநிதிகள் அனைவரும் நூல்களை ஆர்வத்துடன் பெற்றுக்கொண்டனர். நூல்களில் பாலசிங்கம் தம்பதியினரின் கையெழுத்துகளைப் பெற்றுக் கொள்வதற்கும் அவர்கள் தவறவில்லை. (க-3)

### பொலீஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வராதீர்கள் என்றும் கடுப்புடன் தெரிவித்தார்.

''துரையப்பாவைச் சுட்டுக் கொன்றவர்கள் புலிகள்தான் என்று பகிரங்கமாக நாங்கள் அறிக்கைவிட்டு விட்டோம். அதன் பின்னர் ஏன் அந்த விடயத்தில் விசாரணைகளையும் தேடுதல்களையும் நடத்துகின்றீர்கள்? முதலில் வரலாற்றை நன்கு அறிந்து கொண்டு பேச்சுக்கு வாருங்கள். இவ்வாறு சும்மா வந்திருந்து எதையாவது கதைத்துக் கொண்டிருக் காதீர்கள்'' - என்றார் பாலசிங்கம். (க-3)

# அரச படையினர் தவிர்ந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுவிற்ஸர்லாந்தின் சாங்டோ டி பொய்ஸி அரண்மனையில் கடந்த இரு நாள்களாக அரச தரப்புக் குழுவினருக்கும் விடுதலைப் புலிகளின் குழுவினருக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுகள் நேற்றிரவு (சுவிஸ் நேரப்படி மாலை) நிறைவடைந்தன. போர் நிறுத்த உடன்படிக்கையைச் செம்மையாக நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஸ்திரப்படுத்துவது குறித்துக் கலந்துரையாடும் நோக்கத்துடனேயே இந்தப் பேச்சு ஏற்பாடு செய்யப்பட்டது.

கடும் இறுக்க நிலையில் - வாதப் பிரதி வாதங்களுடன் - ஆக்ரோஷத்துடன் பேச்சுகள் இடம்பெற்றன. இராணுவத் துணைப் படை விவகாரத்தில் பெரும் இழுபறி நிலை காணப்பட்டது. அதில் இணக்கத்தை எட்டுவதே பெரும்பாடாக இருந்தது. அரச தரப்பு சட்ட நியாயங்களைக் காட்டி துணைப் படைகளின் ஆயுதக் களைவுக்கு ஒத்துழைக்க மறுத்தமையே இந்த நிலைக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும், சுவிஸ் நேரப்படி நேற்றுமாலை 4 மணிக்கு பேச்சு நிறைவடைந்தது. அதன் பின்னர் கூட்டறிக்கை ஒன்று வெளியிடப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அதனை வெளியிடுவதில் மீண்டும் பெரும் சிக்கல்கள் தோன்றின. மிக நீண்ட நேரம் இந்த நிலை நீடித்தது.

மாலை 5 மணியளவில் செய்தியாளர் மாநாடு கூட்டப்பட்டு அதில் கூட்டறிக்கை வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதும் இரவு 7.15 மணி வரையும் அறிக்கை வெளியிடப்படவில்லை.

அறிக்கையில் இடம்பெறும் வாசகங்கள் குறித்து இரு தரப்புப் பிரதிநிதிகளும் இறுக்கமான போக்கைக் கடைப்பிடித்தனர் என்பதனால் இணக்கம் ஒன்றை எட்டுவது பெரும் சிக்கலானதாக இருந்தது. எனினும் இறுதியில் ஒருவாறு கூட்டறிக்கை வெளியிடப்பட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கியமான விடயங்கள் வருமாறு:-

* தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி அவர்களது வாழ்வுக்கு உத்தரவாதம் வழங்குவது பற்றி பேச்சுகளில் ஈடுபட்ட இரு தரப்புகளும் ஆராய்ந்தன.
* போர் நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையை செம்மையாக - முழு அளவில் - நடைமுறைப்படுத்துவதற்கான தமது உறுதிப்பாட்டை அரசும் விடுதலைப் புலிகளும் மீண்டும் தெரிவித்துள்ளனர்.
* பயமுறுத்தல்கள், வன்முறைகள், கடத்தல்கள், கொலைகள் என்பன இடம்பெறாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைளை எடுப்பதற்கு இருதரப்பினரும் உறுதியளிக்கின்றனர்.
* பொலீஸ் மற்றும் பாதுகாப்பு படையினருக்கு எதிராக எந்தவொரு வன்முறையும் நடக்காது இருப்பதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் புலிகள் உறுதிப்படுத்துவர்.
* போர் நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி, நாட்டின் பாதுகாப்பு படையினர் தவிர்ந்த எந்த ஒரு தனிநபரோ குழுவோ ஆயுதம் தாங்காமல் இருப்பதையும் இராணுவ நடவடிக்கையில் ஈடுபடாமல் இருப்பதையும் அரசு உறுதிப்படுத்தும்.
* சிறுவர்களின் நலன்களைப் பேணுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசு - புலிகள் இருதரப்பினரும் உறுதியளித்துள்ளனர்.
* அடுத்த சுற்றுப் பேச்சுகளை ஜெனீவாவில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 19 ஆம்திகதி முதல் மூன்று தினங்களில் நடத்துவதற்கும் இரு தரப்பினரும் உறுதியளித்தனர்.
* அடுத்த சுற்றுப் பேச்சுகளின் போது ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் பற்றிய விரிவான அறிக்கை ஒன்றை இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு சமர்ப்பிக்கும்.

- இவ்வாறு அந்தக் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இரு தரப்புப் பிரதிநிதிகளையும் வைத்துக்கொண்டு இந்த அறிக்கையை நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் வாசித்தார். அதன் பின்னர் சில கேள்விகளுக்குப் பதிலளித்த அவர் எழுந்து சென்று விட்டார்.

இரு மாதங்களின் பின்னர் அடுத்த சுற்றுப் பேச்சுகள் நடத்தப்பட இருப்பது ஏன் என்ற கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம், ''மார்ச் மாதத்தில் இலங்கையில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற இருக்கின்றது. அதன் பின்னர் மேற்கு நாடுகளில் ஈஸ்டர் கொண்டாட்டங்கள் இருக்கின்றன. அதற்குப் பின்னர் தமிழ், சிங்களப் புத்தாண்டு வருகின்றது. எனவேதான் பேச்சுகளை ஏப்ரலில் நடத்த முடிவு செய்யப்பட்டது'' என்றார்.

பேச்சின் முடிவில் கூட்டு செய்தியாளர் மாநாடு ஒன்று நடத்தப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் இறுதியில் இரு தரப்பினரும் தனித்தனியேயே செய்தியாளர் மாநாட்டை நடத்தினர். முதலில் அரச தரப்பினரின் செய்தியாளர் மாநாடும் பின்னர் புலிகளின் செய்தியாளர் மாநாடும் இடம்பெற்றன.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தமிழ் ஊடக வியலாளருக்கான செய்தியாளர் மாநாட்டை இன்று நடத்துகிறார். அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இன்று அதிகாலை செய்தியாளர் மாநாட்டை நடத்தினார்.


தாமதிக்காதீர்கள்.....!!!
aat யின் ஜூன் பரீட்சைக்கான பதிவுகள் 28.02.2006 வரை நீடிக்கப்பட்டுள்ளது
புதிய பிரிவுகள் ஆரம்பம்
aat Foundation and Intermediate
Chartered Accountancy
Foundation
விரிவுரைகள் அனைத்தும் விரைவில் ஆரம்பமாக உள்ளன.
26.02.2006 இற்கு முன் உங்கள் பதிவுகளைஉறுதிப்படுத்துங்கள்
Office Hours:- Mon.,Wed.,Fri. 9.00 a.m.-1.00 p.m Sat.and Sun 8.30 a.m.-11.30
IPAS 199,Main Street, (Primier Bakery Building) Jaffna. Tel.: 0777 563294, 0777 270452

UNIT
புதிய P4 கணனிகள்
40,000/- முதல்
Monitor உடன்
தாயக மின்சார நிலைமைகளுக்கேற்ப வடிவமைக்கப்பட்டவை
சகல கணனி சார் உதிரிகளும் சலுகை விலையில்
347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.
T.P: 021- 4590720 / 0773134737

அறிமுகமாகிறது!
உள்நாடு, வெளிநாடுகளுக்கான கடிதங்கள், பொதிகள் நீங்கள் குறிப்பிடும் விலாசங்களில் துரிதகதியில் ஒப்படைக்கப்படும்.
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 7835
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (ப.நோ.கூ.சங்கம் முன்பாக) தொ.பே. 222 7310

EXPOAIR எக்ஸ்போ எயார்
your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.02.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாணவர்கள் பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமான தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும்

வெளியீடு 02

# புலமைப்பரிசில் பரீட்சை

## மாதிரி வினாப்பத்திரம்

45 நிமிடங்கள்

P. அம்பிகைபாகன் - கொழும்பு.

கீழுள்ள எண்களை அவதானியுங்கள்

| 2 | 3 | 6 | 7 | 10 | 11 | 14 | 15 | 18 |
|---|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | F | G | H | I |

1. மூன்றால் பிரிபடக்கூடிய எண்களைக் கொண்ட விடையின் கீழ்க் கீறிடுக
   1. ABCD  2. BCDF  3. BCIE  4. BCHI

2. ஈரிலக்கங்களைக் கொண்ட விடையின் கீழ்க் கீறிடுக
   1. A,C,E,G  2. E,F,G,H  3. C,D,H,I  4. A,E,I,C


3. எழுத்துக்களால் குறிக்கப்படும் முதலிரு எண்களைக் கூட்டி மூன்றாம் எண்ணினால் பெருக்கினால் நான்காம் எண் விடையாக வரும். அச்செயற்பாட்டுக்கு பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.
   1. ABCE  2. BCAI  3. AFGB  4. CBDH

**வினாக்களுக்குச் சரியான விடையைக் கண்டுபிடித்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

4. மனித வாழ்க்கையில் ஒருமுறை மட்டும் நிகழாதது
   1. மரணம்  2. நோய்  3. பிறப்பு ..........................

5. கடலில் அதிகமாகக் காணப்படுவது
   1. மீன்கள்  2. நீர்  3. கப்பல்கள் ..........................

6. பின்வரும் எண்கோலத்தில் வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.




1) 2  2) 3  3) 6  4) 5

**பின்வரும் ஒவ்வொரு புதிரிலும் மறைந்துள்ள சொல்லைக் கண்டுபிடித்து அதனை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

7. இது நான்கு எழுத்துக்களைக் கொண்ட சொல்லாகும்.
   இதன் முதல் எழுத்து 'முதலில்' உள்ள முதல் எழுத்தாகும்.
   இரண்டாம் எழுத்து 'கடைசி' எனும் சொல்லிலுள்ள முதல் எழுத்தாகும்.
   மூன்றாம் எழுத்து 'வணக்கம்' எனும் சொல்லிலுள்ள முதல் எழுத்தாகும்.
   நான்காம் எழுத்து 'வியாபாரி' எனும் சொல்லிலுள்ள இறுதி எழுத்தாகும்.
   இச்சொல் சரியாக எழுதினால் கடிதம் உரியவரிடம் சென்றடையும்.
   ..........................................

8. உருவை மிக நன்கு விபரிக்கும் விடையைத் தெரிவு செய்க.



1) 1. மிருகம்  2. காவல்  3. பறக்கும்
2) 1. காவல்  2. குரைக்கும்  3. மிருகம்
3) 1. மிருகம்  2. உறுமும்  3. காவல்

9. கீழுள்ள வினாவில் முதலில் தரப்பட்டுள்ள கூற்று பிழையானது ஆகும். இக்கூற்று ஏன் பிழையானது என்பதைச் சரியாகக் குறிப்பிடும் விடையின் கீழ்க் கீறிடுக.
   கணவரிடம் மனைவி கூறினாள் "உங்கள் மகளிடம் கேளுங்கள் அவளின் தாயா ரின் பெயர் என்ன?" என்று கேட்கும்படி
   1. மகள் தாயின் பெயரைச் சொல்லக் கூடாது
   2. தாய் தனது பெயரைக் கேட்கக் கூடாது
   3. கணவரிடம் மனைவி கேள்வி கேட்கக் கூடாது

10. 1 kg 400g பருப்பு ரூபா 56.00 ஆயின், 2 kg 400 g பருப்பின் விலை எவ்வளவு?
    1. ரூபா 86.00  2. ரூபா 96.00  3. ரூபா 116.00

11. 2kg 250 g கடலை ரூபா 135.00 ஆயின் 3 Kg 750 g கடலையின் விலை எவ்வளவு?
    1. ரூபா 195.00  2. ரூபா 165.00  3. ரூபா 225.00

கொழும்பிலிருந்து சிகிரியா வரை சென்ற பேரூந்து பற்றிய பயண தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

☹ காலையில் கொழும்பிலிருந்து புறப்பட்ட பேரூந்து 1 மணி 15 நிமிடங்கள் பயணம் செய்து உணவுத் தரிப்பிடத்தை அடைந்தது.
☹ உணவுத் தரிப்பிடத்தில் 25 நிமிடங்கள் செலவாகியது.
☹ உணவுத் தரிப்பிடத்திலிருந்து சரியாக காலை 10 மணிக்குப் புறப்பட்ட பேரூந்து 11.15 இற்கு சிகிரியாவை அடைந்தது.

12. இதன்படி கேட்கப்படும் கேள்விகளுக்குரிய விடைகளைத் தெரிவு செய்க.
    கொழும்பிலிருந்து புறப்பட்ட நேரம் யாது?
    1. மு.ப. 8.00  2. மு.ப. 8.10  3. மு.ப. 8.20

13. கொழும்பிலிருந்து சிகிரியா சென்றடைவதற்குச் செலவான மொத்த நேரம் எவ்வளவு?
    1. 2மணி 55நிமிடம்  2. 2மணி 45 நிமிடம்  3. 3மணி 15நிமிடம்

14. கமலா 10 இற்கு உட்பட்ட ஒரு எண்ணை நினைத்தாள். அதனுடன் 6 ஐக்கூட்டி மூன்றால் பெருக்கி இரண்டால் பிரித்து ஒன்றைக் கழித்தபின் மிகுதி 14 ஆகியது. கமலா நினைத்த எண் எது?
    1. 4  2. 6  3. 8

15. 0.25 ஐ 0.5 ஆல், பெருக்கினால் கிடைக்கும் விடை எது?
    1. 1.25  2. 12.5  3. 0.125

ஒரு குடும்ப உறவுமுறைகளைக் கவனமாக வாசிக்கவும்.

| | |
|---|---|
| A யின் தாய் B | B யின் மகள் C |
| C யின் கணவர் D | D யின் பிள்ளைகள் E,F |
| G, H இன் தந்தை A | |

16. இவர்களில் வயது கூடியவர் யார்?
    1. A  2. B.  3. D


17. A க்கு D என்ன உறவு முறை?
    1. சகோதரர்  2. மைத்துனர்  3. தந்தை


18. G, F உம் பெண்களாயின், இக்குடும்பத்தில் உள்ள ஆண்களின் எண்ணிக்கை எவ்வளவு?
    1. 4  2. 5  3. 6

முதலாவதாகத் தரப்பட்டுள்ள படத்துடன் கருத்து நிறைந்த வகையில் தொடர்பு கொண்டு இருக்கும் சொல்லைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை மட்டும் புள்ளிக்கோட்டில் எழுதுக.

19. 
    1. மீன்  2. சந்தை
    3. இறக்கை  4. சிறுவர் (......................)

20. 
    1. பாடசாலை  2. ஆசனம்
    3. பயணம்  4. சிரிப்பு (......................)

21. 
    1. நீர்  2. நெருப்பு
    3. காற்று  4. பனி (......................)

22. 
    1. பயணம்  2. பாதுகாப்பு
    3. பாதணி  4. உறை (......................)

கீழே மூன்று வாக்கியங்கள் உள்ளன. அதில் ஒவ்வொரு சொல்லையும் ஒரு குறியீடும் ஒரு ஆங்கில எழுத்தும் குறிக்கின்றது. வாக்கியத்தில் சொற்கள் ஒழுங் காக இருப்பது போல் குறியீடோ அல்லது எழுத்துக்களோ ஒழுங்காக அமையவில்லை.


| | | | |
|---|---|---|---|
| I □ அம்மா | N ○ அப்பம் | J ◇ தந்தாள் | |
| H ▣ அம்மா | I ◇ சுவையாகச் | N ○ சுட்டுத் | L ◉ தந்தாள் |
| M ○ அக்கா | I * சம்பல் | K ◈ தந்தாள் | |

23. தந்தாள் எனும் சொல்லைக் குறிக்கும் குறியீடும் எழுத்தும் எவை?
    1. ○ I  2. ◇ I  3. □ I

24. அம்மா எனும் சொல்லைக் குறிக்கும் குறியீடும் எழுத்தும் எவை?
    1. □ N  2. ◇ N  3. ◇ J

25. அப்பம் எனும் சொல்லைக் குறிக்கும் குறியீடும் எழுத்தும் எவை?
    1. □ I  2. ○ N  3. □ J

26. கீழே ப்படும் அரச இலச்சனையின் இலக்கங்கள் இடப்பட்ட பகுதிகளின் விளக்கதை புள்ளிக்கோட்டில் எழுதுக.




1......................................................
2......................................................
3......................................................
4......................................................
5......................................................
6......................................................
7......................................................

**சரியான விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

27. பிற்பகல் 3.00 மணியை டிஜிட்டல் நேரத்தில் எழுதுக.
    ..........................................

28. ரூபா 2.75 உடன் 325 சதங்களைக்கூட்டினால் விடையாக வரும் மொத்தச் சதங்களின் எண்ணிக்கை எவ்வளவு?
    ..........................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. 130 நிமிடங்களுடன் 2 மணி 10 நிமிடங்களைக் கூட்டினால் விடையாக வரும் மொத்த நிமிடங்கள் எவ்வளவு? ........................................

30. ஒரு கோயில் திருவிழாவுக்காக கமலாவின் தோட்டத்தில் 20 தேங்காய்கள் பிடுங்கப்பட்டன. விமலாவின் தோட்டத்தில் கமலாவின் தோட்டத்தில் பிடுங்கப்பட்ட தேங்காய்களை விடக் குறைவான எண்ணிக்கைத் தேங்காய்களே பிடுங்கப்பட்டன ராதிகாவின் தோட்டத்தில் 18 தேங்காய்கள் பிடுங்கப்பட்டன. கமலா, விமலா, ராதிகா மூவரினதும் தோட்டங்களில் பிடுங்கப்பட்ட தேங்காய்களில் ராதிகாவின் தோட்டத்தில் பிடுங்கியதே மிகக் குறைவானது ஆகும். ஆகவே மூவரினது தோட்டங்களிலும் பிடுங்கப்பட்ட மொத்தத் தேங்காய்களின் எண்ணிக்கை எவ்வளவு?
........................................

**கீழே தரப்படும் பாடலை வாசித்த பின் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.**

மரம் ஒன்றை நாட்டுவீராயின்
நாடு அழகு பெறும்
மரங்களின் நிழல் குளிர்மை தரும்
மலர்கள் எம்மை விழிக்கச் செய்யும்
இனிய பழங்கள் எம்பசி தீர்க்கும்

31. மரம் ஒன்றை நடுவதானால் நாம் நன்மை பெறாத விடயமடங்கிய விடை எது?
1. நாடு அழகாகும். மரநிழல் குளிர்ச்சி தரும்.
2. பழங்கள் பசி தீர்க்கும். மண் வளமடையும்.
3. பூ மலரும், பூக்கள் கண்களைக் கூசச் செய்யும்.

32. மரங்களில் கீழ் நிழல் உண்டாவதற்கு உரிய காரணத்தை விளக்கும் விடை எது?
1. மரம் காற்றில் ஆடுவதனால் நிழல் உண்டாகின்றது.
2. மரத்தின் ஊடாக ஒளி புகாமையால் நிழல் உண்டாகின்றது.
3. மரவேர் நீரை உறிஞ்சி இலைகளுக்கு அனுப்புவதனால் நிழல் உண்டாகின்றது.

33. தாவரங்கள் உணவு தயாரிப்பதற்கு தேவையான காரணிகள் எவை?
1. வெப்பம், நீர், குளிர், பச்சையம்
2. பச்சையம், சூரியவொளி, நீர், கரற்று
3. காற்று, மழை, புயல், பனி

34. பின்வரும் சொற்களுக்கான ஆங்கிலப்பதத்தை எழுதுக.
1. மரம் : ........................ 2. பழம் : ........................
3. மலர் : ........................ 4. அழகு : ........................
5. பசி : ........................ 6. என் : ........................


35. பின்வரும் சொற்களுக்குரிய சிங்களச் சொற்களில் கருத்தைத் தமிழில் எழுதுக.
1. மம : ........................ 2. பாசல : ........................
3. கெதர : ........................ 4. அம்மே : ........................
5. தாத்தா : ........................ 6. அய்யா : ........................

**வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய விடையைத் தெரிவுசெய்து அதற்கு உரிய இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

36. ஒரு வகுப்பில் 36 மாணவர்கள் இருக்கின்றார்கள். அவர்களை வருடாந்த விளையாட்டுப் போட்டிக்கு வகுப்பாசிரியர் மூன்று இல்லங்களுக்கு மூன்று குழுக்களாகப் பிரித்தார். ஆயினும் வகுப்பாசிரியர் தான் தலைமை தாங்கும் இல்லத்திற்கு அதிக மாணவர்களையும் மற்றைய இரண்டு இல்லங்களுக்கும் சமனாக மாணவாகளைப் பிரித்தார். அவ்விரண்டு இல்ல மாணவர்களையும் ஒன்று சேர்த்தால், ஆசிரியரின இல்ல மாணவர்களின் எண்ணிக்கைக்குச் சமனாகும். எனவே ஆசிரியரின் குழுவிலுள்ள மாணவர்கள் எண்ணிக்கை யாது?
1. 9  2. 12  3. 18  4. 16  (........................)

37. 30 நாட்களைக் கொண்ட ஒரு மாதத்தின் முதலாம் திகதி திங்கட்கிழமையாயின், அம்மாதத்தின் இறுதி நாள் என்ன கிழமை?
1. செவ்வாய்  2. புதன்  3. வியாழன்  4. வெள்ளி
(........................)

38. கீழுள்ள உரு பலகையைப் பயன்படுத்தி கதிரை, மேசை செய்யலாம் என்பதை குறிக்கின்றது.




இங்கு A,B என்பது குறிப்பது.
1. பலகையால் செய்த கதிரை மேசையை
2. பலகையால் செய்யாத கதிரை மேசையை
3. பலகையால் செய்த கட்டில் தொட்டிலை
4. பலகையால் செய்யாத கட்டில் தொட்டிலை
(........................)

39. வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்க.

(1). கள்வன் – திருட்டு எனின், குரு – ........................
1. காணிக்கை  2. உபதேசம்  3. சத்தியம்  4. தர்மம்

(2). லட்டு – இனிப்பு எனின் மிளகாய் – ........................
1. தானியம்  2. உறைப்பு  3. சிவப்பு  4. செடி

(3). சந்தோஷம் – சிரிப்பு எனின் ........................ – அழுகை
1. கவலை  2. நடிப்பு  3. ஆனந்தம்  4. முதலை

**வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழே கோடிடுக.**

40. இந்த நான்கு படங்களிலும் உள்ள விலங்குகளிலிருந்து [illegible] படங்களுக்கு எதிரே தரப்பட்டுள்ளன. அதில் ஒன்று பொருத்தமற்றது. அது எது


காவல்
1



பயணம்
2


யுத்தம்
3


பால்
4

41. இங்குள்ள விலங்குகளின் தொனி விலங்குகளுக்கு எதிரே தரப்பட்டுள்ள அதில் ஒன்று தவறானது.
அது எது?


ஊளையிடும்
1


கத்தும்
2


கத்தும்
3


பிளிறும்
4

## *விடைக் குறிப்புகள்*

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

வெளியீடு 01

***வெளியீடு 1 இற்குரிய விடைகள் இங்கு பிரசுரமாகியிருக்கின்றன.***

| | | | |
|---|---|---|---|
| 1.3 | 2.1 | 3.சகுனம் | 4.சமாதானம் |
| 5.1 | 6.2 | 7.17 | 8.7 |
| 9.3 | 10.2 | 11.3 | 12.4 |
| 13.2 | 14.2 | 15.2 | 16.1 |
| 17.3 | 18.3 | 19.3 | 20.1 |
| 21.3 | 22.1 | 23.(3),(4),(2),(5),(1) | |
| 24.1 | 25.1 | 26.3 | 27.2 |
| 28.3 | 29.1 | 30.3 | 31.3 |
| 32.2 | 33.2 | 34.3 | 35.1 |
| 36.2 | 37.3 | 38.2 | 39.2 |
| 40.2 | | | |

## *விடைக் குறிப்புகள்*

## உயிரியல் – I

வெளியீடு 01

| | | | | |
|---|---|---|---|---|
| 1. 4 | 11. 3 | 21. 4 | 31. 1 | 41. 2 |
| 2. 4 | 12. 4 | 22. 5 | 32. 1 | 42. 1 |
| 3. 3 | 13. 4 | 23. 4 | 33. 3 | 43. 4 |
| 4. 4 | 14. 1 | 24. 1 | 34. 2 | 44. 3 |
| 5. 5 | 15. 2 | 25. 1 | 35. 2 | 45. 5 |
| 6. 3 | 16. 1 | 26. 4 | 36. 3 | 46. 2 |
| 7. 1 | 17. 4 | 27. 1 | 37. 2 | 47. 4 |
| 8. 2 | 18. 5 | 28. 1 | 38. 3 | 48. 5 |
| 9. 2 | 19. 4 | 29. 4 | 39. 5 | 49. 1 |
| 10. 1 | 20. 4 | 30. 5 | 40. 4 | 50. 2 |

## அன்பு மாணவர்களே!

கல்விச்சுடர் தொடர்பான கருத்துக்களும் அபிப்பிராயங்களும் உங்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. உங்கள் கருத்துக்களை கீழ்வரும் முகவரிக்கு எழுதி அனுப்பவும்.

**கல்விச் சுடர்,**
361, கஸ்தூரியார் வீதி,
உதயன் பணிமனை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org